படைப்பு

ஊற்று-4 | நதி-7 | நவம்பர்-2021 | திங்களிதழ்
ISSN : 2582-4015

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com




நான்
எனது வாழ்வை
என்
முழு அறிவுக்கான
செயல்பாட்டுக்
களமாகப்
பார்க்கிறேன்..

படைப்பாளர்
அஜயன் பாலாவுடனான
நேர்காணல்



படைப்பு
# தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-4 | நதி-7 | நவம்பர் 2021

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர் :
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர் :
**ஆசியாதாரா**

நிர்வாகக் குழு :
**சகா(சலீம் கான்)**
**இப்ராஹிம் ஷரீப்**
**ஜெ. ராஜா ஜெயகரன்**

தலைமை நிருபர் :
**வலங்கைமான் நூர்தீன்**

நிருபர்கள் குழு :
**முனைவர் கோ.நித்தியா**
**க.சோ.திருமாவளவன்**
**ஸ்டெல்லா தமிழரசி**
**கலிங்கப்பட்டி க.கருப்பசாமி**

முதன்மை வடிவமைப்பாளர் :
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு :
**ப.முகம்மது புலவர் மீரான்**

ஓவியக் கலைஞர்கள் :
**அழ.ரஜினிகாந்தன்**
**அன்பழகன்**

படைப்புகள் மற்றும் கருத்துக்களை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி :
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்
கடலூர், தமிழ்நாடு - 607002.
admin@padaippu.com

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...


- **தலையங்கம்** -பக். 04
- **படைப்பு இலக்கிய விருதுகள் 2021** -பக். 05
- **"நான் எனது வாழ்வை என் முழு அறிவுக்கான செயல்பாட்டுக் களமாகப் பார்க்கிறேன்.."**
  - படைப்பாளர் அஜயன் பாலாவுடனான நேர்காணல் -பக். 10
- **அறியாமை என்னும் ஆயுதம்**
  - கவிஜி -பக். 22
- **புரிபடும் தொல்லியல்..**
  - ஆதில்அம்மார் -பக். 26
- **பாஷோ என் பக்கத்து வீட்டுக்காரர்**
  - பிருந்தா சாரதி -பக். 27
- **தேநீர் சாலை**
  - கரிகாலன் -பக். 34
- **மனநிலைக் குறிப்புகள் 14**
  - ஆதிரன் -பக். 37
- **"வாசிப்பினால்தான் எல்லாவற்றுக்கும் தீர்வுகள் கிடைக்கும்.."**
  - சந்திப்பு : புதுக்கோட்டை முத்துப்பாண்டி -பக். 42
- **இயற்கை தந்த முதல் இசைக்கருவி**
  - கோ.லீலா -பக். 47
- **பெண் பேசும் கதைகள்**
  - காயத்ரி -பக். 51
- **கவிதைக்குள் கலந்திருக்கும் கதை**
  - மு.முருகேஷ் -பக். 52
- **கற்பதுவே.. கேட்பதுவே..!**
  - மௌனன் யாத்ரிகா -பக். 60

## சிறுகதைகள்


- **பொக்கிசம்**
  - முத்துவிஜயன் -பக். 30
- **உருகுதே**
  - ஜேவிடன் -பக். 56


## கவிதைகள்


- **வசந்தன் சேலம்** -பக். 21
- **த. ரவீந்திரன்** -பக். 33
- **பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள் - 15**
  - ஜின்னா அஸ்மி -பக். 41
- **போஸ் பிரபு** -பக். 44
- **தீபிகா நடராஜன்** -பக். 58
- **உஸ்மான்** -பக். 63
- **காசாவயல் கண்ணன்** -பக். 63
- **காயத்ரி ராஜசேகர்** -பக். 63

# தலையங்கம்

**வணக்கம்.**

வணக்கம். படைப்பு 'தகவு' நாற்பத்திமூன்றாம் இதழ் உங்கள் கண்முன் பரந்து விரிந்திருக்கிறது.

தமிழ் இலக்கியப் பரப்பின் மிக முக்கியத் தரப்படுத்தமாக நாம் பெருமிதம் கொள்வது சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்ததைத்தான். சங்கங்கள் தரமிக்க பனுவல் உருவாக்கத்திற்கு உறுதுணையாய் நின்றன. சக அறிவாளர் முன்னிலையில் அரங்கேற்றப்படுதல் என்பது விவாதங்களை எழுப்பிப் படைப்பினைச் செதுக்கித்தரும். அறிவில் நிரம்பியோர் குற்றங்களை அனுமதிக்கவில்லை. 'நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே' என்ற கூற்று ஒரு சார்பு இல்லாத் தன்மையை உணர்த்துவதால் அச்சங்கங்கள் நமக்கு உவப்பானதாகவே இருக்கின்றன.

ஒரு சமூகத்தில் பலவாறாக வேர்விடும் இலக்கியங்கள் குறிப்பிட்ட அளவுகோல்களைக் கொண்டு தரம் பிரிக்கப்படுகின்றன. அனல்வாதம், புனல்வாத நிகழ்வுகளெல்லாம் சமூகம் சார்ந்த அளவுகோல்கள் இருந்ததற்கான சான்றுகள். ஔவையார் 'விரகர் இருவர் புகழ்ந்திட வேண்டும், விரல் நிறைய மோதிரங்கள் வேண்டும், அரையதனில் பஞ்சேனும் பட்டேனும் வேண்டும், அவர் கவிதை நஞ்சேனும் வேம்பேனும் நன்று' என்று கொதித்துப் பாடுவதெல்லாம் அச்சமூகச் சூழலோடு எண்ணிப் பார்க்க வேண்டிய ஒன்று. ஆழ்ந்து பார்த்தால் நஞ்சுகள் அமிழ்தாகலும் அமிழ்துகள் நஞ்சாதலும் சமூக விமர்சனங்களால்தான் முன்னெடுக்கப்படுகின்றன.

செவ்வியல் முதல் பின்நவீனத்துவம் வரை கற்ற விமர்சகர்களால் மட்டும் படைப்புகள் நிலைநிறுத்தப்படுவதில்லை. எளிய வாசகனே எழுத்தினைப் படைப்பாகத் தகுதிப்படுத்துவதில் முதன்மையாகத் திகழ்கிறான். ஆனால் அவ்வெளிய வாசகனின் முக்கியத் தகுதியாகச் சார்பற்ற நிலை இருக்க வேண்டுமே..

சார்பின்றி மனித மனத்தை எதிர்பார்க்க முடியாதுதான். ஊற்றெடுத்துப் பாயத் தொடங்கிவிட்டாலே ஆற்றின் போக்கு மண் சார்ந்ததுதானே. ஆனால் நியாயம் தவறிய சார்புகள் படைப்புக்கான அணுகுமுறையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திவிடுகின்றன. ஒரு படைப்பின் அடிநாதம் சமூக அக்கறையாக உள்ள நிலையில் அதன் மீதான விவாதங்கள் அந்த அக்கறையை அடிநாதமாகக் கொண்டு எழ வேண்டும். வாசித்தவுடனேயே விமர்சகர்களாகிவிடுவோர் தம் சார்பைத்தான் அளவுகோலாக்குகின்றனர். விவாதச் சூழல்தான் பன்முகத் தன்மையை நிலைநிறுத்தும் எனினும் படைப்புச் சுதந்திரமும் கருத்துச் சுதந்திரமும் இணைந்து பயணித்தல்தான் தரமான சூழலுக்கான காரணியாக இருக்கமுடியும்.

இணையவழியில் படைப்பை முன்னிறுத்துவதுகூட சங்கப் பலகையில் ஏற்றுவது போலத்தான் போலிருக்கிறது. விவாதிப்போம்.. வளர்வோம்.

கொண்டாட்டமான 'படைப்பு இலக்கிய விருதுகள்' இவ்இதழில் அறிவிக்கப்பட்டுள்ளன.

எழுத்தாளர் அஜயன் பாலாவின் நேர்காணல் இவ்விதழில் வெளியாகியுள்ளது.

கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், தொடர்கள் என உள்ள அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.

நன்றி.

– ஆசிரியர்




# படைப்பு இலக்கிய விருதுகள் 2021

உலகெங்கிலுமுள்ள தமிழ்ப் படைப்பாளர்களை ஒன்றிணைத்து உன்னதப் பணியாற்றும் படைப்புக் குழுமம் இலக்கிய உலகில் தனது தனி முத்திரையைப் பதிக்கும்வண்ணம் ஆண்டுதோறும் 'படைப்பு இலக்கிய விருதுகள்' வழங்கிவருகிறது. தரமான தேர்ந்தெடுத்தலால் படைப்பாளர்களின் பெரும்வரவேற்பைப் பெற்றுள்ளன, இவ்விருதுகள். 2020ஆம் ஆண்டு வெளிவந்த சிறந்த நூல்களுக்கான 'படைப்பு இலக்கிய விருதுகள் 2021' மகிழ்ச்சியுடன் இங்கு அறிவிக்கப்படுகின்றன.

## பிரிவு : கவிதை




**விருது பெற்ற நூல் : உயர்திணைப் பறவை**

படைப்பாளர் : கதிர்பாரதி

வெளியீடு : இன்சொல், சென்னை.

கதிர்பாரதியின் கவிதைகள் நரகத்தில் இருந்து சொற்கள் எடுத்து, சொர்க்கத்தின் நறுமணம் தடவி நம்முன் நடனமாடிச் சிரிக்கின்றன. எருக்கம்விளாரால் விளாசிய வலி மீறி சிரிக்கும் அம்மாவிடம் சுருட்டைக் கொடுத்துப் புகைக்கச் சொல்கிற இவனது கருணை முன்பு, மண்டியிட்டுக் கண்கள் மூடுகிறேன். கதிர்பாரதி கவிதையின் முதல் வரி எழுதுகிறான், பிறகு அதனோடு என்னை ஒப்புக்கொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை.. உறுதியாகச் சொல்வேன்.. தமிழின் முக்கியமான பல கவிதைகளை இந்தத் தொகுப்பில் கதிர்பாரதி எழுதியிருக்கிறான். ஆம் நண்பர்களே அதற்கு நானே சாட்சி.

– பாக்கியம் சங்கர்.

## பிரிவு : வட்டார வழக்கு - கவிதை / புதினம் / சிறுகதை / கட்டுரை




**விருது பெற்ற நூல் : தட்டான்குழி**

படைப்பாளர் : ஆண்டன் பெனி

வெளியீடு : தமிழ் அலை, சென்னை.

ஒழுங்கற்ற அமைப்பாலும் பாசாங்கற்ற செயல்களாலும் பேரழகைத் தன்னுள் அடைகாக்கும் கிராமியம்தான் அகமும் புறமுமான நமது அசலான வாழ்க்கை. வணிகமயமான சூழலில் பெருநிறுவனங்களால் கிராமங்கள் சூறையாடப்படும் நிலையில் அந்த எளிய வாழ்வின் எச்சங்களை ஒப்பனையற்ற சொற்களால் கரிசல் மக்களின் மொழியில் கவிதைகளாக்கி ஆவணப்படுத்தியிருக்கிறார் ஆண்டன் பெனி.

– இசாக்.

## பிரிவு : நாவல்




**விருது பெற்ற நூல் : 1967 தாளடி**

படைப்பாளர் : சீனிவாசன் நடராஜன்

வெளியீடு : தேநீர் பதிப்பகம், ஜோலார்பேட்டை.

இந்தத் தாளடியும் ஒரு புனைவுதான். இன்னும் சொல்லப்போனால் மரபிலாப் பொய்மொழி.. சொற்சித்திரங்களை வரையும் கவிதை மொழி, அரசியல் உரை, திருமுறையிலிருந்து மேற்கோள், மக்களின் பேச்சு மொழி, கதாசிரியனின் விவரிப்பு மொழி எனப் பல இழைகள் இந்தப் புதினத்தில் விரவிக் கிடக்கின்றன.. சீனிவாசன் நடராஜனின் இந்த நூல் ஒரு அரிய முன்னெடுப்பு. வடிவத்தில் ஒரு புதிய வகைப்பாட்டை வெற்றிகரமாக முயற்சித்துப் பார்த்திருக்கிறார். ஒரு வசீகரமான கதை மொழி வாய்த்திருக்கிறது. உறுத்தாத அங்கதம் ஆங்காங்கு இழையோடுகிறது.

– மாலன்

## பிரிவு : குறுநாவல்




**விருது பெற்ற நூல் : ராஜ வனம்**

படைப்பாளர் : ராம் தங்கம்

வெளியீடு : வம்சி புக்ஸ், திருவண்ணாமலை.

ராஜவனம் தென்தமிழகத்து நாஞ்சில் காட்டுக்குள் நம்மைக் கைப்பிடித்து அழைத்துச் சென்று அழகு காட்டுகிறது.. ஆசிரியர் வனம், நதி, மலையோடு விலங்குகள், மரம், செடி கொடிகள், பறவை, பட்சிகளெனத் தான் ரசித்த கானுயிர் அனைத்தையுமே பெயர் சொல்லி அழைத்து, அதன் அங்க அடையாள அழகுகளோடு கதையில் விவரித்திருப்பது வியக்கச் செய்கிறது. இப்பிரபஞ்ச வாழ்வை அணுஅணுவாய்த் தொடர்ந்து ரசிப்பவனால்தான் இப்படியான வர்ணனைகளைச் செய்ய முடியும்.

– ஆர்.என்.ஜோ டி குருஸ்

## பிரிவு : சிறுகதை




**விருது பெற்ற நூல் : இந்திர நீலம்**

படைப்பாளர் : அ.வெண்ணிலா

வெளியீடு : அகநி, வந்தவாசி.

பெண்ணின் உடல், மாதவிடாய், காமம், அந்தரங்கம், உணர்வு, அழுகை, சமுதாயப் பார்வை, வெளிப்படுத்த முடியாத வலி.. இப்படி நெடு நீள ஒற்றைப் பெண்ணின் முழு நீட்சியே இந்தப் புத்தகச் சிறுகதைகள்.. இந்தச் சிறுகதைத் தொகுப்பை வாசிக்கும் ஒவ்வொரு ஆண்மகனும் தன்னையும் மறு வாசிப்புக்கு உட்படுத்தி எல்லாவற்றையும் சீர்படுத்தத் தேவை இருக்கிறது.

– ரத்தீஷ்.ர

## பிரிவு : மொழிபெயர்ப்பு




**விருது பெற்ற நூல் : பாரம்பரிய இந்தியப் பண்பாடுகள்**

மொழிபெயர்ப்பாளர் : சா.தேவதாஸ் (மூலம் : ரொமிலா தாப்பர்)

வெளியீடு : எதிர் வெளியீடு.

கடந்த மூன்று நூற்றாண்டுகளில் பண்பாட்டுக் கருத்தமைவு குறித்த வரையறைகள் எப்படி மாறியுள்ளன என்று விளக்கி, கூடுதல் கவனம் தேவைப்படுவதைச் சுட்டிக்காட்டுகிறார் தாப்பர். பண்பாடுகளை அடையாளப்படுத்தும் பொருட்களிலிருந்து, சமூகப் பாகுபாடு, பெண்களின் பாத்திரம், அறிவியல் – அறிவின்பாலான அணுகுமுறைகள் போன்ற பண்பாடுகளை வடிவமைக்கும் கருத்துகள் வரை இவற்றில் சிலவற்றைத் தாப்பர் தொட்டுச் செல்கிறார். அதைச் சிறப்பான முறையில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார் சாகித்திய அகாதமி விருதாளரான சா.தேவதாஸ்.

## பிரிவு : சிறப்புப் பரிசு - நாவல்




**விருது பெற்ற நூல் : வந்தாரங்குடியான்**
படைப்பாளர் : பிறைமதி குப்புசாமி
வெளியீடு : சுரபி பதிப்பகம், சென்னை.

ஒரு வரலாற்று நிகழ்வை அதன் உயிரோட்டம் சற்றும் குன்றாமல் கதை மாந்தர்களை நம் கண் முன்னே உலாவவிட்டுள்ளார்.

– வே.இராதா பார்த்திபன்

## பிரிவு : சிறப்புப் பரிசு - கவிதை




**விருது பெற்ற நூல் : அரூபத்தின் வாசனை**
படைப்பாளர் : இரா.பூபாலன்
வெளியீடு : பொள்ளாச்சி இலக்கிய வட்டம்.

வெறும் மாறுபட்ட குரலாக இல்லாமல் தனக்கே உரிய தனித்தன்மைகளோடு இயங்குகிறார் பூபாலன். சாதாரணச் சொற்களுக்குக் கவித்துவ ரசவாதம் செய்து மகத்துவம் மிக்கவை ஆக்குகிறார்.

– கவிஞர் சிற்பி

## பிரிவு : சிறப்புப் பரிசு - கவிதை




**விருது பெற்ற நூல் : வைன் என்பது குறியீடல்ல..**
படைப்பாளர் : தேவசீமா
வெளியீடு : தேநீர் பதிப்பகம், ஜோலார்பேட்டை.

முதல் கவிதைக்கான எந்தச் சலுகையையும் கோராமல் இன்னும் எழுதிக்கொண்டே இருங்கள் தேவசீமா என்று நாம் அவரைக் கேட்கும்படி வைத்திருப்பது இக்கவிதைகளின் வெற்றி என்று சொல்லவேண்டும்.

– ரவிசுப்பிரமணியன்.

● ராஜ்மோகன்



# “நான் எனது வாழ்வை என் முழு அறிவுக்கான செயல்பாட்டுக் களமாகப் பார்க்கிறேன்..”

**- படைப்பாளர் அஜயன் பாலாவுடனான நேர்காணல்**

எழுத்திலிருந்து சினிமாவுக்குப் போய் வெற்றிபெற்ற எழுத்தாளர்களில் அஜயன்பாலா குறிப்பிடத்தகுந்தவர். தமிழின் முன்னணி எழுத்தாளரான இவர் திரைக்கதை வசனகர்த்தா, இயக்குநர், நடிகர் எனப் பல தளங்களிலும் சாதித்தவர். 2002இல் ஆங்கில வார ஏடான தி வீக் மூலமாக இந்தியாவின் சிறந்த இருபது இளம் எழுத்தாளர்களில் ஒருவராகத் தேர்வு செய்யப்பட்டவர். தமிழ்நாடு அரசின் சிறந்த நூலுக்கான விருது (2008), உயிர்மை சுஜாதா விருது (2013), திராவிடர் கழகத்தின் பெரியார் விருது பெற்றவர். இவரது கட்டுரை தமிழ்நாடு அரசுப் பாடத்திட்டத்தில் பதினோராம் வகுப்பில் பாடமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. அது இலங்கை அரசின் ஒன்பதாம் வகுப்புப் பாடத்திலும் கட்டுரை இலக்கியப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளது. தனக்கெனத் தனித்த அடையாளத்துடன் செயல்பட்டுக்கொண்டிருக்கும் படைப்பாளர் அஜயன் பாலாவுடனான ஒரு நேர்காணல்...

**அஜயன்பாலா! இந்தப் பெயருக்கென ஒரு தனித்துவம் உருவாகியிருக்கிறது. இந்த உயரத்திற்கு வந்த அந்தக் கடினமான பயணம் குறித்துச் சொல்ல முடியுமா?**

இதை உயரம் என்று சொல்ல முடியுமா எனத் தெரியவில்லை. செங்கோட்டையிலிருந்து கொல்லம் போகிற ரயில் பாதையில் ஏகப்பட்ட மலைக்குகைகளோடு ஒரு பயங்கரத் திரில்லாக இருக்கும். அதுமாதிரிதான் என் வாழ்க்கையும் ஒரு த்ரில்லான பயணம்! டிகிரி முடிக்கிறப்போ என்னுடைய நண்பன் மூலமாக இலக்கியப் பரிச்சயம் ஏற்பட்டது. அப்பொழுது சினிமாதான் வாழ்க்கை என்று முடிவு செய்துவிட்டேன். வீட்டிலோ வேலைக்குப் போ.. டிகிரி வாங்கி உடனே வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய் என்று ஒரே தொந்தரவு. இந்த டிகிரியை வாங்கினால் வம்பு என்று துணிச்சலாகக் கல்லூரியில் டிகிரி சர்டிபிகேட்டே வாங்கவில்லை. எனக்கு நானே கலைஞன், சுதந்திரமானவன் என்று முத்திரைக் குத்திக்கொண்டு சினிமாவையும் இலக்கியத்தையும் நம்பிச் சென்னைக்கு வந்தேன். சென்னையில் டூவீலர் விற்கிற ஏஜெண்டாகத் தினம் பத்து ரூபாய் சம்பளத்தில் வேலை செய்ய ஆரம்பித்து அப்புறம் அடையாறு ராம் கே ஏஜென்சீஸில் மாசம் 600 ரூபாய்க்குச் சேர்ந்தேன். என் திறமையைப் பார்த்துவிட்டு அந்தக் கம்பெனி உரிமையாளர் எனக்கு 1200 சம்பளம் உயர்த்திக் கொடுத்தார். இந்த ஊதிய உயர்வு எனக்குப் பயத்தைக் கொடுத்தது. வேலையை விட்டுவிட்டேன். ஏனென்றால் வசதியான வாழ்க்கை எனக்கு எப்பவுமே ஒரு பயத்தைக் கொடுக்கும். ஒரே மாதிரி வாழ்க்கையை நான் விரும்பவில்லை. அடுத்து தளபதி போலீஸ் செய்தி என்று துப்பறியும் இதழில் பத்திரிக்கையாளராக மாறி நாலு வருடங்கள் அலைந்தேன். ஒரு பக்கம் இலக்கியத் தொடர்பு இருந்தாலும் இன்னொரு பக்கம் சினிமாவில் உதவி இயக்குநராக வாய்ப்புத் தேடி அலைந்துகொண்டிருந்தேன். சென்னையில் மா. அரங்கநாதன் அவர்களின் முன்றில் கடை மாம்பலம் ரங்கநாதன் தெருவில் இருந்தது. அங்கே வரும் எழுத்தாளர்களுடன் பழக ஆரம்பித்தேன். வண்ணநிலவன் அறிமுகம் கிடைத்தது. அப்பொழுது ராஜேஷ்வர் துறைமுகம் என்று ஒரு படம் ஆரம்பிக்கப்போகிற தகவல். வண்ணநிலவனும் ராஜேஷ்வரும் அவள் அப்படித்தான் படத் திரைக்கதையில் ஒன்றாக வேலை பார்த்தவர்கள் என்று தகவல் தெரிந்தது. வண்ணநிலவன் சார் வீட்டுக்குப் போய் `எனக்கு ஒரு அறிமுகக் கடிதம் குடுத்தீங்கன்னா அதை வச்சி நான் ராஜேஷ்வர்கிட்ட உதவியாளராகச் சேர்ந்துடுவேன்`னு சொன்னேன். அவர் உடனே ஒரு கடிதம் எழுதிக்கொடுத்தார். அந்தக் கடிதத்தைப் பார்த்த உடனேயே ராஜேஷ்வர் சேர்த்துக்கொண்டார். இப்படி இலக்கியமே எனக்கு சினிமாவுக்கு வழிகாட்டிச் சேர்த்துவிட்டது. இரண்டு தளத்திலேயும் பயணம் செய்யத்துவங்கித் தொடர்ந்துகொண்டு இருக்கிறது!

**இலக்கியம் சினிமா இரண்டு துறைகளிலும் ஒரு அழுத்தமான பயணத்தை மேற்கொள்கிறீர்கள். இது எப்படிச் சாத்தியம்?**

சினிமாதான் என்னுடைய தேர்வு. முன்றில் இலக்கியச் சகவாசத்தினால் ஆரம்பத்தில் சில கதைகள் எழுதி விருட்சம், யூமா வாசுகியோட குதிரை வீரன் பயணம் பத்திரிக்கைகளில் வெளிவந்தன. திரைப்பட உதவி இயக்குநராக வாய்ப்பு கிடைத்தபொழுது இனி எழுதவே கூடாதுன்னு பேனாவை மூடிவைத்துவிட்டுத்தான் சினிமாவுக்கு வந்தேன். நான்கு வருடக் காலம் எதையும் எழுதாமல் இருந்தேன். துறைமுகம், லவ் டுடே என இரண்டு படங்கள் முடித்தேன். அடுத்த படம் பண்ண வாய்ப்பு எதுவும் அமையவில்லை. வேலையில்லாத நாட்கள், விரக்தி, வெறுமை.. இதைப் போக்க திரும்ப எழுத ஆரம்பித்தேன். கூட்ஸ் வண்டியின் கடைசிப்பெட்டி சிறுகதை இந்தியா டுடேயில் பிரசுரமாகி அந்த மாதச் சிறந்த கதையாக இலக்கியச் சிந்தனை பரிசு வாங்கியது. அந்த உற்சாகத்தில் முதல் புத்தகம் பை சைக்கிள் தீவ்ஸ் திரைக்கதை வெளியானது. இக்காலகட்டத்தில் அஜயன் பாலா என்ற பெயர் எழுத்தாளனாகப் பிரபலமானபோது கொஞ்சம் பயம் வந்தது.

**அதற்கு ஏன் பயப்பட வேண்டும்.. அதற்காகத்தானே டிகிரி சர்டிபிகேட் கூட வாங்காமல் வந்தீர்கள்?**

ஆமாம்! ஆனால் என் பெயர் முதலில் சினிமா இயக்குநராகத்தான் அடையாளம் பெற வேண்டும் என்பதில் ஒரு தேவையில்லாத பிடிவாதம் என்னிடம் அப்போது ஒட்டியிருந்தது. அதனால் இனி அஜயன் பாலா என்ற பெயரில் எதுவும் எழுதக்கூடாது என முடிவில் இருந்தேன். ஆனால் பணம்தான் என்னை எழுத்தாளனாக்கியது. அக்காலத்தில் வருமானத்துக்கு வழியில்லை. அப்போது தினமணியில் கலைமணி இதழுக்குப் பொறுப்பாசிரியராக இருந்த நண்பர் தமிழ்மகன் தினமணியில் உலக சினிமா பற்றித் தொடர் எழுத முடியுமா என்றார். சரி வாரம் செலவுக்குக் கொஞ்சம் பணம் கிடைக்கும் எனச் சம்மதித்தேன். இந்திரகுமார் என்ற புனைப்பெயரில் எழுதினேன். தொடர்ந்து முப்பது வாரங்கள் எழுதிய இந்தத் தொடர்தான் பிற்பாடு பல வருடங்கள் கழித்து உலக சினிமா வரலாறு எனும் நூலாக வெளியாகித் தமிழக அரசின் சிறந்த நூலுக்கான பரிசைப் பெற்றுத்தந்தது. அதேபோல அதே காலகட்டத்தில் நண்பர் பத்திரிக்கையாளர் முத்துராமலிங்கம் கேட்டுக்கொண்டமைக்காக ஸ்டார் எனும் சினிமா இதழில் திரைக்கதை பற்றித் தொடர் எழுதினேன். அதையும் இந்திரகுமார் என்ற பெயரில் தொடர்ந்து இருபது வாரங்கள் எழுதினேன். ஒருமுறை இயக்குநர் பாலாஜி சக்திவேல் அவர்களைச் சந்திக்க வீட்டுக்குச் சென்றபோது அவர் வீட்டில் அந்த ஸ்டார் இதழ் இருந்தது. அவர் என்னிடமே அந்தப் புத்தகத்தைக் காண்பித்து `இந்தத் தொடரைப் படியுங்கள்.. யாரோ இந்திரகுமார் சிறப்பாக எழுதுகிறார்` என்றார். பிறகு அவரிடம் மட்டும் `அது வேறு யாருமில்லை.. நாந்தான்` எனச் சொன்னபோது அதிர்ச்சி அடைந்துவிட்டார். `ஏன் உங்க பெயரிலேயே எழுதலாமே` என அவர் கேட்க `முதலில் இயக்குநராகிவிட்டுப் பிறகு எழுதலாம் என இருந்தேன்` என்று உண்மையை உடைத்தேன். தொடர்ந்து அவருடைய காதல் படம் வெளியாகி மிகப்பெரிய வெற்றி பெற்றபோது அதன் திரைக்கதையைப் படம் பார்த்து நூல் வடிவத்தில் மாற்றித்தரும்படி கேட்டார். என் பெயர் அதில் எங்கும் வரக்கூடாது என்ற நிபந்தனையுடன் அவர் அலுவலகத்திலேயே இரண்டுமாதம் பணி செய்து ஒவ்வொரு ஷாட்டாகப் பார்த்துப் பார்த்து எழுதிக்கொடுத்தேன். அதற்காகக் கணிசமான பணம் எனக்கு ஊதியமாகக் கொடுத்தார். அன்று எனக்கு அது அவசியமாக இருந்தது. பிற்பாடு அது கனவுப்பட்டறை பதிப்பகம் மூலம் நூலாக வெளிவந்தது. அந்த நூல் வெளியீட்டு விழா சென்னை பிலிம் சேம்பர் அரங்கில் மிகப்பெரிய விழாவாக நடந்தது. இயக்குநர் ஷங்கர், சுஜாதா உள்ளிட்ட பல்வேறு பிரபலங்கள் படத்தைப் பாராட்டிப் பேசிய கையோடு நூல் எழுதப்பட்ட விதத்தையும் பேசினர். குறிப்பாக எழுத்தாளர் சுஜாதா, `படம் வெளியானபின் அதன் தொழில்நுட்பக் கூறுகளோடு இப்படி நூல் வருவது உதவி இயக்குநர்களுக்குப் பயன்படும். வருங்காலத்தில் இதுபோன்ற நூல்கள் அதிகம் வரவேண்டும்` எனப் பாராட்டினார். பார்வையாளனாகக் கடைசி இருக்கையில் அமர்ந்திருந்த எனக்குள் அது ஒரு மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் உண்டாக்கினாலும் அந்த மகிழ்ச்சிக்கு உருவம் இல்லை என நினைக்கும்போது உள்ளூர சில மனத்தாங்கல்களை உண்டாக்கிவிட்டது. பெயர் போடவேண்டாம் எனச் சொன்னது தவறோ என மனம் ஊசலாடியது.

மறுநாளே இயக்குநர் பாலாஜி சக்திவேலிடமிருந்து ஒரு அழைப்பு. அன்று இரவு ராதா பார்க் இன்னில் என்னை வரவழைத்து ஒரு சிறிய விருந்தை ஏற்படுத்தினார். அவருக்கு நூலின் வெற்றி ஒருபக்கம் மகிழ்ச்சியைக் கொடுத்தாலும் இன்னொரு பக்கம் எனக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான புகழ் கிடைக்காமல் போனதில் சிறு வருத்தம் இருந்தது. அன்று இரவு அவர் சொன்ன யோசனைகள் என்னை வெகு நேரம் தூங்கவிடாமல் செய்தன. இயக்குநர் ஆகும் கனவு ஒருபக்கம் இருக்கட்டும்.. அதற்காக நமக்குள்ளிருக்கும் எழுத்தாளனை ஏன் சிறையில் முடக்கவேண்டும். மறுநாள் முதல் அஜயன் பாலா என்ற எழுத்தாளனை



முதுகில் சுமக்கத் துவங்கி இரட்டை சவாரி செய்வது என முடிவெடுத்துக்கொண்டேன்.

**இலட்சியத்தை நோக்கி நகரும்போது வாழ்க்கை நிச்சயம் கடினமாக இருக்கும். ஆனால் ஒரு திருப்பமும் கிடைக்கும். உங்கள் வாழ்க்கையை மாற்றி அமைத்த திருப்ப நிகழ்வு எது?**

எதை வேண்டாம், இது சோறு போடாது என ஒதுக்கிவைத்தேனோ அதுதான் என்னை ஏணியில் ஏற்றி அழகு பார்த்தது. ஆம்.. நான் சினிமா என்னைப் பணக்காரனாக ஆக்கும் எனக் கனவு கண்டேன். ஆனால் எழுத்துதான் பொருளாதாரரீதியாக என் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியது. விகடனில் நான் எழுதிய நாயகன் தொடர்தான் என் வாழ்க்கையின் திருப்புமுனை எனலாம். அதற்கான பலத்தை உண்டாக்கியது அதற்குமுன் நான் எழுதிய மார்லன் பிராண்டோ சுயசரிதம் நூல்.

காதல் திரைக்கதை நூலைப் பதிப்பித்த தோழி வீனா மணிமேகலையும் தோழர் ஜெரால்டும் அவர்களது கனவுப்பட்டறை பதிப்பகத்துக்காக ஒரு நூல் எழுதித் தரும்படி வெகுநாட்களாகக் கேட்டுக்கொண்டிருந்தனர். இச்சூழலில்தான் நான் மார்லன் பிராண்டோவின் சுய சரிதத்தைத் தமிழில் மொழிபெயர்த்திருந்தேன். உண்மையில் அதற்கு முன் உள்ளூர சமூக அவலங்கள் குறித்த அக்கறைகளும் கவலைகளும் எனக்குள் இருந்தாலும் எழுத்தில் அதுவரை வெளிக்கொணர்ந்ததில்லை. ஆனால் பிராண்டோ எழுதும்போது எனக்குள்ளான சமூக அக்கறை தீவிரமாக விரிவுகொண்டது. ஒரு பண்பட்ட சமூக உயிரியாகவும் பயனுள்ள மனிதனாகவும் நான் மாறிக்கொண்டிருப்பதை அந்த நூலை எழுதும்போது உணர்ந்துகொண்டேன். நடிகர் ராஜேஷ் அந்தப் புத்தகத்தைப் படித்துவிட்டு என் வீடு தேடி வந்து பாராட்டியதோடு அல்லாமல் எனக்காகக் கஸ்மோபலிட்டன் கிளப்பில் ஒரு விருந்தை ஏற்பாடு செய்தார். அதுபோல, நடிகர் சத்யராஜ், அதைப் படித்தபின்தான் இதர மொழிப் படங்களில் தான் நடிக்க ஆரம்பித்ததாகவும்



அதன்விளைவாக சென்னை எக்ஸ்பிரஸ், பாகுபலி என இந்திய நடிகனாகத் தான் மாறியதாகவும் பல கூட்டங்களில் தொடர்ந்து கூறிவருகிறார். அது போலப் பலராலும் படிக்கப்பட்டு பல விளைவுகளை உண்டாக்கிய அந்த நூல் விகடன் அலுவலகத்தில் அதன் பொறுப்பாசிரியராக அப்போதிருந்த ரா.கண்ணன் கைகளில் கிடைத்தவுடன் அவருக்குள் ஒரு எண்ணம் தோன்றியது. உடனே என்னை நேரில் வந்து பார்க்கச் சொன்னார்.

அந்தச் சந்திப்பு நாயகன் எனும் தொடர் எழுத எனக்கு வாய்ப்பு வாங்கிக்கொடுத்தது. அந்த நாயகன் தொடர்தான் என் வாழ்க்கையில் மிகப்பெரிய திருப்பத்தை உண்டாக்கியது. அதுவரை இயக்குநராவதன் மூலமாக மட்டுமே அறியப்படவேண்டும் என்று நினைத்துக்கொண்டிருந்த என்மேல் ஒரு வெளிச்சம் பாய்ச்சி வெகுஜன எழுத்தாளன் என்று அடையாளப்படுத்திவிட்டது.

இந்த எதிர்பாராத் திருப்பத்தால் நான் இயக்குநர் பாதையிலிருந்து வலுக்கட்டாயமாக எழுத்துப் பாதைக்குத் திருப்பப்பட்டேன். அதுவரை இயக்குநராக என்னை ஏற்காத திரையுலகம் எழுத்தாளனாக அணைத்துக்கொண்டது.

மதராசப்பட்டினம் துவங்கி இன்றுவரை திரைக்கதையாளனாக வசனகர்த்தாவாகப் பத்து வருடங்களில் பதினைந்துக்கும் மேற்பட்ட படங்களில் பணிபுரிந்துவிட்டேன். இவற்றில் சில வெற்றிப்படங்கள் என்பது ஒரு மகிழ்ச்சியான விஷயம். சமீபத்தில் வெளியான தலைவி திரைப்படம் என்னுடைய புத்தகத்தைக் கொண்டே உருவானது. அதன் திரைக்கதை வசனம் ஆகியவற்றிலும் பங்களித்திருந்தேன். மூன்று மொழிகளில் இந்தியா முழுக்க வெளியானது.

**ஒரு சிறுகதை எழுத்தாளனாக உங்களுக்கான அங்கீகாரம் முழுவதும் கிடைத்ததா?**

சினிமாதான் என் வாழ்க்கை என்பதை எப்பொழுது நான் முடிவெடுத்தேனோ, அப்போதே படைப்பு இலக்கியம் என்பது எனக்கான சுதந்திர வெளி என்பதையும் நான் தீர்மானம் செய்துவிட்டேன். குறிப்பாக சிறுகதைகள் என்னுடைய மிக அந்தரங்கமான விஷயம். எனக்குத் தோன்றக்கூடிய அதீத புனைவுகளை எழுதுவதுதான் என் சிறுகதை என்று நான் முடிவெடுத்துவிட்டேன். எழுத ஆரம்பித்த துவக்கக் காலத்திலேயே எனக்கு மிகப்பெரிய அங்கீகாரங்கள் கிடைத்தன.

எனது மூன்றாவது சிறுகதை கூட்ஸ் வண்டியின் கடைசிப் பெட்டி இலக்கியச் சிந்தனை பரிசு பெற்றது. அடுத்து இரண்டு கதைகள் எழுதி மொத்தம் ஐந்து கதைகள் மட்டுமே பிரசுரமான சூழலில் 2002 டிசம்பர் 7 தி வீக் ஆங்கில ஏட்டில் இந்தியாவின் சிறந்த இருபது வளரும் எழுத்தாளர்களில் ஒருவனாக அடையாளம் காணப்பட்டேன். இந்த அங்கீகாரம் கதை எழுதுவது வெறும் வித்தை எனும் மனநிலையை உண்டாக்கியது. சம்பவங்களைக் கதையாகச் சமைக்கும் அந்த வித்தை படிக்கும் வாசகனின் உணர்ச்சிகளை ஏமாற்றுவது. அப்படிச் செய்வது ஒரு படைப்பாளனுக்கு அறமில்லை என நினைத்தேன். அதனாலே எதார்த்தமான கதைகள் எழுதுவதை அசூயையாக உணர்ந்தேன். கூடவே பரிசோதனையாக எனக்குத் தோன்றுகின்ற, வேறு யாரும் எழுத முடியாத உலகங்களைச் சிறுகதையாக்க முயற்சித்தேன். அது எனக்கு ரொம்பவே பிடித்திருந்தது. இப்பொழுதும் என் கதைகளுக்கு என்று வாசகர்கள் தொடர்ந்து இருந்துகொண்டு இருக்கிறார்கள் என்பதே என் மகிழ்ச்சி. நான் எழுதியது மொத்தம் 27 சிறுகதைகள்தான். இப்பொழுதும் புதிதாக வருகின்ற கவிஞர்களும் இலக்கியவாதிகளும் `உங்கள் கதைகள் மட்டும் இப்போதும் புதிதாக இருக்கிறது, வாசிக்கும்படியாக இருக்கிறது` என்னும்போது எனக்குள் இருக்கும் படைப்பாளியின் சிரிப்பை என்னால் உணரமுடிகிறது.

**கூட்ஸ் வண்டியின் கடைசிப் பெட்டி, வினோத செய்தியாளனின் ஞாபகக் குறிப்பு போன்ற கதைகளின் இயக்குவிசை குறித்து...**

ஒரு வட இந்தியப் பயணத்தின்போது நான்கு மணி நேரம் ரயில் மஞ்சளாய் விரிந்து கிடந்த ஒரு பாழ் நிலத்தில் நிற்க நேர்ந்தது. அப்போது தொலைவில் தொடுவானம் அருகே பார்த்த ஒரு குடிசை, ஜன்னலுக்கு அருகே செம்பட்டை நிறக் கேசத்துடன் பார்த்த அப்பாவி பழங்குடிச் சிறுமியின் முகம் ஆகியவை எனக்குள் என்னமோ செய்தன. வண்டி கிளம்பியவுடன் பக்கத்து ட்ராக்கில் ஒரு கூட்ஸ் வண்டி நிற்பதைப் பார்க்க முடிந்தது. யாரோ அது இரண்டு நாட்களாக சிக்னல் இல்லாமல் அங்கேயே நிற்பதாகச் சொன்னார்கள். கண நேரம்தான் ஒரு பரிதாபம் கடைசிப் பெட்டியின் கார்டு மேல் தொற்றிக்கொண்டது. அந்தக் கடைசிப் பெட்டியின் தனிமை ஆழமாய் மனதில் பதிந்தது. இதுவே பிற்பாடு கூட்ஸ் வண்டியின் கடைசிப் பெட்டி சிறுகதை எழுதக் காரணமாக அமைந்தது.

வினோத செய்தியாளன் கதை முழுக்க அப்போது நான் உதவி ஆசிரியராகப் பணி செய்துகொண்டிருந்த போலீஸ் செய்தி எனும் க்ரைம் வாரப் பத்திரிகை அனுபவம். நேரடியாக எழுதினால் வேலை போய்விடும் என்பதால் மிகு புனைவுடன் மாஜிக்கல் ரியலிச பாணியில் எழுதினேன். காலச்சுவடு இதழில் பிரசுரமாகி மிகுந்த வரவேற்பைப் பெற்றது. என் கதைகளில் பலருக்கும் பிடித்த கதை. யாரோ ஒரு விமர்சகர் காலச்சுவடு கதைகள் தொகுப்பில் இதை வாசித்துவிட்டு, இதை அப்படியே சினிமாவாக எடுத்தால் உலகத்தரமாக இருக்கும் எனச் சமீபமாக இணையத்தில் எழுதியிருந்தார். எனக்கும் அப்புறம்தான் ஸ்ட்ரைக் ஆனது.. திரைக்கதை எழுதிக்கொண்டிருக்கிறேன்.

**உங்களின் ஒரு கட்டுரையில் 'கடந்த பத்துப் பதினைந்து வருடங்களில் ரயிலில் வேடிக்கை பார்த்தபடி பல தொலைவுகளை உள்ளும் புறமுமாகக் கடந்துவந்திருக்கிறேன்' என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். பயணம் குறித்த ரொம்பவும் கவித்துவமான வரிகளாக இதைக் கருதுகிறேன். எது உங்களை இப்படியான பயணங்களுக்கு இழுத்துவிட்டது? வாழ்வில் நீங்கள் முக்கியமானதாகக் கருதும் பயணம் எது?**

பயணம் எதனால் என்னை ஈர்க்கிறது எனத் தெரியவில்லை. ஆனாலும் நான் பயணங்களைத் தேடி ஓடுகிறேன். இலக்கிய வாசிப்பும் ஒன்றில் நிலைபெறாத மனமும் சதா உள்ளுக்குள் நிகழும் காலத்தின் ஓட்டத்திற்கான வெளியைத் தேடும் அவாவும்தான் பயணம் குறித்து என்னுள் பெரும் விழைவை உருவாக்குகின்றன. வட இந்தியப் பகுதிகளில் வெக்கை நிரம்பிய பகல் நேர ரயில்களின் வெறுமையான பெட்டிகளின் ஜன்னல் வழியாகப் பாழ்வெளிகளைக் கடந்து செல்லும் பயணங்கள் எனக்குள் ஒரு மாய

வசீகரத்தை இப்பவும் உண்டாக்குகின்றன. நான் லட்சத்தீவுகள், அந்தமான் உட்பட இந்தியாவின் அனைத்துப் பகுதிகளுக்கும் (அஸாம் உள்ளிட்ட கிழக்குப் பகுதிகள் தவிர) கால்போன போக்கில் போய்வந்துள்ளேன். அனைத்திலும் இமயமலையில் கிடைத்த அனுபவம் வேறெங்கும் அடைந்ததில்லை.

**எந்த எழுத்தாளராவது உங்களைப் பாதித்துள்ளார்களா? யாருடனாவது பழகியிருக்கிறீர்களா?**

என் இலக்கியப் பரிச்சயம் ஜே.ஜே. சில குறிப்புகள் நாவலில் இருந்துதான் துவங்குகிறது. என் பால்ய நண்பன் விமல் என்னைவிட ஒரு வயது மூத்தவன். நான்காம் வகுப்பு தொட்டு நாடகம் போடுவது, நூலகம் அமைப்பது, கதை கவிதை எழுதுவது என இவைகளில் அவனே எனக்கு முன்னோடி. அதுவரை சுஜாதா, பட்டுக்கோட்டை என எல்லோரையும் போலச் சுற்றித் திரிந்தவன் ஜே.ஜே. சில குறிப்புகள் படித்தவுடன் வாழ்வில் திடீரென ஒரு மாற்றத்தை.. திடுமெனத் தலையில் ஒரு கொம்பு முளைத்துவிட்டதை உணர்ந்தேன். அந்த நாட்களில் என் மனநிலை வித்தியாசமாக இருந்தது. வாசிப்பு எனக்குள் ஒரு வேட்டை நாயாக உருமாறிய சமயம் அது. ஒரு மூர்க்கனைப் போல புத்தகங்களுடன் திரிந்தேன். தொடர்ந்து புதுமைப்பித்தன், மௌனி, குபரா, லாசரா, ஜானகிராமன், அசோகமித்திரன், சா.கந்தசாமி, வண்ணநிலவன், வண்ணதாசன், ஆதவன், மா.அரங்கநாதன், கௌதம சித்தார்த்தன், பாதசாரி என அடுத்த சில மாதங்களில் நூலகங்களுக்கும் மரத்தடிகளுக்கும் மலைவெளிகளுக்கும் ஏரிக்கரைகளுக்குமாக அலைந்தேன். என் மனதுக்கு மிக நெருக்கமானவர்களாக அவர்களை உணர்ந்த காரணத்தால் நானும் அவர்களைப் போல ஒரு எழுத்தாளனாகவே உணர்ந்தேன். ரயிலில் பேருந்தில் செல்லும்போது மற்றவர்களைக் காட்டிலும் நான் மதிப்புகூடியவனாகவும் என் கையிலிருக்கும் புத்தகமும் அதை எழுதிய எழுத்தாளர்களும் என் கண்முன் நடமாடும் மனிதர்களைக் காட்டிலும் பன்மடங்கு உயர்ந்தவர்களாகவும் உணர்ந்து எனக்குள் பெருமிதம் கொள்வேன். யாராவது என்ன புத்தகம் எனக் கேட்டால் ஒரு அலட்சியச் சிரிப்புடன், இதெல்லாம் வேறு மாதிரியான புத்தகம் உங்களுக்குப் புரியாதெனச் சொல்லித் தலையை ஆட்டித் தர மறுப்பேன். பின் சென்னை வந்தபின் கிட்டத்தட்ட மூன்று வருடங்கள் ஒரே கதையைத் தினமும் திருத்தித் திருத்தி எழுதினேன். கச்சிதமான இறுக்கமான மொழியில் எழுதுவதன் மேல் அப்போது தீராக் கவர்ச்சி. மூன்று வருடங்கள் தினமும் காலை மற்றும் இரவு இரண்டு வேளைகளிலும் என் மிச்சமான நேரங்களை அந்தக் கதையே ஆக்கிரமித்துக்கொண்டிருந்தது. தாண்டவராயன் எனும் அந்த முதல் சிறுகதையைப் பிற்பாடு விக்ரமாதித்யன் பல இதழ்களின் அலுவலகங்களுக்குத் தூக்கித் திரிந்தார்.

ஒருநாள் கோணங்கியும் எஸ். ராமகிருஷ்ணனும் சென்னை பழவந்தாங்கலில் இருந்த என் அறைக்கு வந்தனர். இரவு என் அறையில் தங்கினர். நான் கிறுக்கியவற்றை அவர்கள் முன் காண்பித்தேன். எனது முகம் கதையைப் படித்துவிட்டுக் கோணங்கியும் ராமகிருஷ்ணனும் நமக்குத் தோதா ஒரு ஆள் சிக்கிட்டாண்டா எனச் சொல்லிக்கொண்டனர். மறுநாள் மதியம் அவர்களை அனுப்பி வைக்க ரயிலடி சென்றேன். ரயில் ஒவ்வொன்றாய்ச் சென்றுகொண்டிருக்க நாங்கள் பேசிக்கொண்டே இருந்தோம். பேச்சில் ஒரு மாய உலகம் எங்களைச் சுற்றிச் சுழன்றது. நான் ஒரு பூச்சியாக அவர்கள் உலகில் சிக்கியிருந்தேன். சட்டென வந்த ரயிலில் இருவரும் ஓடிச்செல்ல வழியனுப்ப வந்த என்னைக் கோணங்கி `வாடா ஏறிக்கோ` என அழைத்தார். இருவருக்கு மட்டுமே டிக்கெட் வாங்கியிருந்தோம். ஆனால் நான் சற்றும் யோசிக்கவில்லை. சட்டென ரயிலில் அவர்களோடு ஏறிக்கொண்டேன். மிகவும் புதிரான நாள் அது. நான் அப்படி திட்டமில்லாமல் அவர்களோடு ஒட்டிக்கொண்டதில் அவர்களுக்கும் மகிழ்ச்சி. தங்களோடு பயணத்தில் அனுமதித்துக்கொண்டனர். அடுத்த நிலையத்தில் ஓடிச்சென்று டிக்கெட் எடுத்துக்கொண்டேன். அன்றிலிருந்து தொடர்ந்து நான்கு நாட்கள் இரவு பகலாக அவர்களுடனேயே சென்னை நகரில் சுற்றித்



திரிந்தேன். அந்த நான்கு நாட்கள் என் ஆடையில் ஒட்டிய தூசு, உடலில் ஒட்டிய நீர், காதில் நுழைந்த வார்த்தைகள் ஆகியவைக்கு ஒரு முக்கியத்துவம் இருந்ததை நான் அப்போதே உணர்ந்தேன்.

**சமீபத்தில் எஸ்.ராமகிருஷ்ணன் ஒரு கூட்டத்தில் இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கக்கூடாது எனப் பேசியிருக்கிறார். அதுபற்றி உங்கள் கருத்து..**

இக்காலத்துக்கு அது முற்றிலும் சரியானது. என்னுடைய விஷயத்தில்கூட ராமகிருஷ்ணன் முதல் கதையை மட்டும் பாராட்டினாரே ஒழிய அடுத்தடுத்த கதைகளை அவர் அங்கீகரிக்கவோ பொதுவெளியில் பாராட்டவோ இல்லை. பல சமயங்களில் சிறுகதை எழுத்தாளர் பட்டியலில் அவர் என் பெயரைச் சொன்னதே இல்லை. அவர் தொகுத்த கதைகள் தொகுப்பிலும் என் கதைகள் இல்லை. அவர் மட்டுமல்ல ஜெயமோகன் உட்பட யார் பட்டியலிலும் நான் இல்லை. அது அவர்கள் கருத்து, ரசனை. ஆனால் அதுவே மொத்தமான பார்வையும் அல்ல. என் சினிமா அடையாளமும் அதற்குத் தடையாக இருக்கலாம். அந்தத் தேர்வுகளுக்கும் இலக்கியத்துக்கும் துளியும் தொடர்புமில்லை. நான் காலம் எழுதும் பட்டியலை நம்புபவன். இன்னும் நூறு வருடம் கழித்து என் கதையை வாசிக்க ஆள் இருப்பான் என நம்புகிறேன். தன் கதைகள் மீது அப்படிப்பட்ட நம்பிக்கை ஒரு எழுத்தாளனுக்கு அவசியம். அப்படிப்பட்டவன் இதுபோல சக எழுத்தாளர்களின் பரிந்துரைகளை ஏறெடுத்தும் பார்க்கமாட்டான். தன் கதைகளின் உலகத்தின் வழியே அவர்களைப் பார்ப்பான். அது வினோத செயல்.

அப்படி ஒருவேளை அவர் செய்திருந்தால்கூட அதை நான் பெரிதாக எடுத்துக்கொள்ளமாட்டேன். காரணம் நான் அவரை மதிப்பது.. துவக்கக் காலத்தில் அவரைச் சந்திக்கச் சென்றபோது பேசிய வார்த்தைகளால்தான். ஒருமுறை சி.சு. செல்லப்பாவின் காணாமலே காதல் தொகுப்பைக் கொடுத்து `இதைப் படி`



என்றார். அதுதான் சக எழுத்தாளனுக்கு மூத்த எழுத்தாளன் செய்ய வேண்டிய காரியம். அப்படி அல்லாமல் கூட்டம் சேர்ப்பதின் பொருட்டு ஒருவரை மனசாட்சியே இல்லாமல் புகழ்வதும் தன் சுய நலத்தின் பொருட்டு ஆகா ஓகோ என்பதும் இலக்கியத் துரோகம். அது மிகப் பெரிய துர்பலனைப் பின்னால் கொண்டுவந்து சேர்க்கும்.

**இலக்கியத்துக்காகப் பல பதிப்பகங்கள் இருக்க நீங்கள் நாதன் பதிப்பகம் துவங்கக் காரணம் என்ன?**

அது ஒரு பெரிய கதை. எழுத ஆரம்பித்த காலத்திலிருந்தே அப்போது இலக்கிய உலகை மொத்தமாக ஆண்டுகொண்டிருந்த இரண்டு பெரிய பதிப்பகங்களுடன் எனக்குப் பகை. என் நான்காவது சிறுகதை வினோத செய்தியாளன் சில ஞாபகக் குறிப்புகள் காலச்சுவடில் வந்ததையொட்டி அரவிந்தனுடன் நெருங்கிய பழக்கம் உண்டானது. அப்போது காலச்சுவடு உலகத்தமிழ்.காம் துவக்கிய சமயம். நான் அடிக்கடி அங்கு சென்று சினிமா குறிப்புகள் எழுதிக்கொடுப்பது வழக்கம். அதற்குப் பிரத்யேகச் சன்மானம் கொடுத்தார்கள். அந்தச் சமயத்தில் மனுஷ்யபுத்திரன் அங்கு பணி செய்த காரணத்தால் அவரோடு அடிக்கடி பேசிப் பழகிவந்தேன். அப்போது அவரது கவிதைத் தொகுப்பு வந்திருந்தது. அதுகுறித்து விமர்சனம் எழுதப்போவதாகச் சொல்லி எழுதிக்கொண்டுமிருந்தேன். இச்சூழலில் அவர் வேலையை விட்டு விலக உடனே என்னிடம் `அந்த விமர்சனத்தைக் கொடுங்கள்.. பிரசுரிக்கலாம்` என அரவிந்தன் கேட்டார். நான் மறுத்துவிட்டேன். மனுஷ்யபுத்திரனுக்கு இது தெரியாது. பின்னர் மனுஷ் உயிர்மை இதழ் ஆரம்பித்தார். அப்போது தி. நகர் பேருந்து நிலையம் அருகே ஏதோ ஒரு புத்தகக்கடை துவக்க விழாவுக்குச் சென்றபோது நானும் சென்றிருந்தேன். வாசலில் வைத்து என்னிடம் பேசிய மனுஷ்.. `உங்கள் கதைகள் சிறப்பாக இருக்கின்றன. என் கவிதை பற்றிக் கட்டுரை எழுதித் தாருங்கள். பதிலுக்கு உங்கள் கதையைப் பிரசுரிக்கிறேன்` எனக் கேட்டார். அந்த ஒப்பந்தம் எனக்குப் பிடிக்கவில்லை.

இந்தச் சூழலில்தான் பதிப்பகம் தொடங்கும் எண்ணம் ஏற்பட்டது. தரமான நூல்களை வெளிக்கொணர அது ஒரு வாய்ப்பாகவும் அமைந்தது.

**இன்று கலை வடிவங்களில் இலக்கியத்திற்கு அடுத்து மனிதர்களின் மனதை மேம்படுத்தக்கூடிய இடத்தில் சினிமாவே இருக்கின்றது. உங்கள் ஆன்மாவை விரிவடையச் செய்ததில் சினிமாவின் பங்கு என்னவாக இருந்தது? உங்களுக்குள் அதன் இருப்பு எப்படி நிகழ்ந்தது?**

சென்னைக்கு வந்து சேர்ந்த புதிதில் எனக்குச் சில நல்ல நண்பர்கள் கிடைத்தனர். அதில் முக்கியமானவர் ஞானசம்பந்தன். அவர்தான் எனக்கு பிலிம் சொசைட்டிக்களை அறிமுகப்படுத்தினார். அவர் மூலமாகத்தான் சினிமா மொழியின் மீதான ஆர்வம் ஏற்பட்டது. குரசேவாவும் சாப்ளினும் டுரூபோ பெர்க்கமனும் தார்க்கோஸ்கியும் என்னை அதிகம் பாதித்த திரைக்கலைஞர்கள். நூறு புத்தகங்கள் மூலமாக ஒருவன் பெறும் அனுபவத்தின் சாரத்தை நான் இவர்களது படங்கள் மூலமாகக் கற்றுணர்ந்தேன். நல்ல படங்களைக் காணும்போது வாழ்க்கை குறித்த புரிபடாத பக்கங்கள் என்முன் விரிந்துகொண்டே இருந்தன. அடிப்படையில் எழுத்தாளனாக இருந்த என்னை அவர்கள் மிகவும் உள்ளிழுத்துச் சென்றனர்.

என் வாழ்க்கை குறித்து நான் எடுக்கும் அனைத்துத் தேர்வுகளுக்கும் அவர்களே காரணம். இல்லாவிட்டால் நான் இன்று பத்தோடு பதினொன்றாக ஒரு இயக்குநர் என்ற அளவில் தொப்பையைத் தள்ளிக்கொண்டு காரில் வலம் வந்திருப்பேன். அந்த வழி எனக்குச் சுலபமானது. வெற்றியோ தோல்வியோ.. நான் எனது வாழ்வை என் முழு அறிவுக்கான செயல்பாட்டுக் களமாகப் பார்க்கிறேன். அப்படியாக வாழ்வதால் மட்டுமே என் வாழ்க்கை முழுநிறைவு கொள்ளும் என்பதில் சிறிதுகூட ஐயப்பாடின்றி முழுமையாக இருக்கிறேன். குற்றவுணர்ச்சியில்லாமல் வாழ்ந்துகொண்டிருக்கிறேன்.. வாழ்ந்துள்ளேன் என்பதில்தான் என் பெருமை.

**எழுத்து உங்களுக்குக் கைவந்த கலையாகிவிட்டது. சிறுகதையில் உரையாடலை எழுதுவதற்கும், திரைப்படக் கதாபாத்திரங்களுக்கான உரையாடலை எழுதுவதற்கும் என்ன வித்தியாசத்தை உணர்கிறீர்கள்?**

சிறுகதைகளை உரையாடலில் எழுதுவதை முடிந்தவரை தவிர்த்துவிடுவேன். மௌன வாசிப்பிற்கு ஏற்றதுபோல் எனது கதைகள் இருக்கும்படி கவனமாகச் செதுக்குவேன். இதற்கு நேர் எதிரானது நான் புழங்கிவரும் வணிக சினிமா. அதுவும் தமிழ் சினிமாவைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். இங்கு எல்லாமே உரையாடல்தான். அங்கு நான் எதிர்கொள்கின்ற எதார்த்த வாழ்க்கை மிகவும் பயன்படுகிறது. நான் நேரில் சந்திக்கும் மனிதர்கள்.. அவர்கள் பேசுவது, அவர்கள் பழகுவது, அவர்கள் உடல்மொழி இது எல்லாமே சினிமாவில் பயன்படுகிறது. எனக்கு வசனம் எழுத வருமா என்பது எனக்குப் பெரிய சந்தேகமாகவே இருந்தது. பெரும்பாலும் கற்பனையில் காட்சிகளை உருவாக்குவதில் ஆர்வம் உள்ள எனக்கு உரையாடல் மிகவும் அந்நியமாகவே இருந்தது.. சினிமாவின் துவக்கக் காலத்தில். ஆனால் நான் பணிபுரிந்த லவ்டுடே இயக்குநர் பாலசேகரனிடம் நான்கு மாதக் கதை விவாதத்தில் தமிழ் சினிமா திரைக்கதை வசனம் தொடர்பான தொழில்நுட்பங்களைக் கற்றுத் தேர்ந்தேன். பாலசேகரன் உரையாடல் எப்படி இருக்கவேண்டும் என்பதைச் சொல்லி விளக்குவார். உரையாடல் வெறும் படைப்பு சார்ந்த பணி என்பதைத் தாண்டி மிகுந்த தொழில்நுட்பமும் இணைந்தது என்பதைப் பிற்பாடு தெரிந்துகொண்டேன். வசனம் எழுதும் பாணி படத்துக்குப் படம் மாறுபடும். வனயுத்தம், சென்னையில் ஒருநாள் போன்ற படங்களில் துறைசார்ந்த புலமை எனக்குத் தேவைப்பட்டதால் அதைத் தெரிந்துகொள்ள பல ராணுவக் காவல்துறை அதிகாரிகளைச் சந்தித்துத் தெரிந்துகொண்டு எழுதினேன். அதுபோல மனிதன் படத்தில் பணிபுரியும்போது பிரகாஷ்ராஜ் எப்படி

பேசுவார் என்பதை உள்வாங்கி அவர் போல வசனம் பேசிப்பார்த்தே எழுதினேன். பாத்திரத்தின் சுபாவம் அல்லது நடிகர்களின் பாணி, இதை வசனம் எழுதுபவன் மனதில் உள்வாங்கினாலே போதும். சிறந்த வசனம் இருந்தால் நடிப்பும் சிறப்பாக வெளிப்படும். படைப்பிலக்கியம் போல வசனத்திலும் வார்த்தைகளை அதிகம் வீணாக்காமல் இருக்கவேண்டும். காட்சியில் ஏற்கெனவே இருப்பதை வசனத்தில் தவிர்த்திடல் வேண்டும். உரையாடலில் ஒவ்வொரு வார்த்தைக்கும் நேரக்கணக்கு இருக்கிறது. ஒரு கூடுதலான உரையாடல் படத்தின் நீளத்தை அதிகரித்துவிடும். ஒருமுறை முழுதாக எழுதிவிட்டு அதைப் பலமுறை திருத்திச் செப்பனிட வேண்டும். இது போன்ற இன்னும் பல தொழில்நுட்பங்கள்தான் வசனம் எழுதும் பணி.

**ஈரான், கொரியன் மற்றும் மிகச்சிறிய நாடுகளில் இருந்து உன்னத சினிமாக்கள் உருவாகின்றன. இதுபோலத் தமிழ் சினிமாவில் சாத்தியமில்லையா?**

ஐரோப்பா உள்ளிட்ட மேற்கு மற்றும் அரபு நாடுகளில் நாடகம், இசை, ஓவியத்தைப் போல சினிமாவையும் கலையாகப் பார்க்கின்றனர். ஆனால் நாம் சினிமாவைக் கலையாகப் பார்ப்பதில்லை. சினிமா இங்கு தியேட்டர்களுக்கு பட்ஜெட்களுக்கு கதாநாயகனுக்கு முதலாளிக்கு தயாரிப்பாளனுக்குச் சம்பாதித்துத் தருகிற ஒரு வியாபாரம். சினிமாவை வாழவைக்கும் 12 முதல் 45 வயசு வரையிலான இளைஞர்கள் எதை அதிகம் விரும்புகிறார்களோ அதுதான் சினிமாவாக உருவாக்கப்படுகிறது. இந்த வியாபாரத்தில் கலை என்ற பெயர் கேலிக்கூத்துதான். ஆனால் அதை இப்போது அதிகம் கவனப்படுத்த ஆரம்பித்துள்ளனர். விசாரணை, டூலெட் படங்களைத் தொடர்ந்து இப்போது கூழாங்கல் கொஞ்சம் நம்பிக்கையூட்டுகிறது. விரைவில் தமிழ் சினிமாவும் உலக அரங்கில் ஒரு வரிசையை உண்டாக்கும் என நம்புகிறேன்.

**பாலுமகேந்திரா நூலகத்தின் ஊடாக எவ்வகையான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறீர்கள்?**

நான் உதவி இயக்குநராக இருக்கும்போது நல்ல புத்தகங்கள் வாங்கிப் படிக்க வசதியில்லாமல் கஷ்டப்பட்டேன். வாசிப்புப் பழக்கம் இப்போது அதிகமாகியுள்ள நிலையில் உதவி இயக்குநர்களுக்குத் தேவையான தரமான புத்தகங்கள் மட்டும் சுலபமாகக் கிடைக்கும் வகையில் இந்த நூலகத்தைச் சென்னை சாலிக்கிராமத்தில் துவக்கியிருக்கிறேன். வீட்டுக்கே எடுத்துச் சென்று வாசிக்கலாம். ஆண்டுச்சந்தா 250 ரூபாய்தான். மட்டுமல்லாமல் பிரபல இயக்குநர்கள், கலைஞர்கள் ஆகியோரை வாரம் ஒரு நாள் வரவழைத்துக் கூட்டம் நடத்துகிறோம். உலகப்படங்களை மாதம் ஒருமுறை திரையிடவும் செய்கிறோம். வருங்காலத்தில் கொரியன், ஈரான், டென்னிஷ் சினிமா உருவாக்கிய அலை போலத் தமிழ் சினிமா அலையை உருவாக்கும் எண்ணத்தோடு இப்பணிகள் செய்கிறோம். வருங்காலத்தில் தமிழ் தன்னாட்சி சினிமாவுக்குப் பொதுமக்கள் கலந்துகொள்ளும் மகத்தான இயக்கம் ஒன்று உருவாக்கும் எண்ணம் உள்ளது. மிகப்பெரிய பொருள் தேவைகள் உள்ளன. இப்போதைக்கு எல்லாச் செலவும் நான் ஒருவனே எடுத்துச் செய்கிறேன். ஆர்வமுள்ளவர்கள் கைகோர்க்கும்போது சுமைகள் குறையும் என எதிர்பார்க்கிறேன்.

**வாசிப்பிற்கு நீங்கள் பரிந்துரைக்கும் சிறந்த புத்தகங்கள் என்ன?**

வெண்ணிற இரவுகள், தனிமையில் 100 ஆண்டுகள், விசாரணை, காப்கா, புத்துயிர்ப்பு, குட்டி இளவரசன், புயலிலே ஒரு தோணி, Blindness – ஜோஸ் ஸரமாவோ, புதுமைப்பித்தன் படைப்புகள், மோகமுள் போன்றன.

**இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்?**

இசைப் பின்னணியில் புதிய திரைப்படத்தை இயக்கும் பணியில் இருக்கிறேன். விரைவில் அறிவிப்பு வரும். ■

கவி : வசந்தன் சேலம்

# பள்ளி செல்லாத குழந்தை

அமரர் ஊர்திகள்
கடக்கும் சாலையெங்கும்
பூக்களாய்
நசுங்கிக் கிடக்கிறது
வாழ்ந்து முடித்தவர்களின்
வாழ்வு!

மயானத்தில் தஞ்சம் அடையும்
பட்சிகளின் கண்கள்
எரியும் பிணம் பார்த்து
செந்நிறமாய் மாறிவிட்டன!

ஓயாத அழுகுரலுக்கு மத்தியில்
அவ்வப்போது
காற்றுக்காக
கடிகாரத்தைப் பார்க்கிறார்கள் சிலர்
அதுவும்
நின்று நின்றே
ஓடிக்கொண்டிருக்கிறது!

அவனுக்கென்ன
பள்ளி செல்லாத குழந்தை...
பொம்மைக்கு
செந்நிறத்தில் பொட்டு வைத்து
விளையாடிக்கொண்டிருப்பான்... ■

● கவிஜி



# அறியாமை என்னும் ஆயுதம்

**திரைப்படம் : The Unknown Saint**

வெயிலாந்திரத்தில் வாழ்க்கை அமைந்துவிட்ட அரேபிய நிலம் அது. போலீஸ் விரட்டுகையில் தப்பித்து ஓடி வரும் நாயகன் திருடிய பணப் பையை அந்தக் குன்றின் தலையில் குழி தோண்டிப் புதைத்துவிட்டு அதை ஒரு பிணக் குழி போல பாவனைத்துவிட்டு வெறும் ஆளாகப் போலீசிடம் மாட்டிக்கொள்கிறான்.

பிறகு சிறையில் இருந்து வெளிவரும் அவன் அந்த இடத்துக்கு ஆவலோடு வருகிறான். இனி கஷ்டம் தீர்ந்தது என்பது போல அவன் கண்களில் எதிர்கால ஒளி.

ஆனால் புழக்கத்தில் இருக்கும் மானுட நடுக்கம்... அவன் பணத்தைப் புதைத்து வைத்த இடத்தில் ஒரு கோயிலைக் கட்டி வைத்திருக்கிறது. ஒரு மேடெழும்பிய புதை குழியைச் சாமியாராக்கி அதன் மீது தங்கள் அறியாமையைக் கட்டி எழுப்பி அதை வழிபட்டு... இல்லாத ஒன்றை இருக்கும் எல்லாமும் சேர்ந்து உருவாக்கி... நிழலில் நிம்மதி தேடும் வறட்சியான மனங்களின் கூட்டுதான் அந்தக் கிராமம். நமக்கு மேலே ஒரு சக்தி எப்போதும் வேண்டும் என்று நம்பும் அடிமை மனோபாவ அறியாமைதான் அங்கே அவர்களை அந்த இல்லாத செயிண்ட்டைச் சொந்தம் கொண்டாடச் செய்கிறது. நம்மூரிலும் சாமி கண்ணில் பால் வடிந்ததாக ஒருமுறை கதை சுற்றியதே. அதே போக்குதான். யாரோ எவனோ எதற்கோ சும்மா வேலையில்லாமல் கொளுத்திப் போடுவதுதான் பிறகு கொன்று தீர்த்துக்கொள்ளும் குலசாமியாகக் கூட ஆகிவிடுவதெல்லாம்.

பகலில் மக்கள் வந்து போய் இருக்க இரவில் ஒரு கரெக்ட் ஆபீசர் தன் நாயோடு காவல் காக்கிறான். நோட்டம் விடும் நாயகன் ஊருக்குள் இருக்கும் விடுதியில் அறை எடுத்துத் தங்குகிறான். ஜன்னல் வழியே தெரியும் அந்த மலைக்கோயிலை ஆயிரம் அர்த்தத்தோடு பார்க்கிறான்.

"உள்ளே சாமியும் இல்ல பூதமும் இல்ல. என் பணம்தான்டா இருக்கு" என்பதுதான் அவன் மனதில் ஊசலாடும் சொற்கள்.

ஒவ்வொரு இரவும் அங்கே வருவதும் பணத்தை எடுக்க முடியாமல் அல்லல்படுவதும் என இவற்றை இரவு நேரக் காட்சியமைப்பில் மனதுக்குள் சிரித்துக்கொண்டே காணும்படியாக, அமைதியாகத் திரைக்கதையில் பாலைவனத்தில் ஒரு சோலை செய்திருக்கிறார்கள். விரக்தியும் அயர்ச்சியுமான மனிதர்களின் கூடாரமாக அந்தக் கிராமம் இருக்கிறது.

திருடுவதற்குத் துணையாக வரும் நண்பன் அந்தக் குன்றின் வலது பக்கம் ஏறிக்கொண்டிருக்க, "உன்ன வலது பக்கம் தான ஏறச் சொன்னேன்... நீ ஏன் இடது பக்கம் ஏறிட்டுருக்க..?" என்று அலைபேசியில் நாயகன் கேட்க, "நான் நீ சொன்ன பக்கம்தான் ஏறிட்டு இருக்கேன்" என்று திருட்டு நண்பன் சொல்ல, அப்போதுதான் நமக்கும் தெரிய வருகிறது.. அவர்களைப் போலவே இன்னொரு திருடனும் இடது பக்கம் மலை ஏறிக்கொண்டிருப்பது. அவன் யார், அவன் எதற்காகத் திருடுகிறான் என்பதெல்லாம் நிஜமான ப்ளாக் காமெடி.

ஊருக்குப் புதிதாக வரும் மருத்துவரும் அவருக்குத் துணையாக இருக்கும் உதவியாளர் பாத்திரமும் ஆளே இல்லாத ஊரில் யாருக்கு ஊசி போடக் காத்திருக்கிறார்கள் என்பது போல அது ஒரு தனி அத்தியாயம். உதவியாளராக வரும் மூப்புப் பாத்திரம் இரவுகளில் செய்யும் அசட்டுத்தனம்... ஆகா ரகம். போர் அடிக்குது... என்ன பண்ண என்று சொல்லும் விளக்கம் ஏக ரகளை. எதிலும் ஈடுபாடு இல்லாத சோர்வுற்ற வறட்டுக் கிராம மக்கள்... செம்மண் புழுதியில் தீரா தூரப் பாலைவன அடுக்குகளின் வழியே வானத்தைப் பார்த்துக்கொண்டே கிடப்பது சொட்டு மழைக்கான சொப்பனம்.

இதற்கு நடுவே ஒரு அப்பாவும் பையனும்... அந்த மண்ணை உழுது ஏதாவது பசுமைக்கு வழி செய்துவிடச் செய்யும் போராட்டம் தனி யுத்தாயுதம். அதுவும் தன் இடத்தில் தன்னை மீறி யாருக்கோ கோயில் கட்டி இருப்பதை அந்த அப்பாவால் பொறுத்துக்கொள்ளவே முடிவதில்லை. ஒரு கட்டத்தில் கோயிலை இடிக்கக் கூட முயற்சிக்கிறார். தன்னளவில் இடிந்து போகும் திரைக்கதைதான் வாழ்வாய் அமைந்திருக்கிறது அவருக்கு. எப்போதும் ரேடியோவில் எதையாவது கேட்டுக்கொண்டே இருப்பதுதான் அவரின் இருத்தலை உறுதிப்படுத்தும் சுயம். ஓய்வில்லாத உளைச்சலால் சொந்த மண் மீது கொண்ட தவிப்பினால்... மரணம் கூட சம்பவிக்கிறது. மாற்றி யோசிக்கையில் மரணம் கூடத் தப்பிச் செல்லும் வழிதான் போல. இறந்த அப்பாவை ஊர் மக்கள் சிலரோடு சேர்ந்து மகன் தூக்கிக்கொண்டு போகும் காட்சி.. திரையில் இந்தப் பக்கம் நுழைந்து அந்தப் பக்கம் மறையும் வரை நடக்கும் ஒளி ஊர்வலம். அந்தச் சவ ஊர்வலத்தில் நாமும் கேமராவின் வழியாகக் கலந்துகொள்கிறோம். தூரத்துக் காட்சியில் எப்போதும் ஒரு மென்துக்கம் இருப்பதை உணர முடிகிறது. நகரும் ஓவியத்தை நாம் நகராமல் காண்கிறோம்.

இப்படி படம் நெடுகிலும் ஒளிப்பதிவின் உற்சவம் நடக்கிறது. தேவை இல்லாத ஓர் அசைவு கூட கேமராவில் இல்லை. இலை அசையும் அளவுக்குத்தான் இசை அசைகிறது. இளம்வெயிலின் பரவலை... இளம்இருட்டின் நிரவலை... காட்சிக்குக் காட்சி மடைமாற்றம் செய்திருப்பதில், அரேபியப் பாலைவனத்தில் அரூபமாய் நாமும் திரிகிறோம்.





ஒரு நாளில் காலத்துக்குமான காத்திருந்த மழை வருகிறது. அந்த மகனோடு சேர்ந்து அந்த நிலத்தின் சூடு நனைந்தழ அந்த மழை போதுமானதாக இருக்கிறது.

`நான் திருடன்தான். கொலைகாரன் கிடையாது` என்று நாயகன் பேசும் வசனமாகட்டும்.. மருத்துவரின் உதவியாளன் கடவுளின் பெயர் பொறித்த பலகையைத் திருடிச் செல்வதாகட்டும்... படம் நெடுகிலும் மானுட ஆழ்மனச் சுய பரிசோதனைகள்.

ஊருக்குப் பொதுவானது பார்பர் ஷாப். அங்கே நிகழும் குறுக்கு நெடுக்குகள், ஊர் வம்புகள் என்று அது ஒரு குட்டி அரசியல் மேடையைக் கண் முன் நிறுத்துகிறது. போல இருத்தலில் நிகழும் கூத்துக்களின் வழியே அறியாமை அவர்களின் ஆயுதமாக வியாபித்திருப்பதைச் சிரித்துக்கொண்டே உணர்கிறோம். எல்லா ஊர் பார்பர் ஷாப்பிலும் ரெண்டு வெட்டி ஆசாமிகள் ஒன்றுக்கும் ஆகாமல் பொழுதைக் கழிப்பார்களே... அப்படி இருவர் இந்தப் படத்திலும் இருக்கிறார்கள். மூப்பு பூத்த அவர்களைப் பார்த்தாலே சிரிப்புதான்.

சுய பகடியில் சுய எள்ளலில் படம் ஒவ்வொருவரின் பாத்திரத்திலும் நிரம்பி வழிந்து ஒரு கட்டத்தில் கோயில் காக்கும் நாய் மீது வந்து நிற்கிறது.

பணத்தை எடுக்க விடாமல் தடுக்கிறதே என்று திருட்டு நண்பன் வேண்டுமென்றே ஏற்படுத்திய விபத்தால் பற்கள் உதிர்ந்து அடிபட்டுக் கிடக்கும் நாயைக் காப்பாற்ற... அதற்குத் தங்கப் பல் கட்ட என்று அந்தக் காவலன் எடுக்கும் முயற்சிகள் - அவர்கள் சீரியஸாகச் செய்துகொண்டிருப்பார்கள். நாம் சிரித்துத் துவளுவோம். அதன் பிறகு கோழி, ஆடு என எல்லாவற்றையும் கொண்டு வந்து மனிதர்களுக்கான மருத்துவமனை வாசலில் காத்திருக்கும் ஊர் மக்கள் என்று அறியாமையின் மேற்பரப்பில் வாழும் வெள்ளந்தி மனிதர்களின் கதை காட்சிக்குக் காட்சி களேபரம்தான்.

மணல்வெளியின் சந்தன நிறம் நறநறக்க... வெயிலின் தகிப்பு கண்களில் மொறுமொறுக்கிறது. குறைவான வசனங்களோடு திருதிருவென நகர்கிறது காட்சி மொழி. பெரும்பாலான சமயங்களில் சீரியஸான நடைமுறையில் மிக இலகுவாக ஒரு காமெடி நிகழ்ந்துகொண்டிருக்கும். அப்படித்தான் இந்தப் படம். நிறுத்தி நிதானமாக நின்று அமர்ந்து நகரும் படத்தில் எல்லாப் பாத்திரங்களுமே அவரவர் வேலையில் சீரியஸாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் அது

இணைக்கப்பட்டிருக்கும் திரைக்கதையில் டார்க் காமெடி பளிச்பளிச் என மின்னுகிறது. குறிப்பாக அந்த நர்ஸ் பாத்திர வடிவமைப்பு... பழக்கமான ஒரு வாழ்க்கை முறையில் இருந்து தன்னை விடுவித்துக்கொள்ளச் செய்யும் முன் பின் ரூல்ஸ் மீறல். உண்மையில் மானுட மனம் குற்றங்களை விரும்பும் குரூரத்தில் ஒளிந்திருப்பவைதான். பலகீனங்களின் வழியே சுய திருப்தியை மேற்கொள்ளும் பரிசோதனைகளை அந்தரங்கம் நிகழ்த்திப் பார்த்துக்கொண்டே இருக்கும். அதுதான் இங்கே நடக்கிறது.

ஒரு பக்கம் நாயகன் பணத்தை எடுக்கப் போராடிக்கொண்டிருக்க... ஒரு பக்கம் நிலத்தை மீட்டெடுக்க அந்த மகன் போராடிக்கொண்டிருக்க... மருத்துவர் ஒரு பக்கம் நாயைக் காப்பாற்றப் போராட... நர்ஸ் செய்யும் கோமாளித்தனம்... குண்டக்க மண்டக்க ஐடியா கொடுத்துச் சொதப்பும் நாயகனின் நண்பன்... பார்த்தாலே சிரிப்பு வரும் முடி திருத்துபவரின் சமயோசித பாவனை என்று படம் உலகத்துக்கு ஒதுக்குப்புறமான ஒரு குக்கிராமத்தில் வெயிலும் மணலுமாகப் படு சீரியஸாக ஓடிக்கொண்டிருக்க... நாம் சிரித்துக்கொண்டே எங்கோ நின்றிருப்போம். எல்லாவற்றுக்கும் படக்படக்கெனக் கூடிவிடும் ஊர் மக்கள் உடைத்துப்பார்த்தால் பொக்கை என்பது போல சும்மா இருக்கிறார்கள். காரண காரியம் தேவையே இல்லை. ஒருவன் போனால் இன்னொருவனும் போவான். இப்படி முட்டாள்தனத்தில் இருக்கும் அறியாமைதான் கதையின் அடிநாதம்.

இறுதியில் என்னதான் ஆனது.. பணம் கிடைத்ததா.. கோயில் என்ன ஆனது.. நாய் பிழைத்ததா.. தலைப்பில் இருக்கும் அந்த *unknown saint* யார்.. என்று ஒரு கிளாசிக் தன்மையோடு படம் முடிகிறது. செயிண்ட்கள் வருவார்கள், தங்களையும் மீறிச் செய்ய வந்ததைச் செய்துவிட்டுப் போய்விடுவார்கள். எது நடக்க வேண்டுமோ அது நடந்துகொண்டுதான் இருக்கும்.

**இயக்குநர் : Alaa Eddine Aljem**

**ஆண்டு : 2019**

**மொழி : அரேபியம்**



ஆதில்அம்மார்

# புரிபடும் தொல்லியல்..




ஒரு சில ஆண்டுகளாக அதிகம் உச்சரிக்கப்படும் ஒரு சொல் கீழடி. கீழடி அகழாய்வுகள், இதுவரை வெறுமனே புத்தகங்களில் மதிப்பெண்ணிற்காக மட்டுமே படித்துக் கடந்துவந்த பக்கங்களை ஆழமாக மீண்டும் விரிவாகப் புரட்டிப் பார்க்க / படிக்கத் தூண்டின. அந்தச் சமயத்தில்தான், "ஆதிச்சநல்லூர் முதல் கீழடி வரை" என்ற நூலை நான் அறிந்துகொள்கிறேன்.

இதுவரை நடந்த அகழாய்வுகளைப் பற்றிய அடிப்படைப் புரிதல்களை அடைந்திட உதவிகரமாக அமைந்த இந்நூலில் கிட்டத்தட்ட 15 இடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் பேசப்படுகின்றன.

இந்தியாவில் அகழாய்வு எப்படித் தொடங்குகிறது, யார் தொடங்கிவைத்தார், அது முதலாக நடந்த ஆய்வுகளில் மேலைநாட்டவரின் பெரும்பங்கு என்ன? இன்று அதன்பிறகு தமிழகத்தில் நடந்த அகழாய்வுகள் என்னென்ன? அதன்வழி தமிழக வரலாறு எப்படி மீட்டெடுக்கப்படுகிறது? வரலாற்றைத் திருத்தி எழுதுவதிலும், ஒரு நாட்டின் வரலாற்றைச் சரியாகப் பதிவு செய்வதிலும் இவ்வாய்வுகளின் முக்கியத்துவம் போன்ற பல புரிதல்களை உருவாக்கும் இந்நூல், நான் வாசித்துவரும் நூல்களில் தொல்லியல் சார்ந்த ஆர்வத்திற்கு நல்ல துவக்கமாக அமைந்தது.

அதேபோல், அகழாய்வுகள் பற்றிச் சாதாரண மனிதர்களுக்குப் பல்வேறு கேள்விகள் எழலாம். உதாரணமாக, தொல்லியல் ஆய்வுகள் எப்படி மேற்கொள்ளப்படுகின்றன? அதற்கு உதவக்கூடிய கருவிகள் என்னென்ன? எந்தெந்த வகைகளிலெல்லாம் தரவுகள் உறுதிசெய்யப்படுகின்றன? எப்படி இடங்களைக் கண்டறிகிறார்கள்? இப்படி பல.

இவை அனைத்திற்கும் விடையளிக்கும் வகையில் நிவேதிதா லூயிஸ் மிகச்சிறப்பாக எழுதியுள்ளார். நேர்த்தியான கட்டுரைகளால் என்னை விரைவில் வசப்படுத்திவிட்டது இந்தப் புத்தகம். ■



பிருந்தா சாரதி




# பாஷோ என் பக்கத்து வீட்டுக்காரர்

இயற்கையை உணர்தலும் இயற்கையோடு கரைதலும் மனிதனை எடையற்று மிதக்கச் செய்யும் மகத்தான வாழ்க்கை நெறி. ஜென் என்பதும் இதுதான். ஜப்பானிய ஹைக்கூ கவிஞர்கள் பாடிய பல கவிதைகளும் இயற்கையின் மூலமாக இயற்கையைப் புரிந்துகொள்ளும் இயற்கை வாழ்வியல் நெறியினைச் சொல்பவைதாம். நம்முடைய சங்க இலக்கிய வழியும் இதுதான்.

ஜப்பானியர்கள் பருவங்களை வைத்துக்கொண்டு இலக்கியத்தை வரையறை செய்துகொண்டார்கள் என்றால் நாம் திணைப் பிரிவுகளால் வகுத்துக்கொண்டோம். அதனால்தான் ஜப்பானிய இலக்கியத்திற்கும் தமிழ் இலக்கியத்திற்கும் ஊடாக ஓர் அந்தரங்க ரத்த ஓட்டம் நிகழ்கிறது. உலகின் வேறு எங்கு எழுதப்படுவதைக் காட்டிலும் தமிழில் ஹைக்கூ கவிதைகள் ஏராளமாக எழுதப்படுகின்றன. தமிழும் ஜப்பானிய இலக்கியமும் அருகருகே வாழும் பக்கத்து வீட்டுக்காரர்கள் என்று எண்ணிக்கொண்டால் அது தவறல்ல என நினைக்கிறேன்.

ஹைக்கூவின் பிதாமகர் பாஷோ. பாஷோவுடைய வீட்டில் அவர் தன் சீடன் ஒருவன் பரிசளித்த வாழைமரத்தை நட்டு வளர்த்தார். பாஷோவினுடைய வீட்டைத் தேடி வருகிறவர்களுக்கு வாழை மரத்தை வைத்து அடையாளம் காட்டுவது அந்த ஊர்க்காரர்களின் வழக்கம். வாழைமரத்து வீட்டுக்காரர் என்பது கொஞ்சம் கொஞ்சமாக மாறி அவரையே வாழைமரம் என்று சொல்லும்படி ஆகிவிட்டது. அதுதான் பாஷோ. ஜப்பானிய மொழியில் பாஷோ என்றால் வாழை.

அவர் சிறுவயதில் சாமுராய் (போர்க்கலை) பயிற்சி எடுத்துக்கொண்டவர். அவருக்குப் பயிற்சி கொடுத்த ஆசிரியர் இலக்கியங்களின் மீது ஈடுபாடு கொண்டவர். அதனால் இவருக்கும் இலக்கியம், கவிதை இவற்றின் மீது ஈடுபாடு இயல்பாகவே ஏற்பட்டுவிட்டது. சாமுராயாகக் கொஞ்ச நாள் இருந்துவிட்டு, பின் அதைத் துறந்து முழுநேரக் கவிஞராகவே மாறிவிட்டார் பாஷோ.

ஹைக்கூ கவிதை வடிவத்தை அதன் மரபார்ந்த வடிவமான ரென்கோ வடிவத்தில் எழுதிவந்தவர் பின் ஹொக்கு எனப்படும் மூவரிகளில் எழுதத் தொடங்கினார். ஹைக்கூவை இப்போது இருக்கும் எளிய வடிவத்திற்குக் கொண்டு வந்ததில் பாஷோவிற்கு முக்கியப் பங்கு உண்டு என்று கூறுகிறார்கள்.

இந்த ஹைக்கூ கவிதைகளை எழுதுவதற்காக ஊர் ஊராகப் பயணம் போவதை வழக்கமாக்கிக் கொண்டார் பாஷோ. ஆகவே அவருடைய வீடு பெரும்பாலும் பூட்டியே கிடக்கும். பின்னாளில் கிராமத்திலிருந்து நகர்ந்து நகரத்திற்குச் சென்றுவிட்டார் என்கிறார்கள். அங்கே இவருடைய சீடர்கள் சிலர் சேர்ந்து ஒரு வீட்டை பாஷோவுக்கு வழங்குகிறார்கள். அங்கே அவர்கள் கூடி ஹைக்கூ கவிதைகளைப் படைத்திருக்கிறார்கள். அவற்றைப் பாஷோவே தொகுத்து வெளியிட்டிருக்கிறார். இப்போதும்கூட அந்த வீட்டுக்குக் கவிஞர்கள் வந்து கூடி தங்கள் கவிதைகளை வாசித்துப் பகிர்ந்துகொள்வதை ஒரு திருவிழா போல் கொண்டாடுகிறார்கள்.. என்று நான் கேள்விப்பட்ட, படித்த விஷயங்களை அவை உண்மையா? பொய்யா? கதையா? கற்பனையா? என்று எந்த ஆதாரமும் இல்லாமல்.. ஆனால் ஒரு கவிஞன் இப்படி வாழ்ந்தான் என்று நினைப்பதே எனக்கு ஒரு மகிழ்ச்சியை உண்டாக்குகிறது.. என்றெல்லாம் படைப்புக் குழுமம் ஜின்னாவுடன் பகிர்ந்துகொண்டேன். அப்போதுதான் அவர் ‘உங்கள் பக்கத்து வீட்டுக்காரரைப் பற்றிச் சொல்வதைப்போல் பாஷோவைப் பற்றிக் கூறுகிறீர்களே’ என்று சொல்லி `இந்தப் புத்தகத்திற்கு ‘பாஷோ என் பக்கத்து வீட்டுக்காரர்’ என்று தலைப்பு வையுங்கள்` எனக் கூறினார். அது எனக்கும் பிடித்துவிடவே என் புதிய ஹைக்கூ நூலுக்கு அத்தலைப்பையே சூட்டிவிட்டேன்.

ஒரு ஞானியின் அருகாமையில் நான் போய்ச் சேர்ந்துவிட்டேன் என்ற மகிழ்ச்சியை இந்தத் தலைப்பு எனக்குத் தருகிறது.

ஹைக்கூ கவிதை மீது ஈடுபாடு கொண்ட அனைவருமே பாஷோ வீட்டுக்குப் பக்கத்து வீட்டுக்காரர்கள்தான். அவர் கவிதை ஒவ்வொன்றும் ஒரு ஞான வாசல். அதில் நுழையும் ஒவ்வொருவரும் பாஷோவுக்குள் நுழைகிறோம்.

வாழைமரம் இப்போது போதிமரமாக மாறிவிட்டது எனக்கு. அதன் நிறம், வடிவம், அசைவு, காய், கனி, இலை எல்லாவற்றிலும் பாஷோ தெரிகிறார். அதன் ஒவ்வொரு கட்ட வளர்ச்சியும் ஒரு பொருளை உணர்த்துவதாகத் தோன்றுகிறது. கன்றை ஈன்றபின் தான் இல்லாமல் போகும் அதன் இன்மையும் ஒரு பொருளைச் சொல்கிறது. அதனால்தான் ஓஷோ போன்ற மகா ஞானிகள் எல்லாம் பாஷோவின் ஒரு கவிதையை வைத்துக்கொண்டு நீண்ட உரை நிகழ்த்த முடிகிறது.

## பாஷோ என் பக்கத்து வீட்டுக்காரர்

*(ஹைக்கூ கவிதைகள்)*

***

யாருமற்ற நீர்நிலை
தன் பிம்பத்தைத்
தானே பருகுகிறது
தனித்து நிற்கும் மாடு.

*

நீர் இறைத்தேன்
வெளி உலகைக் காண வந்தது
கிணற்றுத் தவளை.

*

முத்தமிட்டுக் கொள்கின்றன
தொட்டி மீன்கள்
சிலிர்க்கிறது தண்ணீர்.

*

மணிச் சத்தம் கேட்கிறது
நான் மட்டும் தனியே
வண்டி மாடுகள்
போன பாதை.

*

ஆற்று மணலைத் தேடி
ஊருக்குள் நுழைந்தது
ஆறு
மழை வெள்ளத்தில்.

•

குயிலின் குரலை விட
இனிது
காகமே உன் தாய்மை.

*

யானை மறந்தது தன்னை
பாகன் பெற்றான்
யானை பலம் .

*

கவிதை கொடு
மீன் தருகிறேன்
வாசம் பிடித்து வந்த பூனையே.

*

அலை ஓசையில் கலக்கிறது
மணியோசை
கடற்கரை தேவாலயத்தில்
பிரார்த்தனை.

*

செக்கு மாடுகள்
கடிகார முட்கள்
நாம்.

*

பூநாகம் இருப்பது தெரிந்தும்
விலகவில்லை
பூ மோகம்.

*

சுழல் காற்று
பறக்கும் இறகுகள்
உயிர்த்தெழுகிறது
செத்த கோழி.

*

சத்தம் அடக்கிப் போகிறது
சைரன் வைத்த கார்
எதிரில் பிண ஊர்வலம்.

*

யார் பெரியவர் யார் சிறியவர்
பயணம் செய்ய குதிரை
பாரம் சுமக்கக் கழுதை.

*

கோயில் மணியோசை
கூடவே பயணிக்கின்றன
புறாக்கள்.

*

மொட்டைப் பாறை
உப்புக் கடல்
வராமலில்லை
சூரியனும் சந்திரனும்.

*

சிறுகதை

தமிழன் சங்கர்
ஓவியங்கள் : அன்பழகன்



# பொக்கிசம்

என்னோட மகள் என்கிட்ட ஹேர்பின் கேட்டாள். அப்ப 'அது டிரஸிங் டேபிள்ல இருக்கு.. எடுத்துக்க'ன்னு நான் சொன்னேன். அவ கொஞ்ச நேரத்துல 'அம்மா தேடிப்பாத்துட்டேன், கெடைக்கல' னு சொல்லிட்டு என்னோட ஹேண்ட் பேக்கை எடுத்துட்டு வந்து அதுக்குள்ள தேட ஆரம்பிச்சா.

'என்கிட்டக் கொடு. நான் எடுத்துத்தாறேன்'னு சொன்னேன். அதுக்கு அவ 'இல்லமா உனக்கு என்னாத்துக்குச் சிரமம்? நானே எடுத்துக்கிறேன்'னு சொன்னாள். நான் 'அது ஒண்ணும் சிரமமில்ல, நானே எடுத்துத்தாறேன்'னு கொஞ்சம் கண்டிப்புடன் சொன்னேன்.

அதுக்கு 'அம்மா பொண்ணுக்குள்ள என்ன.. நான் உன் பேக்கைத் தேடிப்பாக்கக்கூடாதா'ன்னு சொன்னா.. நான் 'தாயும் பிள்ளையானாலும் வாயும் வயிறும் வேறதான்.. உனக்குன்னு ஒரு பெர்சனல் இருக்கு. உன் செல்போன நான் கேட்டா தருவியா... அதுமாதிரி ஒவ்வொருத்தருக்கும் பெர்சனலா சில இருக்கும். அதை மத்தவங்க புரிஞ்சிக்கணும்'னு சொல்லும்போது என்னோட அம்மா நெனப்பு வந்துச்சு....

அப்பயெல்லாம் இந்த ஹேண்ட்பேக் கெடையாது. ஒரு சுருக்குப்பைதான் எல்லார்கிட்டயும் இருக்கும். அதுதான் பர்ஸ். காசுபணம் வைச்சிக்கிற, இல்ல போற எடங்கள்ல தோடுமூக்குத்தி கழட்டி வைச்சிக்கிற, வெத்தலபாக்கு வைச்சிக்கிற எல்லாத்துக்குமான ஒரே சுருக்குப்பை. காசு இருந்தா அம்மாவோட இடுப்புல சொருகி இருக்கும். ஆரும் அதைத் தொட்டுட முடியாது. காசு இல்லாதப்பத் தனியா எங்கயாவது வீட்டுக்குள்ள கெடக்கும்.

இதுபோக அம்மா அதுக்குன்னு ஒரு டிரங்குப் பெட்டி வைச்சிருக்கும். அதுக்கு ஒரு டைகர் பூட்டுப் போட்டு அதோட சாவிய தன்னோட தாலில மாட்டிருக்கும். அம்மாவைத் தவிர அதை யாரும் தொறந்து பாத்துற முடியாது. யாராவது தெரியாமத் தொறந்தா அம்மா கண்டுபிடிச்சிடும். கன்னாபின்னான்னு திட்டும். அதுக்குப் பயந்துக்கிட்டு யாரும் அதைத் தொடமாட்டாங்க....

அதுக்குள்ள என்ன இருக்கும்னு எனக்குத் தெரிஞ்சிக்க ஆசை. ஆனா அம்மா சாவிய யாருக்கும் குடுக்காது. அப்பாகூட கிண்டல் பண்ணுவாரு. ‘அது அவளோட பொக்கிசம்.. யார்கிட்டயும் காமிக்கமாட்டா. கட்டுன புருசன் என்னையே அந்தப் பொட்டியத் தொடவிட மாட்டா.. அதுக்குள்ள அப்புடி என்னதான் இருக்குதோ’ன்னு கிண்டல் பண்ணுவார்.

அதுக்கு அம்மா, ‘ஆமா தங்கமும் வைரமும் நீங்க வாங்கிக்குடுத்ததை அதுக்குள்ள ஒளிச்சி வைச்சிருக்கேன்’னு மோவாய தோள்ல இடிக்கும்...

ஆனா அப்புடிச் சொல்லுச்சே ஒழிய அதுக்குள்ள சில தங்கத்தினாலான பொருள்களும் இருந்துச்சு. ஒடைஞ்ச தோடு மூக்குத்தி மோதிரம் எல்லாம் அதுக்குள்ள ஒரு பெருங்காய டப்பாக்குள்ள போட்டு வைச்சிருக்கும். நகைக்கடைக்கிப் போகும்போது அதை வெளிய எடுத்துட்டு வந்து பாத்து அதைக் கொண்டுபோய்ப் போட்டுட்டு வேற மாத்திட்டு வரும். மத்தபடி அதுக்குள்ள நெறையாப் பொருள்கள் இருக்குற மாதிரிதான் இருந்துச்சு...

எனக்கு மொத மக பொறந்தப்ப அப்பா கையில கொஞ்சம் காசுத் தட்டுப்பாடு. அப்ப பொறந்த கொழந்தைக்கி கொலுசும் அண்ணாக்கயிறு அரசிலையும் வாங்கிப்போடணும்.. அப்பா கொஞ்சம் திணறினாரு... அப்ப அந்தப் பொட்டிக்குள்ள இருந்து வெளிய வந்துச்சு வெள்ளி அண்ணாக்கொடி, ஒடஞ்சகொலுசு அப்புறம் அரசில... நான் ஆச்சர்யத்தோட கேட்டேன், ‘யாரோடது அது’ன்னு. அப்ப அம்மா சொல்லிச்சி, அது அம்மாவுக்கு அவங்க தாத்தா வாங்கிப்போட்டதாம்.. ‘அவர் ஞாவகமா இம்புட்டு நாள் வைச்சிருந்தேன்... பேத்திக்கின்னு வந்தவன்ன வெளிய வந்துருச்சு. அதை அழிக்க மனசில்ல. என்னா பண்ணுறது’னு சோகமாச் சொல்லிச்சி.

அதுக்கடுத்து என்மக எங்க அம்மாகிட்ட ‘ஊருக்குப் போறேன் பாட்டி’ன்னு சொன்னப்ப அது போய் அந்தப் பொட்டியக் கொடஞ்சி ஒரு நூறு ரூவாய கொண்டாந்து குடுத்துச்சு... ரொம்பப் பழசா இருந்துச்சு. அந்த நோட்டு ஏதோ ஞாவகத்துக்கு வைச்சிருக்கும் போல. நான் ‘வேணாம்மா இருக்கட்டும்’ன்னு சொன்னேன். ‘பரவாயில்ல, பேத்திக்குத்தான குடுக்குறேன்... போகும்போது கொண்டுட்டா போகப்போறேன்’னு சொல்லிச்சி...

வீட்டுல யாரும் இல்லாதபோது அந்தப் பொட்டிய தொறந்து வைச்சி என்னத்தயாவது பண்ணிக்கிட்டு இருக்கும். ஆளுக இருக்கும்போது தொறக்காது. ஒருவேளை நாங்க உள்ளாற போயிட்டா வெரட்டும்.. ‘போங்கடி வந்துட்டாளுக.. மோப்பம் புடிக்க’ன்னு.

ஒருநாள் அம்மா அவங்க ஊருக்குப் போயிருந்தப்ப எனக்கு ஒரு ஆசை வந்துச்சு. அதை எப்புடியும் தொறந்து பாத்துறதுன்னு. என்னோட கூடப்படிக்கிற புள்ள ஒண்ணு இந்தப் பூட்டு தொறக்கிறதுல கில்லாடி. ஊக்கு அல்லது ஹேர்பின் வைச்சே தொறந்துடுவா... அவ சொன்னா ‘நான் வந்து தொறந்து தாறேன்’னு.

அப்பாவும் வீட்டுல இல்ல. நான் மட்டும்தான் தனியா இருந்தேன். அப்ப அவளை வரச் சொல்லி வெளிக்கதவை எல்லாம் தாப்பாப் போட்டுட்டு ரகசியமா அந்தப் பொட்டியத் தொறந்து பாக்க முயற்சி பண்ணுனோம்.. அவ்வளவு சிரமமா இல்ல அத தொறக்கிறது. அவ தொறந்துட்டா. ஆனா நான் சொன்னேன், 'தொறந்ததுக்கு நன்றி. ஆனா அது எங்கம்மாவோட பொட்டி. நான் அதைப் பாக்குறதே தப்பு. ஒன்னயவும் வைச்சிக்கிட்டுப் பாத்தா நல்லாருக்காது'ன்னு சொல்லி அவள வெளிய அனுப்பிச்சிட்டு வரலாமுன்னு போனேன்.

வெளிய அனுப்ப வந்தா எதுத்த வீட்டுப் பொன்னுத்தாயி வந்துருச்சு. 'என்னாமா பண்ணுற'ன்னு விசாரிச்சிக்கிட்டு. அம்மா 'அவள்ளாம் வந்தா உள்ளாற விட்டுறாத. என்னத்தையாவது தூக்கிட்டுப் போயிடுவா'ன்னு ஏற்கனவே சொல்லிருக்கு.



அதுனால உசாராகி 'அத்த.. வீட்டுல யாருமில்லை'ன்னு சொன்னேன். அதுக்கு 'இல்லாட்டினா என்ன ஒரு வா தண்ணி குடுக்கமாட்டியா'ன்னு கேட்டுச்சு. நான் 'இருங்க கொண்டுவாறேன்'னு சொல்லி அடுக்களைக்குப் போகும்போது பின்னாடியே வந்துருச்சு. திரும்பிப் பாத்த எனக்குத் தூக்கிப்போட்டுருச்சு... அங்கதான் பொட்டி வேற இருந்துச்சு.

'நான் வெளியே போகப்போறேன்'னு சொல்லி அவங்களை வெளிய அனுப்பிட்டுக் கதவைச் சாத்திட்டு அவங்ககிட்ட சொன்னதுக்காக வெளியே கௌம்பினேன். போய்ட்டுக் கொஞ்ச நேரத்துல திரும்பி வந்தா அம்மா வாசல்ல ஒக்காந்துருக்கு. 'ஏண்டி எங்கடி போன.. எம்புட்டு நேரமாக் காத்துருக்குறது'ன்னு கோவமாக் கேட்டுச்சு.

எனக்கு உயிரே போச்சு. அய்யோ உள்ள பொட்டி வேற தொறந்துகெடக்கு. அம்மா பாத்துச்சுன்னா அம்புட்டுத்தான்னு வயித்தைக் கலக்குச்சு... வசமா மாட்டிக்கிட்டேன். அம்மா வீட்டுக்குள்ள போனவன்ன பொட்டி அது கண்ணுல பட்டிருச்சு.

ஒடனே என்னப் பாத்துச்சு... நான் அழுக ஆரம்பிச்சிட்டேன். 'அம்மா தப்புப் பண்ணிட்டேன். உங்க அனுமதி இல்லாம பொட்டிய தொறந்திட்டேன். என்ன மன்னிச்சிருங்கம்மா'ன்னு அழுதேன். 'எப்புடி பூட்டைத் தொறந்த'ன்னு கேட்டுச்சு. அதுக்கு நான் பிரண்டு தொறந்து குடுத்ததச் சொன்னேன்.. அப்பத்தான் அம்மா மொகம் மாறிச்சி. 'எதுக்குடி கண்டவள எல்லாம் உள்ளாற கூட்டிட்டு வந்து காமிக்கிற. ஒருத்தரப் போல ஒருத்தர் இருக்கமாட்டாங்கடி..'ன்னு சொல்லிக் கோவமா வெளக்குமாற எடுத்து வெளாசிடுச்சு. இனிமே செய்வியா செய்வியான்னு பொழந்துடுச்சு... வெளக்கமாறே பிஞ்சுப் போச்சு. நான் மூலையில ஒக்காந்து அழுதுக்கிட்டே இருந்தேன்.

கொஞ்ச நேரத்துல அதுவே சமாதானம் ஆகி என்கிட்ட வந்துச்சு.. 'அம்மா மேல கோவமா'ன்னு கேட்டுச்சு. அப்ப நான் கோவமா,

‘அடிக்கிறதையும் அடிச்சிப்புட்டு கோவமான்னு கேள்வி வேறையா.. நான் அப்பாகிட்ட சொல்லி ஒன்ன அடிக்கச் சொல்றேன்’னு அழுதுகிட்டே சொன்னேன். அப்ப அம்மாவும் கண்ணீர் விட்டுச்சு. ‘ஒன்ன அடிக்கணும்னு எனக்கு ஆசையா... இதுமாதிரி தப்பு இனிமே நடக்கக்கூடாதுன்னுதான் அடிச்சேன். அம்மாவ மன்னிச்சிரு’ன்னு சொல்லி கண்ணத் தொடைக்க வந்துச்சு.

நான் ‘என்ன தொடாத. உன் பொட்டிய தொட்டதுக்கு இந்த அடி அடிச்சல்ல. என்ன ஏன் தொடுற போ போ’ன்னு கத்துனேன்.. அப்ப அம்மா ‘என் செல்லமுல்ல.. உனக்குப் பொட்டியப் பாக்கணும், அம்புட்டுத்தான. நானே காமிக்கிறேன்’னு சொல்லி என் கையப் புடிச்சிக் கூட்டிட்டுப் போய் ஒக்காரச் சொல்லிப் பொட்டிய தொறந்துச்சி.

அதுக்குள்ள சின்னச் சின்ன டப்பாவா இருந்துச்சு. அதுக்குள்ள வெள்ளில ஆன சொம்புக் கிண்டி (பால் குடுக்குறது) அப்புறம் சின்னச் சின்ன சிமிழ்கள் எல்லாம் இருந்துச்சு. இதெல்லாம் அம்மாவுக்கு அவங்க அம்மா குடுத்ததுன்னு சொல்லிச்சி. அப்புறம் ரெண்டு மஞ்சப்பை முடிஞ்சி வைச்சிருந்துச்சு.. அப்புறம் ஒரு டப்பாக்குள்ள ஒரு ரூவாக் காசு ஒண்ணு கருப்பா இருந்துச்சு. அதக் கையில எடுத்தவன்ன அம்மா கண்ணு கலங்கிடுச்சு, அழுக ஆரம்பிச்சிடுச்சு. நான் ஏன்னு கேட்டேன். அப்ப அம்மா சொல்லிச்சி அந்தக் காசு அவங்க அம்மா இறந்தப்ப நெத்தில வைச்ச காசுன்னு. சுடுகாட்டுக்குப் போய் மறுநாள் சாம்பல் எடுக்கும்போது கெடைச்சது... அத அவங்க அம்மா ஞாவகமா வைச்சிருக்கேன்னு சொல்லிச்சி.

அவங்க அம்மா ஞாவகம் வரும்போதெல்லாம் அந்தக் காசை எடுத்துப் பாத்துட்டு கண்ணீர் விடுமாம். அது உள்ளங்கையில இருக்குறப்ப அம்மாவே கையப் பிடிச்சிருக்குற மாதிரி உணருமாம்.. அதைச் சொல்லும்போது அம்மா கண்ணு கலங்கிடுச்சு..

‘அம்மா நெனவா இப்ப இருக்குறது இந்தப் பொருள்கள்தான். அதுகூட இருந்தா என் அம்மாவே இருக்குறமாதிரி’ன்னு சொல்லிச்சி. நானும் கண்ண தொடச்சிக்கிட்டேன்.

அப்புறம் சில வருசங்களுக்கு அப்புறம் அம்மாவுக்கு முடியலன்னு அப்பா சொன்னார். பாக்கப்போயிருந்தேன்.. அம்மா பக்கத்துல ஒக்காரவைச்சி தலையத் தடவிக் குடுத்துக்கிட்டே, ‘நான் ரொம்ப நாள் இருக்கமாட்டேன். உள்ளாற போய்ட்டு அந்தப் பொட்டிய எடுத்துட்டு வா’ன்னு சொல்லிச்சி.

நானும் எடுத்துட்டு வந்து குடுத்தேன். அத என்கிட்டயே குடுத்துட்டு சாவியையும் கழட்டிக் குடுத்துச்சு.. ‘இதை என் ஞாவகமா வைச்சிக்க. இதுக்குள்ள இருக்குறது எல்லாம் சாதாரணமான பொருள்கள்தான். ஆனா அதோட இணைஞ்சிருக்குற சம்பவங்கள் அதுக்குள்ள இருக்கும்..

அது அவங்க அவங்களுக்குத்தான் தெரியும். என்னோட அத்தனை நினைவுகளும் உள்ள இருக்கு. அது பாக்குறவங்க கண்ணுக்குத் தெரியாது. எனக்குத்தான் தெரியும்... எல்லாப் பெண்களும் அப்படித்தான். தன்னோட நினைவுகளை இதுமாதிரி தனியா வைச்சிருப்பாங்க. அதுக்குள்ள அவங்க கனவுகள் காயங்கள் எல்லாம் கெடக்கும்..

அந்தக் காயங்கள் கனவுகள் எல்லாம் அதோட புதைக்கப்படும். ஏன்னா இன்னும் இந்தச் சமுதாயத்துல தான் நெனைக்கிறத ஆசைப்படுறத தைரியமா சொல்லுற வாய்ப்புக் கெடைக்கல. சொன்னாலும் அவை ஏத்துக்கப்படுறதும் இல்ல.. உன் வாழ்க்கையின் முடிவில அது உனக்குப் புரியும்’ன்னு சொல்லிக் குடுத்துச்சு. அப்ப அம்மாவோட கண்ணுல இருந்து தண்ணி ஊத்துச்சு. என்னாலயும் கண்ணீரை அடக்கமுடியல. அம்மாவோட காலடில அழுதுக்கிட்டே சாஞ்சேன்.. எனக்கும் ஒரு பொட்டி இருக்குன்னு நெனச்சபடி.

■

**கவித்துளி**

மழை வேண்டி யாகம்
எரிந்து கொண்டிருந்தது
மரம்!

– த. ரவீந்திரன்

● கரிகாலன்

# தேநீர் சாலை



**இலக்கிய நோபல்,**

**தெரிவிக்கும் செய்தி!**

~

இம்முறை (2021) நோபல் விருது ஞாபகத்தில் தங்கக்கூடிய ஓர் எழுத்தாளருக்குக் கிடைத்திருக்கிறது. அவர் அப்துல் ரஸாக் குர்னா. இங்கிலாந்தின் கெண்ட் பல்கலைக்கழகத்தில், ஆங்கிலம் மற்றும் பின் - காலனித்துவம் கற்பிக்கும் பேராசிரியர்.

குர்னா, தான் பிறந்த சான்சிபர் சுல்தானில் (தற்போது தான்சேனியா) நிகழ்ந்த அரசியல் மாற்றத்தைத் தொடர்ந்து, 18வது வயதில் (1968) இங்கிலாந்துக்கு அகதியாக வந்தவர். அங்கு, கேண்டர்பரி கிறிஸ்ட் சர்ச், கெண்ட் பல்கலைக்கழகங்களில் பயின்றவர். மனிதர்கள் தம் தேசத்தை விட்டு அகதிகளாகப் புதிய நாடுகளில் குடியேறுகிறார்களே தவிர, ஒவ்வொரு நாளும் மனதில் தம் தாய் நிலத்தைச் சுமந்தபடியே உழல்கிறார்கள்.

அவர்களுடைய புனைவு வெளியில், இளம்வயதில் விட்டுவந்த அவர்களது தேசமே விரிந்து கிடக்கிறது. குர்னாவுக்கும் அப்படித்தான்.

அவருக்கு இப்போது வயது 72. தன் வாழ்நாளின் நெடும்பரப்பை இங்கிலாந்தில்தான் கழித்திருக்கிறார். ஆங்கிலப் பேராசிரியர். இருப்பினும் அவர் தன் தாய்மொழியான சுவாஹிலி மொழி வாயிலாகவே சிந்தித்து ஆங்கிலத்தில் எழுதுகிறார்.

சுவாஹிலி, தென்னாப்பிரிக்க நாடுகளான தான்சேனியா, உகாண்டா, ருவாண்டா, சாம்பியா, மோசாம்பிக் போன்ற பகுதிகளில் பேசப்படும் மொழி.

குர்னாவின் எழுத்துக்கள் பெரும்பாலும் இடப்பெயர்வின் வலியைப் பேசுபவை. இடப்பெயர்வு, குடியேற்றம், காலனிமயம் போன்றவை இவரது கருப்பொருட்கள். யுத்தத்தால் வெளியேறியவர்கள், வளரும், வளர்ந்த நாடுகளில் அனுபவிக்கக்கூடிய மனநெருக்கடியில் இருந்து உருவானவை இவரது புனைவுகள்.

இவரது கதைகளின் மாந்தர்கள் பெரும்பாலானோர் சான்சிபரில் பிறந்தவர்கள். குறிப்பாக கிழக்கு ஆப்பிரிக்க நாயகர்களைச் சர்வதேசப் பின்னணியில் வைத்து அணுகுபவை இவரது படைப்புகள்.

மாறிவரும் உலகின் தவிர்க்க முடியாத மனிதர்களாக ஆப்பிரிக்கர்கள் விளங்குவதை உறுதி செய்யும் புனைவுகள் இவருடையவை.

கிழக்கு ஆப்பிரிக்க மக்களுக்காகத்

துடிக்கும் ஒரு இதயத்தை, இவரது கதைகளை வாசிப்பவர் காணமுடியும்.

அதிகம் வாசிக்கப்படாத, கேட்கப்படாத மக்களைத் தெரிந்துகொள்ளும் துடிப்பு உலகு தழுவிய நவீன வாசகர்களிடம் இன்று காணப்படுகிறது.

குர்னா பிரிட்டன் குடியுரிமை பெற்றவர். இருந்தபோதும் அவர் ஆப்பிரிக்க எழுத்தாளராகவே அறியப்படுகிறார். அதன் பொருட்டே அவர் நோபல் விருதுக்கும் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்.

மனதளவில் தான் தான்சேனியாவில் வசிப்பதாகவே குறிப்பிடுகிறார் குர்னா.

ஒரு எழுத்தாளர் இழந்தவற்றை மீளப்பெறும் முயற்சியாகத் தன் புனைவை உருவாக்குகிறார். தன்னுடைய மொழியை, தன்னுடைய நிலத்தை, தன்னுடைய பண்பாட்டை, குர்னா இங்கிலாந்திலிருந்தபடி, மீண்டும் மீண்டும் தன் புனைவுகளில் எழுப்பியபடி இருக்கிறார்.

அப்துல் ரஸாக் குர்னாவின் உடலுக்கும் ஆன்மாவுக்கும் உள்ள இடைவெளியிலிருந்து அவரது படைப்புகள் உருவாகிச் செழிக்கின்றன.

சிறந்த உலகப் படைப்புகள் எழுத்தாளருடைய தாய்மொழிச் சிந்தனையிலிருந்தும், அவர் வாழும் வட்டாரத்தைப் படைப்பதிலிருந்துமே உருவாக்கப்படுகின்றன என்பது மீண்டும் ஒருமுறை நிரூபணமாகியிருக்கிறது!

• •

### புக்கர் பரிசு

~

டாமன் கல்கட்டின் *(Damon Galgut)* ‘தி பிராமிஸ்’ நாவலுக்குப் புக்கர் கிடைத்த செய்தியை இன்றைய தினமலரின் கடைசிப் பக்கத்தில் குட்டியாய்ப் போட்டிருந்தார்கள்.

தென்னாப்பிரிக்காவில் உள்ள ஸ்வார்ட்ஸ் குடும்பத்தின் நான்கு தசாப்தங்களைப் பேசும் கதை. இந்த ஆண்டு இப்புதினத்துக்குப் புக்கர் கிடைக்கும் எனும் எதிர்பார்ப்பு பரவலாக




இருந்ததால் இந்நாவலை பிடிஎஃப் வடிவத்தில் அங்கே கொஞ்சம், இங்கே கொஞ்சம் படித்திருந்தேன்.

கூடுதலாக ஒரு விசயம். இலங்கையைச் சேர்ந்த அனுக் அருட்பிரகாசம் எழுதிய ‘ஏ பாஸேஜ் நார்த்’ நாவலும் புக்கர் ரேசில் இருந்தது.

தி பிராமிஸ் புதினத்தில் சலோமி என்கிற கருப்பின வேலைக்காரிக்கு இக்குடும்பத்தின் மூதாதை ஒரு வாக்குறுதி கொடுத்திருப்பார்.

அவரது வாரிசுகள் நிறைவேற்றாமல் அதைத் தாமதப்படுத்துகிறார்கள். நிறவெறிக்குப் பிந்தைய தென்னாப்பிரிக்காவின் உருவகமாக தி பிராமிஸ் புதினம் விளங்குகிறது.

இதன் வடிவ அமைப்பு, மொழிநடை போன்றவற்றில் வில்லியம் பால்க்னர், வர்ஜீனியா வூல்ஃப் மற்றும் ஜேம்ஸ் ஜாய்ஸ் போன்றோரின் செல்வாக்கு இருப்பதாக விமர்சகர்கள் கருதுகிறார்கள்.

கனவில் நடப்பது போன்ற சாயலைக் கொண்ட நவீன நாவலிது. வாசிப்பவர்களின் சமூகப் பார்வைக்கு ஏற்ப வளர்ந்துகொண்டிருக்கிற புதினம். தென்னாப்பிரிக்காவில் சலோமியோ

முதனையில் செங்கேணியோ (பார்வதி) நடந்த அநீதிகளுக்குக் காலம் ஒருநாள் கணக்கு தீர்க்கும்!

## காதலின் பரிணாமங்கள்!

காதலில் மூன்று நிலைகள் இருக்கின்றன. அவை 1. காமம் 2. கவர்ச்சி 3. இணைவது. இதில் ஆண் விரும்புவது இன்பத்தையும், சந்ததி விருத்தியையும். ஆனால் பெண் விரும்புவது பாதுகாப்பை.

தோற்றத் தூண்டுதலால் (*Visual stimulation*) எழும் காதல் உணர்வு தற்காலிகமானது. இதன் விளைவால்தான் மோகம் முப்பது நாள்; ஆசை அறுபது நாள் போன்ற பழமொழிகள் தோன்றுகின்றன.

காதலிக்கும்போது இருந்த ஆசை, அன்பு, அக்கறையெல்லாம் கல்யாணத்துக்குப் பிறகு என்னவாயிற்று? பெண் சந்தேகம் கொள்கிறாள்.

காதல் நாட்கள் வேறு. திருமணம் ஆனபின் எதிர்கொள்ளும் நாட்கள் வேறு. காதலிக்கும்போது காதலனாகத் தெரிந்தவன், திருமணத்துக்குப் பிறகு வழமையான ஆணாகத் தெரிகிறான். இத்தகைய ஏக்கங்களை நாம் காலம் காலமாகக் கேட்கிறோம்.

மிளைக் கந்தனார் என்றொரு புலவர். சங்கப்பாடலில் ஒரே ஒரு பாடல் மட்டும் எழுதியவர். காதலின் *monotonous* பற்றித் தன் பாடலில் சிந்தித்திருக்கிறார்.

'வேம்பின் பைங்காய்என் தோழி தரினே
தேம்பூங் கட்டி என்றனிர் இனியே
பாரி பறம்பின் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கள் தண்ணிய தரினும்
வெய்ய உவர்க்கும் என்றனிர்
ஐய அற்றால் அன்பின் பாலே.'

(குறுந்தொகை 196)

தலைவன் மீது தலைவி கோபமாக இருப்பதைத் தோழி கூறுகிறாள். `ஐய! முன்பெல்லாம் தலைவி வேம்பின் பச்சைக் காயைத் தந்தாலும், இனிய வெல்லக்கட்டி என்று பாராட்டுவாய். இப்போதோ, பாரியுடைய பறம்பு மலையின் சுனையிலூறிய குளிர்ந்த நீரைத் தந்தாலும், சூடான, உவர்ப்புச் சுவை உடையதாகக் கூறுகிறீர். உமது அன்பின் இயல்பு மாறிவிட்டதே!` என வருத்தப்படுகிறாள்.

காதல் தோற்றம் கண்டு தோன்றியிருக்கலாம். ஆனால் மார்புக் கச்சு பார்த்து வளர்வதில்லை காதல். மணமான பின் காதலில் உருவாகும் அடுத்த பரிணாமத்தை நற்றிணை 166இல் காணமுடிகிறது.

தலைவன், `பொன்னைப் போன்றது உன் உடம்பு! மணியைப் போன்றது உன் மணம் வீசும் கூந்தல்! குவளை மலரைப் போன்றது உன் மையுண்ட கண்கள்! மூங்கிலைப் போன்றன உன் அழகுமிக்க தோள்கள்! எல்லாவற்றையும்விட நீ பெற்றுக் கொடுத்த மகவு வீதியில் விளையாடுகிறது. நீ என் அறத்தெய்வம். உன்மீது நான் கொண்ட காதல் கடலைவிடவும் பெரிது!` என்கிறான்.

ஆண், பெண் உறவின்போது இருவிதமான ஹார்மோன்கள் சுரக்கின்றன. *Oxytocin* ஹார்மோன் உடலில் உணர்ச்சிகளை எழுப்புவது. அதேவேளை உறவு உச்சத்தை அடையும்போது *Vasopressin* ஹார்மோன் சுரக்கின்றது. இது துணை மீதான பாதுகாப்பை, உரிமையை உறுதி செய்கிறது.

நான் ஊருக்குப் போகும்போதெல்லாம் இப்படி கனிந்த நிலைக் காதலை என் பெரியப்பாவிடம் காண்கிறேன். எண்பதை நெருங்குபவர். பெரியம்மா முதிர்ந்து படுத்துவிட்டாள். அவளை ஒரு குழந்தையைப் போல் குளிப்பாட்டி, உடை மாற்றி உணவூட்டுகிறார். `காதல் தானும் கடலினும் பெரிதே!` என எழுதி வைத்துப்போனானே, பெயர்கூடத் தெரியாத ஒரு புலவன் நற்றிணையில்.. அந்தப் பாடலுக்கு உரையாக வாழ்கிறார் பெரியப்பா.

ஆசையோ, மோகமோ உதிர்ந்து விடுவதில்லை. அவை பாசமாக, பக்தியாகப் பரிணாமம் கொள்கின்றன. மனைமாட்சியாக மலர்ந்து மணம் சொரிகின்றன! ■

● ஆதிரன்

# மனநிலைக் குறிப்புகள்-14

## தத்துவ மனநிலை

அறுபதுகளின் கடைசியிலேயே சுற்றுச்சூழலை உளவியல் அடிப்படையில் அணுகவேண்டும் என்கிற கருத்தாக்கம் உருவாக்கப்பட்டுவிட்டது. அதனடிப்படையில் ‘சூழலியல் தத்துவம்’ *(Environmental philosophy)* என்பது மிகவும் விரிவாக உலகம் முழுவதும் பேசப்பட்டு வந்தது என்றாலும் இந்தியாவில் இது பற்றிய அடிப்படை உரையாடல்கள்கூட பெரிதாக இல்லை என்பதே உண்மை. எழுபதுகளில் சூழலியத் தத்துவம் ‘நாம் வாழும் பூமியில் மனிதனின் இருப்பும் அனுபவமும் மட்டும்தான் பிரதான அறமா?’ என்கிற கேள்வியைத் தன்னைத் தானே கேட்டுக்கொண்டு ஆராய முற்பட்டது. முக்கியமாக மேற்குலகில், மீமெய்யியல், அறிவாய்வியல் மற்றும் பிரபஞ்சவியல் ஆகியவற்றின் அடிப்படையிலும் இது தொடர்பான விவாதங்கள் நடந்தேறின. சில அறிஞர்கள் மனித இனத்தின் சூட்சுமம் ‘சூழலியல் தத்துவத்தில்’ உள்ளடங்கியிருக்கிறது என்று வாதிட்டார்கள். பூமியில் மனித இனத்திற்குப் பிரத்தியேகமான தனித்தன்மை மற்றும் அற மதிப்பீடு ஏதேனும் இருக்கிறதா என்பது பற்றிய ஆராய்ச்சிகள் தீவிரமடைந்தன. மொத்தத்தில் இந்த வகை உரையாடல்களில் ‘உலகம்’ என்பது பொதுவாக மனித இனம் ‘மனித-குவிய’ *(anthropocentric (human-centered))* நிலையில் உருவாக்கப்பட்ட ஒருதலைபட்ச வகை உருவாக்கம் என்பதை ஒப்புக்கொள்ளத் தலைப்பட்டார்கள். மனித சிந்தனையில், தத்துவார்த்த ரீதியாக ‘சுற்றுச்சூழலியம்’ தனி அறிவியல் ஆராய்ச்சிநிலை என்கிற அளவில் பெரிதாய் வளர்த்தெடுக்கப்பட்டது. ஒட்டுமொத்தமாக இந்தச் சிந்தனை, சூழலிய அமைப்பில் மனித இனம் கடந்த காலத்தில் அழித்த இயற்கை வளங்களை, சீர்கெட்டுப்போன உணவுச் சங்கிலி *(food chain)* மற்றும் பல்லுயிர் இருப்பு மற்றும் பெருக்கம் *(flora and fauna)* ஆகியவற்றை மீட்டுருவாக்கம் செய்யும் வழிமுறைகளைக் கண்டறியவும், தன்னிறைவாக்கம் *(sustainability)* மற்றும் நீண்டகாலப் பாதுகாப்புத் திட்டம் *(conservation)* போன்றவற்றை உருவாக்கும் குறிக்கோளுடன் செயல்படத் தொடங்கின. இதற்காகச் சூழலியல் தத்துவம் வரைமுறைப்படுத்தப்பட்டு அதற்கான அடிப்படை விளக்க நிலைகள் உருவாக்கப்பட்டன. விளைவாக ‘ஆழ்-சூழலியம்’ *(Deep Ecology)* என்கிற தத்துவ வகைப்பாடு உருவாக்கப்பட்டது. நார்வேனியச் சிந்தனையாளர் அர்ன் நியாஸ் *(Arne Naess)* மற்றும் ஜெர்மானியச் சிந்தனையாளர் ஃபெலிக்ஷ் கட்டாரி *(Pierre-Félix Guattari )* ஆகியோர் இவ்வகைச் சிந்தனைகளுக்கு முன்னோடிகளாகத் திகழ்கின்றனர். சூழலியல் தத்துவம் பிரதானமாக, மூன்றாகப் பிரிக்கப்பட்டது. வெளி சூழலியம் *(outer environment)* என்பது பூமியின் ஒட்டு மொத்த – மனித இருப்பு உட்பட- அனைத்து உயிரினங்களையும் உள்ளடக்கிய பூமிக்கிரகத்தின் இருப்பைப் புரிந்துகொள்ள முயல்கிறது. இரண்டாவதாகப் புறச் சூழலியம் *(external environment)* மனிதனால் உருவாக்கப்பட்ட உலகத்தை அதன் இயக்கநிலையை அதன் சாதகபாதகங்களைப் புரிந்துகொள்ள முயல்கிறது. மூன்றாவதாக மன-சூழலியம் *(mental envronment)* கற்றல் நிலையில் *(cognetive)* மனித உளவியல் அடிப்படையில்

முதலிரண்டு நிலையின் வேறுபாடுகளை அதன் சாத்தியங்களை மனித மனம் எவ்வாறு புரிந்துகொள்கிறது, அதன் விளைவுகளின் அறிவியல் என்ன என்பன போன்றவற்றை உளவியல் ரீதியாக ஆராய்வது. ஆக, இந்த மூன்று நிலைகளில் பல்வேறுவித ஆராய்ச்சிகள் உலகம் முழுவதும் உருவாகி நடைபெற்று வருகின்றன. எப்பொழுதும் போல இந்தியா குறைந்தது முப்பது ஆண்டுகாலம் பின்தங்கி இருக்கிறது. இத்தனைக்கும் குறைந்தது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சூழல் சார்ந்த தன்னிறைவடைந்த, முழுமையான இயற்கை சார்ந்த சமுதாயத்தைக் கண்ட துணைக்கண்டம் இது. ஆழ்-சூழலியத்தின் தத்துவத்தைப் புரிந்துகொள்ள நாம் பரிணாமத்தின் அடிப்படைகளைப் புரிந்துகொள்ள வேண்டும். சுற்றுச்சூழல் உருவாக்கம், இயற்கையின் ஒழுங்கு, பல்லுயிர்த் தன்மை, சூழலிய அமைப்பு, உயிரினங்கள் / தாவரங்கள் பற்றிய அறிவு, பூமியின் அமைப்பு, மனிதச் செயல்பாடுகளின் விளைவுகள் ஆகியவற்றை ஒட்டுமொத்தமாகப் புரிந்துகொள்ளுதலில் உருவாக்கப்படும் கூட்டறிவை *(collective knowledge)* பயன்படுத்துதல் என மிகவும் ஆழமான ஒரு தத்துவச் செயல்பாடாக உலகம் முழுதும் சூழலியல் தத்துவம் வளர்ந்துவருகிறது. ‘விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து உள்நின்று உடற்றும் பசி’ என்கிறான் வள்ளுவன். தமிழனின் இயற்கை அறிவைத் தொலைத்து நாசமாய்ப் போய்க்கொண்டிருக்கிறோம் என்றால் யாரேனும் பொய் என்று சொல்லக்கூடுமா? ஆயிரக்கணக்கான உயிரினங்கள் இந்தப் பூமியில் அருகிவருகின்றன. நூற்றுக்கணக்கான உயிரினங்கள் பூவுலகில் இருந்து அழிந்துகொண்டிருக்கின்றன. மற்றைமை இல்லாமல் மனிதன் இனமாகிய நாம் என்னவாகப்போகிறோம்?

••

## ஓவிய மனநிலை

நிழலையும் வெளிச்சத்தையும் சரியான விகிதத்தில் உருவாக்கும்போது உண்டாகும் உருவப் பரிமாணம்தான் ஓவியத்தின் அடிப்படை என்று ஓவியம் பற்றி ஓவியர்கள் பொதுவாக விளங்கிக்கொள்கிறார்கள். எளிய மனிதனுக்கும் ஒரு தத்துவவாதிக்கும் இடையில் என்ன வேற்றுமை இருந்துவிடப் போகிறது? அவன் ஒரு இடத்தில் அமர்ந்து எதற்காவது காத்திருப்பது என்பது ஒரு மனநிலை. வரலாற்றின் மிகச் சிறந்த ஓவியனெனப் பெயர் கொண்ட மனிதர்கள் மிகமிக அரிதானவர்கள். அதிலொரு மனிதன்தான் ரெம்ப்ராண்ட். பதினாறாம் நூற்றாண்டின் டச்சுக்காரன். இவனது ஓவியங்கள் இருளில் ஒளிர்பவை. தெளிவாகத் தெரியும் ஓவியத்திற்கும் முழுதும் மறைக்கும் இருட்டுக்கும் இடையில் மெல்லிய ஒளியில் துலங்கும் துல்லியம்தான் இவனின் ஒட்டுமொத்தப் பலம். மறைபொருளாய் இருட்டிலிருந்து வெளியேறும் ஒவ்வொரு பொருளும் அதன் மர்மத் தன்மையைப் பார்வையாளனுக்கு அளித்துக்கொண்டே இருக்கும். அவனின் ஓவியங்களில் இது எனக்கு மிகப் பிடித்தது. தத்துவவியலாளனின் காத்திருப்பு ஓவியம் என்பது எந்தக் காலத்திலும் நவீனமானதுதான் அல்லது நவீன ஓவியம் என்று தனியாக ஏதும் இல்லை. ஒரு முழுமையான ஓவியம் அனைத்துக் காலத்திற்கும் நவீனமாகவே இருக்கும். போலவே சமகால ஓவியம் என்பதிலும் எனக்கு ஐயம் உண்டு. எதிர்காலச் சிந்தனையோடு மிகுந்த புனைவுடன் உருவாக்கப்பட்ட அனைத்து ஓவியங்களும் கலைகளும் சமகாலத்திற்குட்பட்டவையே என்றால் மிகையல்ல. ரெம்ப்ராண்ட் நவீன சமகாலத் தன்மையுடைய ஓவியன் என்றால் நான் மறுக்கமாட்டேன்.



••

இலக்கிய மனநிலை

உலக வாழ்வியல் சிக்கல்களைக் காட்சிப்படுத்துதலின் வகைமைகள் தமிழ் சங்கத் தொகுப்பு நூல்களில் இல்லை என்றால் உலகின் வேறெந்த இலக்கியத்திலும் இல்லை என்று துணிந்து கூறலாம். தமிழ், வாழ்வைப் பொருள் மையமாகவே பார்க்கிறது. விளக்குகிறது. வாழ்வு என்பது ஒரு புறவயச் செயல்பாடு. அதை அகம் ஏழு, புறம் ஏழு எனப் பிரித்து அதற்கான நிலையான பொருள் விளக்கி ஐயாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ச்சியுடன் நின்று விளங்கும் தமிழின் எட்டுத்தொகை நூல்களில் ஒரு தொகுப்பு நூல் ஐங்குறுநூறு. ஐந்திணைகளுக்கும் நூறு நூறு பாடல்களென ஐந்நூறு பாடல்கள். கைக்கிளை மற்றும் பெருந்திணைப் பாடல்களைக் காலம் திட்டமிட்டு அழித்திருக்கும் என்பது எனது ஐயம். இதில் மருதத்திணையில், நூறு பாடல்கள் பாடியவர் ஓரம்போகியார் என்ற வில்லங்கமான பெயரைக் கொண்ட புலவர். தலைவன், தலைவியைப் புறந்தள்ளிப் பரத்தையிடம் செல்லும் போக்கிற்கு 'ஓரம் போதல்' என்று பெயர். இது மருவிச் சோரம் போதல் ஆயிற்று எனலாம். மருத நிலத்தில் பரத்தையர் நாடும் தலைவன் பண்பு விளக்கப்படுகிறது. நான் இங்கு குறிப்பது, ஓரம்போகியார் ஒரு விவசாயக் கிராமத்தில் எருமைகளின் முக்கியத்துவம் குறித்து எழுதியிருக்கிறார். பத்துப் பாடல்கள். எருமைப் பத்து என்ற தலைப்பில் இருக்கிறது. கழனியூர். அதாவது செழுமையான வயல்கள் சூழ்ந்த ஊர். அதைச் சுற்றிச் சிறுசிறு குளங்கள். பெரிய கோட்டைச் சுவர் கொண்ட ஊர். தோழிகள் சூழ தலைவி கொற்றப் பொய்கையில் நீராடுகிறாள். வழிப்போக்கன் தலைவன். பச்சைவயல் சூழ மீன் துள்ளும் பொய்கையில் நீராடுகிறார்கள். நிறைய எருதுகள் ஊடாடுகின்றன. இவற்றின் காட்சிகளின் பின்புலத்தில் பத்து தலைவிக் குறிப்புகள். 1. பெண் எருதும் ஆண் எருதும் மேய, ஆம்பல் பூத்த பொய்கையை உடைய கழனி ஊரனின் மகள், பழங்கள் பல பழுத்த கொடியின் பிணையல் இவள். 2. புதுக் கன்றுக்கு முலைப்பால் ஊட்டும் கரிய கொம்புடைய எருதை வைத்திருக்கும் உனது தந்தையிடம் உன்னைப் பெண் கேட்க உந்தன் ஊருக்கு வருவேன். 3. எருமையின் அலைவில் ஆம்பல்கள் அழிய செய்வதறியாத வண்டுகள் இவளது அவிழ்கூந்தல் மொய்த்தன. 4. யுத்த வீரனைப்போல உடலைக் கொண்ட எருதுகள் இலந்தைப்பழப் புதரின் பெண்ணைப் போன்ற நிழலில் படுத்திருக்கின்றன. வயல்வெளியில் தாமரை மலர்ந்திருக்கின்றன. இவளின் தந்தையின் ஊர் கவின் பெற்றிருக்கிறது. 5. கயிறை அறுத்துக்கொண்டு சென்று நெல்லை மேய்ந்துவிட்டு புனலில் அசையிடும் எருதுகளைக் கொண்ட ஊரின் மகன் இவன், எனக்குப் பசலை நோய் தருகிறான். 6. நெய்தலும் ஆம்பலும் கொழித்திருக்கும் வயலில் அணிநடை செய்யும் எருதுகள் கொண்ட ஊர்க்காரனின் மகளிவள். இவளுடன் சேர்ந்திருப்பது இனிமை. 7. பகன்றை மலர்கள் வான்பார்த்துப் பூத்துக் கிடக்கும் கோட்டைச் சுவரையும் கரிய கால்கள் கொண்ட எருதுகள் வலம் வரும் பொய்கையையும் கொண்ட ஊர்க்காரனின் மகளிவள். இவள் பொய்கை மலரை விடக் குளுமையானவள். 8. குளிர் நீரில் ஆடும் எருதுகளும் நோய் தீர்க்கும் கள் ஊறும் ஊர்க்காரனே, ஒளிவீசும் வளையலை அணிந்த பெண் இவள். (நீ பார்ப்பதினால்) இவளது தாயும் தந்தையும் கடிந்துகொள்வர். 9. பாகல் பழுத்திருக்கும் கொடியில் எறும்பு கூடு கட்டியிருக்கும், வயல் வெளியில் எருதுகள் கதிரோடு அலையும், பூக்கள் பல மணக்கும் ஊர்க்காரி இவள் நோய் தீர்க்கும் அகன்ற தோளை உடையவளாய் இருக்கிறாள். 10. புனலில் விளையாடும்போது மகளிர் மணல்மேட்டில் கழற்றி வைத்த அணிகலன்களை அங்கு வந்த எருமை வாயால் கிண்டித் தள்ளிவிட்டு மேயும் ஊரை உடையவன் இவள் தந்தை. இவள் வாயிலிருந்து வரும் சொல் பாணர் மீட்டும் யாழிசையைக் காட்டிலும் இனிக்கிறது... என மிக எளிமை செய்துள்ளேன். ஆனால் இந்தப் பத்துப் பாடல்களும் அவற்றின் வரிகள் தரும் படிமமும் மிகப்பெரிய அளவிலான சித்திரத்தைக் கொடுக்க வல்லவை.

நெறிமருப்பு எருமை நீலைரும் போத்து
வெறிமலர்ப் பொய்கை ஆம்பல் மயக்கும்
கழனியூரன் மகளிவள்
பழன வெதிரின் கொடிப்பிணை யலளே.

கருங்கோட்டு எருமைச் செங்கண் புனிற்றுஆக்
காதற் குழவிக்கு ஊறுமுலை மடுக்கும்
நுந்தை நும்மூர் வருதும்
ஒண்தொடி மடந்தை நின்னையாம் பெறினே.
எருமைநல் ஏற்றினம் மேயல் அருந்தெனப்
பசுமோ ரோடமோடு ஆம்பல் ஒல்லா
செய்த இனைய மன்ற பல்பொழில்
தாதுண வெறுக்கைய ஆகி இவள்
போதுஅவிழ் முச்சி யூதும் வண்டே.
மள்ளர் அன்ன தடங்கோட்டு எருமை
மகளிர் அன்ன துணையோடு வதியும்
நிழல்முதிர் இலஞ்சிப் பழனத் ததுவே
கழனித் தாமரை மலரும்
கவின்பெறு சுடர்நுதல் தந்தை ஊரே.
கருங்கோட்டு எருமை கயிறுபரிந்து அசைஇ
நெடுங்கதிர் நெல்லின் நாள்மேயல் ஆரும்
புனல்முற் றூரன் பகலும்
படர்மலி அருநோய் செய்தனன் எமக்கே.
அணிநடை எருமை ஆடிய அள்ளல்
மணிநிற நெய்தல் ஆம்பலொடு கலிக்கும்
கழனி ஊரன் மகளிவள்
பழன ஊரன் பாயல்இன் துணையே.
பகன்றை வான்மலர் மிடைந்த கோட்டைக்
கருந்தாள் எருமைக் கன்று வெரூஉம்
பொய்கை ஊரன் மகளிவள்
பொய்கைப் பூவினும் நறுந்தண் ணியளே.
தண்புனல் ஆடும் தடங்கோட்டு எருமை
திண்பிணி அம்பியின் தோன்றும் ஊர
ஒண்டொடி மடமகள் இவளினும்
நுந்தையும் யாயும் துடியரோ நின்னே.
பழனப் பாகல் முயிறுமூசு குடம்பை
கழனி யெருமை கதிரொடு மயக்கும்
பூக்களுல் ஊரன் மகளிவள்
நோய்க்குமருந் தாகிய பணைத்தோ ளோளே.
புனலாடு மகளிர் இட்ட ஒள்ளிழை
மணலாடு சிமையத்து எருமை கிளைக்கும்
யாணர் ஊரன் மகளிவள்
பாணர் நரம்பினும் இன்கிள வியளே.

••

## பொதுவான மனநிலை

*மார்ச் 19, 2018*இல் கென்யாவில் உள்ள விலங்குச் சரணாலயம் ஒன்றில் சூடான் என்று பெயரிடப்பட்ட அந்த வெள்ளை மூக்கு வகை வடக்கத்திய காண்டாமிருகம் உடல்நிலை சரியில்லாமல் இறந்துபோனது. இந்த இனத்தில் அதுதான் இந்த உலகின் கடைசி ஆண் காண்டாமிருகம். இப்பூவுலகில் இன்று (2021) இரண்டு பெண் காண்டாமிருகங்கள் மட்டுமே உயிரோடு இருக்கின்றன. கென்ய சரணாலயத்தில் இருபத்திநான்கு மணி நேரமும் ஆயுதப் பாதுகாப்போடு அவை வாழுகின்றன. இந்த வகை காண்டாமிருகங்கள் ஏறக்குறைய 4500 கிலோகிராம் வரை எடை கொண்டவை. மத்திய மற்றும் கிழக்கு ஆப்பிரிக்கப் புதர்க்காடுகளில் வாழ்ந்துவந்தவை. அதன் கொம்புகளுக்காக மனித வேட்டைக்கு ஆளாகி இன்று இல்லாமல் போனவை. காட்டுமிராண்டித்தனமான இவ்வகை வேட்டைகளில் சிக்கி சின்னாபின்னமாகும் விலங்குகள் பற்றிய விழிப்புணர்வைக் கண்டங்கள் முழுவதும் கணிசமான மனிதர்கள் உருவாக்கி வருகிறார்கள். இந்தப் புகைப்படம் அமெரிக்க ஃபோட்டொஜெர்னலிஸ்ட் அமி விட்டலெ (ami vitale) எடுத்தது. சூடானின் கடைசி நாள். 27.11.2021 நாளின் டைம்ஸ் ஆஃப் இண்டியா நாளிதழில் இவரின் சிறிய பேட்டி ஒன்று உள்ளது. இவரது வலைத்தளம் https://www.amivitale.com. தேடிப்பாருங்கள், அழித்த வரலாற்றின் சாம்பல்மேட்டில் நிற்கும் மனித இன வரலாற்றின் நாற்றத்தில் நமக்குச் சில புரிதல்கள் கிடைக்கலாம்.



■

● ஜின்னா அஸ்மி

# ஒரு கனமழை

ஜன்னல் வழியே மழை ரசிக்கையில்தான் அவன் வெளியே வந்தான்.
மழை பிடிக்குமா என்றவாறு...
யாருக்குத்தான் மழை பிடிக்காதென்றேன்.
அவன் சிரிப்பில் என் அறை நடுங்கிற்று
எல்லா நேரங்களிலும் வெறும் நீராக இருப்பதில்லை
கண்ணீராகக்கூட இருந்துவிடலாம்... ஒரு கனமழை...
என்றான்
அதெப்படி கண்ணீராகுமென்றேன்
தவிக்கும் தள்ளுவண்டி இட்லிக்கடை பாட்டிகள்...
மின்சாரக்கம்பி விழுந்த குளத்தில் மீட்கப்படும் உடல்கள்...
குஞ்சுகள் நனைய... குடைப்பிடிக்கத் தெரியாத குருவிகள்...
ஊர்முழுக்க நீர் இருப்பினும் குடிநீருக்கு அலையும் குடங்கள்...
ஒன்றாகவே மூழ்கும் அறுவடைப்பயிர்கள் விவசாயக்கடன்கள்...
ஒன்றாகவே மிதக்கும் மசூதிகள் கோவில்கள் தேவாலயங்கள்...
அதற்குப் பெயர்தான் தண்ணீரில் கண்டமென்பதோ
ஆம்
தண்ணீரில் கண்டம் என்பது கூட ஒரு மழைநாளில் உருவான சொல்தான் என்றான்
மேலும்
எவ்வளவு மழைப் பெய்தாலும் அப்படியே நின்றிருக்க
எறும்புகளொன்றும் எருமைகள் அல்ல..
உயிரைப் பிடித்துக்கொண்டு ஓடுகிறது பார் என்றான்.
நான் எறும்பல்ல மனிதனென்றேன்
கல்உப்பென்று பெயர் வைத்தால் கரையாதா என்றான்
என் ஆணவத்தில் விழுந்தது அவன் சொல்
கொட்டும் மழையில் ஒரு கோடீஸ்வரப் பிணம்
அடக்கம் செய்ய முடியாமல் அப்படியே கிடக்கிறது பார்
அனாதைப் பிணமாவதற்கு ஒரு மழை போதுமென்று... மறைந்தான்

- அவன் இன்னும் சொல்வான் ■

● கலிங்கப்பட்டி க.கருப்பசாமி



# வாசிப்பினால்தான் எல்லாவற்றுக்கும் தீர்வுகள் கிடைக்கும்..

வாசிப்பை வாழ்க்கையாக ஏற்பதெல்லாம் வரம். தன் வாசிப்புக்காக மட்டுமன்றிப் பிறர் வாசிப்புக்காகவும் தொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்கும் எண்பது வயது இளைஞர் ப.முத்துப்பாண்டி. தமிழக அரசின் வணிகவரித்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். புதுக்கோட்டை பாண்டியன் புத்த-அகம் உரிமையாளரான அவர் புத்தகங்களுக்கு இடையில் தன் வாழ்வைச் செதுக்கிக்கொண்டிருக்கிறார். அவருடனான ஓர் இனிய சந்திப்பு..

***பணிநிறைவிற்குப் பிறகு எல்லோருக்கும் வீட்டில் ஓய்வெடுக்க, நேரம் செலவழிக்கப் பிடிக்கும். ஆனால் நீங்கள் இப்போதும் ஓடிக்கொண்டே இருக்கிறீர்கள். காலையிலேயே உங்கள் புத்தக நிலையம் திறக்கப்பட்டுவிடுகிறதே! இவ்வளவு ஆர்வமாய் இப்போதும் இப்பணியில் ஈடுபட என்ன காரணம்? இது எப்படிச் சாத்தியமாகிறது?***

ஓய்வு பெற்ற பிறகு பொதுவாக எல்லோரையும் போல் தொலைக்காட்சியைப் பார்த்துக்கொண்டு, தேவையற்ற அரட்டைகளில் ஈடுபட்டுக்கொண்டு பொழுதைக் கழிக்க எனக்கு விருப்பமில்லை. ஓஷோவின் எழுத்துக்களின் மீது எனக்கு நல்ல ஆர்வம் உண்டு. நான் ஓஷோ தியானங்களைப் பயிற்சி செய்துகொண்டிருந்ததால் ஓஷோவின் நூல்களை நிறைய வாசித்திருந்தேன். அவற்றை இன்னும் நான் நிறைய வாசிக்க வேண்டும், பிறரும் வாசிக்க வேண்டும் என நினைத்தேன்.. பாண்டியன் புத்த-அகம் உதயமானது.

21 ஆண்டுகளாக இந்தப் பணியில் ஈடுபட்டுவருகிறேன். 1999இல் நான் அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றபிறகு 2000 ஜூன் மாதம் இந்தப் புத்த-அகத்தைத் தொடங்கினேன். இன்றுவரை நன்றாகச் சென்றுகொண்டிருக்கிறது.

இப்போதும் வெறுமனே நூல்களை விற்பனை செய்யும் இடமாக இல்லாமல் ஒரு நூலகம் போலவும் செயல்படுத்த நினைத்தேன். புத்தகங்களை வாங்கிப் படிக்க இயலாதவர்கள் என் கடையில் வந்து அமர்ந்துகொண்டு வாசிப்பார்கள். அவ்வப்போது வாசகர் வட்டம் போல் செயல்பட்டுப் படித்த விடயங்களைப் பகிர்ந்துகொள்வோம். எனவே, எப்போதும் கடையில் வாசகர்கள் இருப்பார்கள். சம்பாத்தியத்திற்காக அல்லாமல், கடைத் திறப்பை எதிர்நோக்கும் வாசகர்களுக்காகவும், வாசகர்களை எதிர்பார்த்திருக்கும் நூல்களுக்காகவும் ஒவ்வொருநாளும் நான் உற்சாகத்தோடு செல்கிறேன். அதனால் சாத்தியமாகிறது.

**உங்கள் புத்த-அகத்தில் அதிகம் விற்கப்பட்ட நூல்கள் என்று கேட்டால் எவற்றைச் சொல்வீர்கள்?**

அதிகமாக என்னுடைய நிலையத்தில் விற்பனையானவை கவிதை நூல்கள்தான். ஆரம்பத்தில் கவிதைகள்தான் அதிகமாக விற்பனையாயின. ஆனால் இப்போது அவற்றின் விற்பனை முன்புபோலில்லை, குறைந்துவருகிறது. அதை விடுத்தால், சுயமுன்னேற்றப் புத்தகங்களைக் குறிப்பிடுவேன். ஆனால் அவற்றைப் படித்துப் படித்து வாசகர்கள் அழுத்தத்திற்குத்தான் ஆட்பட்டதாகத் தெரிகிறது. நூலில் இடம்பெற்ற அனைத்தையும் செய்ய முடியவில்லை, பின்பற்ற முடியவில்லை என்பதே அவர்களை இன்னும் தாழ்வு மனப்பான்மைக்குள் தள்ளிவிட்டதாகப் பார்க்கிறேன். அவையெல்லாம் இப்போது விற்பதில்லை. இடையில் ஜெயகாந்தன், மு.வ. இப்படி பலருடைய நூல்கள் விற்றன. இன்று அதிகளவில் சமையல் குறிப்புகளும் சோதிட நூல்களும் ஆன்மீக நூல்களும்



விற்பனையாகின்றன. கடைக்கு வரும் வாசகர்களைப் பொறுத்துத்தான் விற்பனை அமைகிறது.

புதினங்களில் ஆரம்பம் முதல் இப்போதுவரை பொன்னியின் செல்வன், உடையார், சாண்டில்யனின் வரலாற்றுப் புதினங்கள் ஆகியன வரவேற்பு குறையாமல் வாசகர்களால் பெரிதும் விரும்பி வாங்கப்படுகின்றன.

எனக்குத் தெரிந்து ஒருகாலத்தில் மு.வ.வினுடைய கட்டுரைகள், குடும்ப உறவுகளை ஒற்றுமைப்படுத்தும் காண்டேகரின் நூல்கள் மற்றும் சொற்பொழிவு நூல்கள் பெரிய அளவில் விரும்பப்பட்டு வாங்கப்படும் நூல்களாக இருந்திருக்கின்றன.

***உங்களுடைய கடையில் எந்தெந்த வகையான நூல்கள் எல்லாம் வைத்திருக்கிறீர்கள்?***

என்னுடைய நிலையத்தில் எல்லா வகையான நூல்களும் கிடைக்கும். எல்லாவற்றையும் வைத்திருக்கிறேன். நூல்களில் வேற்றுமை காட்டுவதில்லை.

தொடக்கத்தில் ஓஷோ, கண்ணதாசன் நூல்கள் இருந்தன. அதன்பிறகு வாசகர்கள் கேட்கக் கேட்க விரிவடைந்து இன்று எல்லாத் தரப்பு நூல்களையும் வழங்கிவருகிறேன்.

நூல் வாசிப்பில் விலக்கு என்பது கூடவே கூடாது. எல்லாவற்றையும் வாசிக்க வேண்டும்.

கண்ணதாசன் அத்தான் என்னத்தான் என்ற பாடல் உருவான பின்னணியை விளக்கியுள்ளார். ஒரு கடலைப் பொட்டலம் வாங்கியபோது அதனைச் சுருட்டித் தந்த தாளில் கல்லைத்தான் எனத் தொடங்கும் சித்தர் பாடல் இருந்திருக்கிறது. அதை வாசித்ததுதான் அப்படியான பாடலை அவர் எழுதக் காரணமாக அமைந்திருக்கிறது. வாசிப்பு அறிமுகம் இல்லாத புதியவர்களுக்கு அவர்களின் ஆர்வத்திற்கு ஏற்ப நானே நூல்களைப் பரிந்துரைப்பதும் உண்டு.

***முந்தைய காலங்களின் எழுத்தாளர்கள் - வாசகர்கள், இன்றைய எழுத்தாளர்கள் – வாசகர்கள்.. ஒரு புத்தக விற்பனையாளராக ஒப்பிட்டுக் கூற முடியுமா?***

ஒப்பிட வேண்டும் என்பதில்லை. பொதுவாகவே தெரிகிறதல்லவா! அன்றைய வாசகர்களின் படிப்பறிவு குறைவு. வாய்ப்புகள் குறைவு. இன்று அது மாற்றமடைந்திருக்கிறது. புதிய புதிய கோணங்களில், களங்களில் எழுத்தாளர்கள் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். நிறைய முன்னேறியிருக்கிறது இரு தரப்புமே. எழுதுவதும் வாசிப்பதும் இன்று புத்தகத்தைத் தாண்டி இணையம் வரை நீண்டிருக்கிறது அல்லவா?

***ஒரு புத்தகக் கடைக்காரர், நல்ல வாசகர், இப்போது வலையொளியில் உரையாற்றி வருகிறீர்கள்.. இப்பரிமாணங்கள் எங்கிருந்து உதயமாயின?***

முதலில் நான் ஒரு வாசகன். புத்தகக் கடை வைத்திருப்பவன் என்பது இரண்டாவது. நான் வாசகன் என்பதால் பேசுகிறேன். பேச முடிகிறது. பிடித்த எல்லாவற்றையும் விரும்பிப் பயிலுவதால் வாசகன் என்பதை உறுதிபட என்னால் அறிவித்துக்கொள்ள முடியும். வாசகனுக்குச் சொற்பொழிவாற்றத் தெரியாது. இலக்கண முறைப்படி, பிறரைக் கவரும் வகையில் பேசத் தெரியாது. மக்களிடம் இயல்பாகப் பேசுவது போலவே உரையாற்றினாலும் நான் படித்தவற்றைப் பிறரோடு பகிர்ந்துகொள்கிறேன் என்கிற

**கவித்துளி**

துயர ஒலிகள் ஓய்ந்து
காய்ந்து உதிர்ந்த
மலர்கள்
குப்பையாக
அள்ளிவைக்கப்பட்டன
உடுத்திய துணிகளோடு
குளித்து
வீட்டையும் கழுவினர்
இனி புதைத்துவிட்டோ
எரித்துவிட்டோ
வருபவர்கள்
குளித்தால்
போதும்
நீரால் கழுவப்படும்
அவ்வீட்டின் துக்கம்

– போஸ் பிரபு



மகிழ்ச்சி என்னைத் தைரியமாகப் பேசவைக்கிறது.

என்னுடைய பள்ளிப் பருவத்தில் என்னால் கல்விக் கட்டணம் செலுத்த முடியவில்லை என்பதால் தலைமை ஆசிரியர் வேறு வழியின்றி என்னைப் பள்ளிக்கு வரவேண்டாம் என்றார். ஒவ்வொரு மாதமும் அரைச்சம்பளம் அதாவது 3 உரூபாய் 50 காசுகள் வழங்கிப் படிக்க வேண்டும். இரண்டு மாதத்திற்கு 7 உரூபாயானது. என்னால் கட்ட முடியவில்லை. ஒன்பதாம் வகுப்பிலேயே நான் தங்கிவிட்டேன். அடுத்த ஆண்டும் அப்படியே கழிந்தது. பள்ளிக்குச் செல்லாத இந்தக் காலகட்டத்தில் எனது வழக்கமான பணிகள் மூன்று நண்பர்களோடு பொழுதைக் கழிப்பது, திரைப்படங்களுக்குச் செல்வது (கட்டணங்கள் அப்போதெல்லாம் மிகவும் குறைவு), நூலகத்திற்குச் செல்வது.

மற்ற இரண்டைக் காட்டிலும் நூலகத்தில் அதிக நேரத்தைச் செலவழித்ததால் நான் இப்போது வரையிலும் வாசிக்கிறேன். வாசிப்புதான் என்னுடைய ஓய்வுக்குப் பின்னரும் இப்படி செயல்படவும் பேசவும் வைத்திருக்கிறது. என்னை அடையாளப்படுத்தி வந்திருக்கிறது. இந்நேரத்தில் எனக்கு இரண்டு ஆண்டுகளைத் தந்த பள்ளிக்கும் அன்றைய தலைமை ஆசிரியர் மரியசூசை அவர்களுக்கும் நான் மிகுந்த நன்றிக்கடன் பட்டுள்ளேன். இன்னும் அவரின் படத்தை டைரியில் குறித்து வைத்துக்கொண்டு வாரம் ஒருமுறை அவ்வப்போது பார்த்துக்கொள்வதுண்டு.

**இன்றைய, அன்றைய எழுத்தாளர்களின் எழுத்துக்கள் எப்படி வேறுபட்டிருக்கின்றன? வாசகர்களும் வேறுபட்டிருக்கின்றனர். இம்மாற்றம் அல்லது முன்னேற்றம் பற்றி ஒரு புத்தகக் கடைக்காரராக, வாசகராக உங்களது பார்வை என்ன?**

அன்று போல் இன்றில்லை என வழக்கம்போல நான் பழமை பாராட்ட விரும்பவில்லை. ஜெயகாந்தன் போன்றோரின் காலகட்டத்தை எடுத்துக்கொள்வோம். எழுத்தின்மீதும் தன்னுடைய கருத்து மற்றும் படைப்பின் மீதும் வலிமையான நம்பிக்கை கொண்டிருந்தவர்களாக இருந்தார்கள். அதனால் எழுத்துக்கள் அவர்களின் நோக்கத்தை வாசகர்களின் மத்தியில் பெரும் எழுச்சியோடு சென்று சேர்த்தன. மாற்றங்களும் கணிசமாக நிகழ்ந்தன. இன்று அறிவில் சிறந்த திறமையான பல எழுத்தாளர்கள் உருவாகியிருப்பினும்




எதைச் செய்யப்போகிறோம், எதற்காக எழுதுகிறோம், ஏன் எழுதவேண்டும் என்ற கேள்விகளைத் தமக்குத் தாமே எழுப்பிக்கொள்ளாமல் தடுமாறுவதாகத் தோன்றுகிறது. இலக்கியத்தின் வடிவத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கும் எழுத்தாளர்கள் எண்ணிக்கைக்கு மத்தியில் முந்தைய காலம் போலத் தெளிவான நோக்கோடு முறையான எழுத்தை, நடையை வெளிப்படுத்தும் எழுத்தாளர்களின் எண்ணிக்கை குறைவுதான். உதாரணமாக ரியலிசம் என்பதை எடுத்துக்கொள்ளுங்கள். ரியலிசம் என்பதன் ஆழ்ந்த உட்பொருளை நோக்காமல், வெறுமனே மறைவு வார்த்தைகளாக இருந்த சொற்களை வெளிப்படையாக அப்படியே எழுதுவது என்று மட்டும் புரிந்து வைத்துக்கொண்டு எழுதுபவர்களை நாம் கண்டுவருகிறோம் அல்லவா! இதுதான் இன்றைக்கு எழுத்தாளர்களிடத்தில் உள்ள குறைபாடு.

வாசகர்களும் எதைக் கொண்டாட வேண்டும் என்கிற புரிதல் இல்லாமல் எது சமூகத்திற்குத் தேவை என்று எண்ணாமல் அவசியமற்ற பக்கங்களை ஆதரிப்பதும் அதை நோக்கி எழுத்தாளர்களை எழுத நிர்பந்திப்பதுமாக இருக்கிறார்கள்.

வாசிக்க வேண்டும் எல்லாவற்றையும். வாசிப்பினால்தான் எல்லாவற்றுக்கும் தீர்வுகள் கிடைக்கும்.

**ஓஷோ பற்றி நீங்கள் பேசி நிறைய காணொளிகள் வெளிவந்துள்ளன. அதற்குக் கிடைத்த வரவேற்பை எப்படி உணர்ந்தீர்கள்?**

ஓஷோவைப் பற்றி இதுவரை ஓபன் டாக்கீஸ் என்ற யூடியூப் சேனலில் எட்டு காணொளிகள் பேசியிருக்கிறேன். அதற்குக் கிடைத்த வரவேற்பு எனக்குப் புதிய சக்தியை வழங்கியிருக்கிறது. புத்துணர்ச்சியை மகிழ்வை மனநிறைவைத் தந்திருக்கிறது. அதைக் கேட்ட பலரும் ஓஷோவைப் படிக்கிறார்கள் என்று அறிந்துகொண்டபோது யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்றுதான் தோன்றியது. நான் படித்ததை என் மனதிற்குள் மட்டும் வைத்துக்கொண்டால் எனக்குப் புதிய தலைகள் முளைக்கும். அது பத்தாகும். பத்திற்கும் வலிவந்துவிட்டால் தாங்க முடியுமா? நாம் படித்ததைப் பிறரோடு பகிர்ந்துகொண்டால் இந்தப் பாடில்லை. உங்கள் அறிவை இறக்கிவையுங்கள். இன்னும் பெற முடியும். உங்களுக்குச் சொல்லும் முன்பு செய்கிறேன். செய்திருக்கிறேன். இனியும் செய்வேன்.

● கோ.லீலா

# இயற்கை தந்த முதல் இசைக்கருவி



பேலுர் சென்னகேசவ கோயிலில் குழல் வாசிக்கும் ஆண் இசைக்கலைஞர்.

## இலக்கியத்தில் குழல்

*குழல்வழி நின்றது யாழே யாழ்வழித்*
*தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்*
*பின்வழி நின்றது முழவே*

*- சிலப்பதிகாரம்.*

இது இயற்கை ஈந்த பிரபஞ்சத்தின் முதல் இன்னிசைக் கருவியான குழலே அனைத்து இசைக் கருவிகளுக்கும் முதல் என்கிறது. குழலால், யாழால், பண்ணால் எழும் பாடல் 'முல்லையம் தீம்பாணி' எனப்படும்.

* *

## குழலுக்குத் தலைவன் குமரனே!

முதன்முதலில் புல்லாங்குழல் வாசித்தவர் முருகன். கிருஷ்ணர் இல்லை. கிருஷ்ணர் காலம் ஐயாயிரம் ஆண்டு. முருகப் பெருமான் ஆதியும் அந்தமும் இல்லாதவர். திருமுருகாற்றுப்படையிலே, "குழலன் கோட்டன் குறும்பல் லியத்தன்" என வருகிறது. குழல் என்றால் புல்லாங்குழல் என்று பொருள். யாழ் செயற்கை வாத்தியம், குழல் இயற்கை வாத்தியம்.

* *

## இயவர் எனும் பெருமைமிகு சொல்

தமிழிசை மரபினைப் புலப்படுத்தும் வகையில், குழல் ஊதுபவரை இயவர் என அழைத்திருப்பதற்கான சான்று நற்றிணை, ஐங்குறுநூறு, மதுரைக்காஞ்சி ஆகிய நூல்களில் காணப்படுகிறது.

இம்மென் பெருங் களத்து இயவர் ஊதும்
*(நற்.113)*

தட்டைத் தண்ணுமைப் பின்னர் இயவர்
*(ஐங்.215)*

மன்னர் இயவரின் இரங்கும் கானம்
*(ஐங்.425)*

மதுரைக் காஞ்சியில் *(301 - 306)* "இயவர்" பற்றிய குறிப்பொன்று வருகின்றது. இசை வல்லார் யாவரும் "இயவர்" எனும் சொல்லால் அழைக்கப்பட்டுள்ளனர் என்பது சங்க இலக்கியத்தின் மூலம் புலப்படுகிறது. இத்தகைய புலமைத்துவச் சொல் தமிழிசை மரபினைப் பறைசாற்றுவதோடு நம்மையும் பெருமைகொள்ளச் செய்கிறது.

* *

## குறளில் குழல்

குழலினிது யாழினிது என்பதம் மக்கள்

மழலைச்சொல் கேளா தவர்

- திருக்குறள்.



குழல் வாசிக்கும் இயவர், மேல்கோட், கர்நாடகா.

திருவள்ளுவர், 'குழந்தையின் மழலை மொழியைக் கேளாதவர்கள் குழல் இசையையும், யாழிசையையும் இனிதென்பர்' என்கிறார்.

ஆயர் வாசிக்கும் ஓர் உன்னத இசைக்கருவி. கண்ணனும், ஆனாய நாயனாரும் குழல் வாசிப்பதில் வல்லவராகத் திகழ்ந்தவர்கள். தலைவனைப் பிரிந்திருந்த தலைவிக்கு மாலை நேரம் வரும்போது அங்கு ஆயர்களால் வாசிக்கப்பெறும் குழல் துன்பம் தருவதாக அமைந்திருப்பதாக, அழகான சித்திரம் தீட்டுகிறார் வள்ளுவர்.

அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்

குழல்போலும் கொல்லும் படை

- திருக்குறள்.

தேவாரம் இயற்கை இசைக்கருவிகளாகிய பறையையும், குழலையும் முன்வைத்துப் பாடுகிறது.

பறையுஞ் சிறுகுழலும் யாழும் பூதம்
பயிற்றவே

மறையும் பலபாடி மயானத் துறையும்
மைந்தனார்

பிறையும் பெரும்புனல்சேர்
சடையினாரும் பேடைவண்

டறையும் பழையனூர் ஆலங்காட்டெம்
அடிகளே 1.45.6

- தேவாரம்.

ஒத்தகுழலின் ஒலி எழ, முழவு இமிழ்

மத்தரி, தடாரி, தண்ணுமை, மருளி

ஒத்து அளந்து, சீர்தூக்கி, ஒருவர் பிறபடார்

- பரிபாடல்

ஒருதிறம், பாணர் யாழின் தீங்குரல் எழ

ஒருதிறம், யாணர் வண்டின் இமிரிசை எழ

ஒருதிறம், கண்ணாரக் குழலின் கரைபு எழ

- பரங்குன்றம் பற்றிய செவ்வேள் பாடல்...

வாயில் தோன்றி, வாழ்த்தி நின்று, நின்னும் நின்மலையும் பாட, இன்னாது இகுத்த கண்ணி நிறுத்தல் செல்லாள் முலையகம் நனைப்ப, விம்மிக் - குழல்இனை வதுபோல் அழுதனள், பெரிதே

- புறநானூறு

அன்பூறி மிசைப் பொங்கும் அமுத இசைக்
குழல் ஒலியால்

வன்பூதப் படையாளி எழுத்து ஐந்தும்
வழுத்தித் தாம்

முன்பூதி வரும் அளவின் முறைமையே
எவ்வுயிரும்

என்பூடு கரைந்து உருக்கும் இன்னிசை
வேய்ங் கருவிகளில் 3.7.22 - 953

ஏழு விரல் இடை இட்ட இன்னிசை
வங்கியம் எடுத்துத்

தாழுமலர் வரிவண்டு தாது பிடிப்பன
போலச்

சூழுமுரன்று எழ நின்று தூய பெரும் தனித்
துளையில்

வாழிய நந்தோன்றலார் மணி அதரம்
வைத்தூத 3.7.23 - 954

முத்திரையே முதல் அனைத்தும் முறைத்
தானம் சோதித்து

வைத்த துளை ஆராய்ச்சி வக்கரனை வழி
போக்கி

ஒத்த நிலை உணர்ந்து அதற்பின் ஒன்று
முதல்படி முறையாம்

அத்தகைமை ஆரோசை அமரோசைகளின்
அமைத்தார் 3.7.24 - 955

மாறுமுதற் பண்ணின் பின் வளர் முல்லைப்
பண்ணாக்கி

ஏறிய தாரமும் உழையும் கிழமை கொள
இடுந்தானம்

ஆறுலவுஞ் சடை முடியார் அஞ்செழுத்தின்
இசை பெருகக்

கூறிய பட்டடைக் குரலாங் கொடிப்
பாலையினில் நிறுத்தி 3.7.25 - 956

ஆய இசைப் புகல் நான்கின் அமைந்த
புகல் வகை எடுத்து

மேய துளை பற்றுவன விடுபனவாம் விரல்
நிரையிற்

சேய வொளியிடை அலையத் திருவாளன்
எழுத்தஞ்சும்

தூய இசைக் கிளை கொள்ளுந் துறையஞ்சின்
முறை விளைத்தார் 3.7.26 - 957

மந்தரத்தும் மத்திமத்தும் தாரத்தும் வரன்
முறையால்

தந்திரிகள் மெலிவித்தும் சமங்கொண்டும்
வலிவித்தும்

அந்தரத்து விரல் தொழில்கள் அளவு பெற
அசைத்தியக்கிச்

சுந்தரச் செங்கனிவாயும் துளைவாயும்
தொடக்குண்ண 3.7.27 - 958

எண்ணிய நூல் பெருவண்ணம் இடை
வண்ணம் வனப்பென்னும்

வண்ண இசை வகை எல்லாம் மா துரிய
நாதத்தில்

நண்ணிய பாணியும் இயலும் தூக்கு நடை
முதற்கதியில்

பண்ணமைய எழும் ஓசை எம் மருங்கும்
பரப்பினார்

- பன்னிரெண்டாம் திருமுறை

குழல் வாய் வைத்தனர் கோவலர், வல்
விரைந்து,

இளையர் ஏகுவனர் பரிய, விரி உளைக்

கடு நடைப் புரவி வழிவாய் ஓட,

வலவன் வள்பு வலி உறுப்ப, புலவர்

புகழ் குறி கொண்ட பொலந்தார் அகலத்து

- அகநானூறு 354

கிறிஸ்துவுக்கு முன் மூன்றாம் நூற்றாண்டில் சீனர்கள்தான் முதன்முதலாகப் புல்லாங்குழல் உருவாக்கியதாகத் தெரிகிறது. வேதங்களிலும் புராணங்களிலும் புல்லாங்குழல்கள் பற்றிக் கூறப்பட்டாலும்,

அதன் தயாரிப்பு பற்றிச் சிலப்பதிகாரத்தில் மட்டும்தான் கூறப்பட்டுள்ளது.

சிலப்பதிகாரத்தில் வரும் இசைக்கருவி பற்றிய யாவும் பஞ்ச மரபு நூலின் வெண்பாக்களை அடிப்படையாகக் கொண்டதே. அடியார்க்கு நல்லார் சிலம்பின் இசையுண்மைகளை அறியப் பஞ்சமரபே துணை செய்துள்ளது என்பதைக் கீழ்காணும் பாடல்கள் உறுதி செய்கின்றன.

1. ஓங்கிய மூங்கில்.... (3 : 26 , 17 : .20)

2. சொல்லுமதிற்களவு... (3 : 26, 27 : 20)

3. இருவிரல்கள் நீக்கி... (3 : 26, 17 : 20)

4. வளைவாயரு... (3 : 26, 17 : 20)

பஞ்ச மரபு வெண்பாக்கள் கூறும் செய்திச் சுருக்கம்...

புல்லாங்குழல் செய்ய மரம் தேர்ந்தெடுத்தல் - வங்கியம் (துளைக்கருவி) செய்வதற்குரிய மரங்கள் - மூங்கில், சந்தனம், செங்காலி, கருங்காலி, உலோகம் (வெண்கலம்).

துளைக்கருவியின் அளவு (புல்லாங்குழல்) - குழலின் முழுநீளம் 20 விரலம்.

குழல்வாயின் சுற்றளவு 4-1/2 விரலம். துளைவாயின் துளையளவு-நெல்லரிசியளவு

மூடித்துளையிலிருந்து வாய்த்துளை-2 விரலம் முதலிய செய்திகள் விளக்கப்பட்டுள்ளன.

துளைக்கருவியின் பகுப்பு - தும்பு முகப்பக்கம், வளைவாய்ப் பகுதியிலிருந்து முறையே 2, 2 அங்குலம் (மொத்தம் 4 அங்குலம்) நீக்கி எஞ்சியுள்ள 16 விரல் நீளத்தில் துளையிடுக. இதில் வாய்த்துளையிலிருந்து ஒரு விரல் நீக்கி, மீதியுள்ள ஒன்பது விரல் நீளத்தில் 8 துளைகள் இடவேண்டும். ஒரு விரலம் என்பது 3/4 அங்குலம். ஏழு துளைகளுக்கு உரிய ஏழு விரல்கள். இடக்கையின் ஆள்காட்டி விரல் (ம1) மெல்லுழைக்கு, இடநடுவிரல் வன்துத்தத்திற்கு(ரி2), இட மோதிர விரல் குரலுக்கு (ச), வலக்கையின் ஆள்காட்டி விரல் மென்துரத்திற்கு(நி1), வலக்கையின் நடுவிரல் வன் விளரிக்கு (த2), வலக்கையின் மோதிரவிரல் இளிக்கு (ப).

* *

## சிற்பங்களில் குழல்

தஞ்சை மாவட்டத்தில், தாராசுரம் என்ற இடத்தில் 12ஆம் நூற்றாண்டில் இரண்டாம் ராஜராஜனால் கட்டப்பட்ட ஐராதேஷ்வரர் கோயில் "சிற்பிகளின் கனவு" என்று போற்றப்படுகிறது. அழகான புல்லாங்குழல் ஏந்திய சிவனும் குழலூதும் கண்ணனும் எனச் சிற்பங்கள் இருக்கின்றன. இவற்றில் குழலூதும் சிவன் இங்கு மட்டுமே காணப்படும் அரிய சிற்பம் என்று சரித்திர ஆய்வாளரான குடவாயில் சுப்ரமணியம் கண்டறிந்துள்ளார்.

தமிழகத்தின் பல்வேறு கோயில்களிலும் இந்தியா, சீனா, ஜப்பான் என உலகளவில் அநேகமாக அனைத்து நாடுகளின் சிற்பங்களிலும், கலாச்சாரத்திலும் இரண்டறக் கலந்திருக்கிறது, இயற்கை அளித்த முதல் இன்னிசைக் கருவியான குழல். இது மூக்கினாலும் தைவான் பழங்குடியினரால் வாசிக்கப்படுகிறது.

இயற்கை அளிப்பவை யாவும் உன்னதமானவை. காலம் உள்ளவரை அழியாதவை என்பதற்குக் குழலும், பறையும் இன்று வரை புழக்கத்திலிருப்பதே சான்றாகும்.

ஓவியம், சிற்பம், காவியம், இலக்கியம், திரைப்படம், தனியிசை (Album) என எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் குழல் போல் இனிதாவது எங்கும் காணோம்...

* *

## திரையிசையில் குழலிசை

*Melody* என்றாலே அது குழலிசைதான். மகுடிக்கு மயங்கும் நாகம், குழலுக்கு மயங்கும் மனம். அதனால்தானே, மக்கட் செல்வத்தைக் குழல் இனிது, யாழ் இனிது என்கிறார் திருவள்ளுவர். பூவே செம்பூவே பாடலின் குழலிசை மிகவும் பிரசித்தி... முதல் மரியாதை படத்தில் புல்லாங்குழலை வீசும் காட்சியில் இருந்து, மீண்டும் தண்ணீரில் விழும் வரை இசைக்கப்படும் புல்லாங்குழல் அத்தனை வசீகரம். மேலும் சின்னக்கண்ணன் அழைக்கிறான் எனப் பாடல்களின் பட்டியல் நீளும். அது ஒரு தனி கட்டுரையாகிவிடும் என்பதால்...

குழலின் கீதமென்பது...

*Nothing but wind.* ■

காயத்ரி

# பெண் பேசும் கதைகள்




கவிஞர் சல்மாவை இப்போதுதான் வாசிக்கத் தொடங்கியிருக்கிறேன். ஆனால், கவிஞராக நிற்கும் சல்மாவை விடவும் பெண்களின் மனதை, அவர்களின் இருத்தலியலைக் கதைகளில் வெளிப்படுத்தும் சல்மா இன்னும் அழகாகத் தெரிகிறார்.

இசுலாமியப் பெண்களின் வாழ்வியலைப் பேசியபோதிலும் அவை எல்லாப் பெண்களுக்குமானதாகவும் இயல்பாகவே இருந்துவிடுவதுதான் சல்மாவின் பேசுபொருள் இன்னும் ஆழமாய் வாசகருள் வேர்விட வழிவகுக்கிறது என நினைக்கிறேன்.

சல்மாவின் "சாபம்" சிறுகதைத் தொகுப்பில் வெவ்வேறு கதைகள், வெவ்வேறு களங்கள். ஆனால், எல்லாப் பெண்களும் ஒத்த இயல்புடையவர்களே!

வாழ்வின் சிறிய நிகழ்வை அவ்வளவு எளிதாகக் கடந்துவிட முடியாதவளாக இருக்கும் ஒரு பெண் வாழ்வின் மிக முக்கியமான முடிவுகளை எடுக்கும் நேரத்தில் மிகத் தைரியமாக இருக்கிறாள். மிக எளிதாகக் கடக்க இயலாத ஒன்றை நொடிப்பொழுதில் துச்சமெனக் கடக்கும் தைரியமும் உடையவளாகிறாள். எப்படி இது சாத்தியம்! பெண்களுக்குள் உள்ள புதிர்களுள் இதுவும் ஒன்று.

ஒவ்வொரு அசைவிலும் ஓராயிரம் அர்த்தங்களை அர்த்தப்படுத்திக்கொள்ள இடமளிக்கும் கதை நகர்வுகள், கதை அமைப்புகள். பெண்ணாய்ப் பெண்ணின் மனதைப் பேசி, நானும் பெண்ணானபடியினால் வாசிக்கவும் யோசிக்கவும் வைத்த நல்லதொரு தொகுப்பு. காலச்சுவடு வெளியீட்டில் வெளிவந்த இத்தொகுப்பின் வாசிப்பு இத்தருணத்திலும் நினைவில் நின்றபடியே இருக்கிறது...



● மு.முருகேஷ்



# கவிதைக்குள் கலந்திருக்கும் கதை

'எழுதுவது அல்ல; எழுவதே எழுத்து' என்றார் மலையாளக் கவிஞர் குஞ்ஞுண்ணி. சிக்கல் சிடுக்குகள் நிறைந்த வாழ்விலிருந்தே கவிதைகள் முட்டி முளைக்கின்றன. வெறும் வார்த்தைகளால் பின்னப்படும் கவிதைகளைக் காலக்கரையான்கள் தின்று தீர்த்துவிடும். நிஜத்தின் வெப்பத் தகிப்பில் வெடித்து வெளிவரும் கவிதைகளே என்றென்றும் அனல் சுமந்து, ஒளி காட்டும். தமிழ்ச் சமுதாயத்தின் ஒளிகாட்டும் கவிமுகமாக மிளிர்பவர் கவிஞர் புவியரசு.

'என் உயிர்த் துடிப்பு
கவிதை என்பதால்
அதுவே என் உயிர் ஒப்பம்'

- என்கிற கவிதை வரிகளை எப்போது வாசித்தேன், எங்கே வாசித்தேன் என்பதெல்லாம் என் நினைவிலில்லை. ஆனால், அந்த வரிகள் தந்த தாக்கமும், இந்தக் கவிதை வரிகளை எழுதிய கவிஞர் புவியரசு மீதான என் ஈர்ப்பும் கூடிக்கொண்டே போயின. (கடந்த ஆறேழு ஆண்டுகளாக என் கோவை பயணத்தில் நான் புவியரசு அய்யாவைச் சந்தித்து, உரையாடாமல் திரும்பிய பயணங்கள் ஒன்றிரண்டே).

புதுக்கவிதையின் வரலாற்றை அறியும் ஆவலில் நூல்களைத் தேடி வாசிக்கையில்தான், வானம்பாடிகளின் கவிதை வரலாற்றையும், அதன் முதன்மைச் சாரதியாகக் கவிஞர் புவியரசு விளங்கினார் என்பதையும் அறிந்துகொண்டேன்.

தனது இயற்பெயரான சு.ஜெகநாதன் என்பதை, அது சமஸ்கிருதச் சொல்லென்பதால் புவியரசு எனத் தமிழில் மாற்றிக்கொண்ட கவிஞர், உடுமலைப்பேட்டை அருகேயுள்ள லிங்கவநாயக்கன்புதூர் எனும் கிராமத்தில் சுப்பையா– தாயம்மாள் தம்பதியினரின் மகனாக 19.09.1931இல் பிறந்தவர். புவியரசு சிறுவனாக இருந்தபோதே, பெற்றோர் கிராமத்திலிருந்து குடிபெயர்ந்து கோயம்புத்தூரில் குடியேறினர். உயர்நிலைப் பள்ளியில் படிக்கையில் தேசிய மாணவர் இயக்கத்திலும், தொண்டர் படையிலும் பணியாற்றினார். பின்னர் கோயம்புத்தூர் அரசு கலைக் கல்லூரியில் இடைநிலை பட்டப்படிப்பையும், பேரூர் சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியில் தமிழ் வித்வான் பட்டப்படிப்பையும் முடித்தார். புதுடெல்லியில் காந்தவியல் மருத்துவப் பட்டத்தையும் பெற்றார்.

சுதந்திர உயர் பள்ளி, தியாகி என். ஜி.ஆர். உயர் பள்ளி, சர்வசன உயர் பள்ளி என இவற்றில் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழாசிரியராகப் பணியாற்றினார். இளவயதிலேயே கவிதைகளை எழுதிய புவியரசுவின் படைப்புகள், 1952ஆம் ஆண்டிலிருந்தே வெளிவரத் தொடங்கின. இவரது சிந்தனைக்கு உவப்பானதாகப் பொதுவுடைமைக் கருத்துக்களே இருந்ததால், மார்க்சிய அரசியலை முன்வைத்த கவிதைகளைப் படைத்தார். கருத்தியல் தளத்தில் திராவிடக் கட்சிகளுக்கு எதிர்வினையாற்றினார். சிலம்புச் செல்வர் ம.பொ.சி.யின் தமிழரசு இயக்கத்தில் இணைந்து, நகரச் செயலாளராகப் பொறுப்பேற்று, பல இயக்க மாநாடுகள், பயிற்சி மொழிக் கருத்தரங்குகளை முன்நின்று நடத்தினார்.

எழுதுவதொடு நில்லாமல் களத்திலும் நின்று குரல் கொடுத்தவர் புவியரசு. தமிழ்ப் பாதுகாப்பு, தமிழக வடக்கெல்லை – தெற்கெல்லை மீட்பு, பயிற்சி மொழி, ஆட்சிமொழிப் போராட்டங்களிலும் பங்கேற்று, பலமுறை சிறைக்குச் சென்றார்.

'நாங்கள் மானுடம் பாடும் வானம்பாடிகள்' எனும் பிரகடனத்தோடு கோவையில் 1970இல் தொடங்கப்பட்ட 'வானம்பாடி' கவிதை இதழின் முகவரியாகவே புவியரசு இருந்தார். புவியரசுவின் மருமகன் நடத்திய மலர்விழி எனும் அச்சகத்தில் அச்சிடப்பட்டு, கவிஞரின் வீட்டு முகவரி தாங்கி வெளியான 'வானம்பாடி' கவிதை இதழ்,



புதுக்கவிதையின் பேரெழுச்சிக்குப் பெரும் உந்துசக்தியாக அமைந்தது. கங்கைகொண்டான், சிற்பி, சிதம்பரநாதன், அப்துல்ரகுமான், ஈரோடு தமிழன்பன், தமிழ்நாடன், அக்கினிப்புத்திரன், சக்திக்கனல், சி.ஆர்.ரவீந்திரன், மு.மேத்தா, கோவை ஞானி, பா.செயப்பிரகாசம், பிரபஞ்சன், பாலா, கோ.இராஜாராம், மீரா உள்ளிட்ட பல கவிஞர்கள் வானம்பாடியின் வரவுக்குத் துணை நின்றதோடு, இதழில் கவிதைகளையும் எழுதினர்.

வானம்பாடியில் இணைந்திருந்த கவிஞர்களில் பலரும் பொதுவுடைமைச் சிந்தனையாளர்களாகவும், சற்றே காங்கிரஸ் ஆதரவு மனோபாவம் கொண்டவர்களாகவும் இருந்தார்கள். ஆகையினால், 1970இல் தமிழகத்தை ஆட்சி செய்த திமுக அரசின் நிலைப்பாடுகளை எதிர்த்து நின்றது வானம்பாடி இயக்கம். 32 பக்கங்கள் முதல் 60 பக்கங்கள் வரை கொண்டதாக அச்சிடப்பட்ட 'வானம்பாடி' இதழ், 300 பிரதிகள் அச்சிடப்பட்டு, 'பூமியின் பிரளயங்களாய், காலத்தின் வசந்தங்களாய், யுகத்தின் சுவடுகளாய், நிறங்களில் சிவப்பாய், மண்ணை வலம்வரும் பறவைகளாய், விலையிலாக் கவிமடலாக' 1981 வரை 13 இதழ்கள் வெளியாகின. இந்த 'வானம்பாடி'யின் வரவுக்கு வித்தாக இருந்தவர் புவியரசு.

கவிஞராக, எழுத்தாளராக, நாடக ஆசிரியராக, நவீன நாடகப் பயிற்சியாளராக, திரைப்படப் பாடலாசிரியராக, இணை இயக்குநராக, புகைப்படம், சலனப்படம் எடுப்பதில் அனுபவமுள்ளவராகப் பன்முகத் திறன் வாய்ந்த புவியரசு, மொழிபெயர்ப்புத்துறையிலும் மகத்தான பல நூல்களைத் தமிழாக்கித் தந்துள்ளார். மலையாளம் மற்றும் ஆங்கில மொழியிலும் தேர்ந்தவர்.

புவியரசுவின் 26ஆவது வயதில், அதாவது 1957ஆம் ஆண்டில் 'திருமணப் பரிசு' எனும் இலக்கியக் கட்டுரைகள் அடங்கிய நூலினைத் தனது முதல் நூலாக வெளியிட்டார். மல்லைத்துறை, ராஜதுறை, மணிகண்டபுரம் மாயாவி எனும் மூன்று நாவல்களை ஒரே ஆண்டில் (1964) வெளியிட்டார். 1964இல் கவிஞரது முதல் கவிதை நூல் 'புவியரசு கவிதைகள்' வெளியானது. 1975இல் 'இதுதான்', 1979இல் 'மீறல்' எனத் தொடர்ந்து கவிதை நூல்களைப் படைத்த கவிஞரின் கவனம், மொழியாக்கங்கள் மீது வேகம் கொண்டது. ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆகச் சிறந்த உலக இலக்கிய நூல்களை மொழிபெயர்த்தார்.

ஓஷோவின் நூல்களான கிருஷ்ணா (1993), இப்போதே பரவசம் (1994), வாழ்க்கையே திருவிழா (1994), இரண்டாவது கோப்பை தேநீர் (1995), நீ, நீயாக இரு (1997), அற்புதத்தின் அற்புதம் (2002) எனப் பலவற்றை மொழிபெயர்த்ததோடு, உலகப் புகழ்பெற்ற கவிஞரான கலில் ஜிப்ரான், உமர் கய்யாமின் கவிதை நூல்களையும், சேக்ஸ்பியர், ஜேம்ஸ் ஹாட்லிசேஸ், எச்.ஜி.வெல்ஸ், பிராம் ஸ்டோக்கர் ஆகியோரின் நூல்களையும் தமிழில் தந்தார்.

புகழ்மிக்க ரஷ்ய எழுத்தாளரான ஃபியோதர் தஸ்தயேவ்ஸ்கியின் 'கரமசோவ் சகோதரர்கள்' எனும் 1850 பக்கங்கள் கொண்ட நாவலைப் பல்லாண்டுகாலம் கடுமையாக உழைத்து, 2014இல் இரு தொகுதிகளாக வெளியிட வைத்தார்.

பாறை ஊற்றிலிருந்து மெல்லக் கசிகிற நீரினைப் போலவே புவியரசுவின் கவிதைகளின் தொடக்கம் இருக்கும். ஆனால், கவிதை தொடரத் தொடர, ஒரு காட்டாற்று வெள்ளத்தின் போக்கினையொத்த வேகத்தோடு சுழன்று கிளம்பி, வழியெங்குமிருக்கும் மேடுகளை அடித்துச் சரித்து, சமத்துவப் பாதை






நோக்கிய பயணத்தைத் தொடரும். இலக்கு நோக்கிய பயணத்தில் எந்தச் சமரசத்திற்கும் இடமிருக்காது. கவிதையின் முடிப்பில் வெளிப்படும் அங்கதமானது, தனித்துக் குறிப்பிடத்தக்கது. கவிதையின் போக்கில் நம்மையும் உடன் அழைத்துச் சென்று, வெடித்தெழ வைக்கும். இந்த வேகமும், கருத்தியல் தாக்கமுமே புவியரசுவின் கவிதைகளை நிகரில்லாமல் செய்தது.

1988இல் வெளியான 'ஒரு முக்கிய அறிவிப்பு' கவிதை நூலின் முன்னுரையிலேயே-

'ஆரம்பத்திலிருந்து

நான் எழுதிவருவது

ஒரே கவிதைதான்

துண்டு துண்டாக'

என்று தொடங்கியிருப்பார். அடுத்து, 'வணக்கம்' என்றொரு கவிதையில், சாக்கடையாகிப்போன நொய்யலாறு, கழுதையில்லா ரங்கசாமி, பாலத்து முனை கள்ளுக்கடை, சட்டசபைக்குச் செருப்புடன் சென்று வாங்கிக் கொழுத்த பன்றிகளுக்கும் எனச் சகலத்திற்கும் வணக்கம் சொல்லி வந்த கவிஞர், இப்படியாக முடித்திருப்பார்;

'கேரளத்துக் கடமனிட்ட ராம கிருஷ்ணனுக்கும்

சச்சிதானந்தனுக்கும்

என் தமிழ் மண்ணின் இன்குலாபுக்கும்

வணக்கம் –

ஆ... மறந்தேபோனேன்

என் தாய் நாட்டிற்கும்

ஓ... வணக்கமெல்லாம் தீர்ந்துபோச்சு அய்யா...

எனக்கும் களைப்பா இருக்கு...'

சமூக அநீதி கண்டு கோபம் கொப்பளிக்கும் கவிதைகள் எனப் பத்து கவிதைகளை மட்டும் தேர்ந்தெடுத்தாலும்கூட, இந்தக் கவிதையும் அதிலொன்றாக இருக்கும்.

2005ஆம் ஆண்டில் வெளியான கவிஞரது 'கையொப்பம்' கவிதை நூலுக்கு ஒன்றிய அரசு, சாகித்திய அகாதெமி விருதினை வழங்கியது. 2007இல் மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த பெங்காலிக் கவிஞரான காஸி நஸ்ரூல் இஸ்லாமின் கவிதைகளைப் 'புரட்சிக்காரன்' எனும் தலைப்பில் மொழிபெயர்க்க, அந்த நூலுக்கு மொழிபெயர்ப்புக்கான சாகித்திய அகாதெமி விருதினையும் பெற்றார்.

தனது தொண்ணூறாவது வயதிலும் இன்னமும் எழுதிக்கொண்டும், எல்லோரோடும் உரையாடிக்கொண்டும், வாசித்துக்கொண்டுமிருக்கும் புவியரசுவின் கவிதைகள் மலையாளம், கன்னடம், இந்தி ஆகிய இந்திய மொழிகளிலும், ஆங்கிலம், ரஷ்ய, ஹங்கேரி, சிங்கள மொழிகளிலும் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. கவிதை, நாடகம், நாவல், திரைக்கதை, மொழிபெயர்ப்பு என 110க்கும் மேற்பட்ட நூல்களைத் தந்து, தமிழிலக்கியத்தின் பெருமைமிகு படைப்பாளியாக உயர்ந்து நிற்கும் புவியரசுவின் கவிதைகளில் சில, ஒரு சம்பவத்தின் அடிப்படையில் கதை சொல்லும் போக்கினை உடையவை. 'சாத்யமேவ ஜெயதே' (ஒரு முக்கிய அறிவிப்பு), 'பொத்திப் பொத்தி' (கையொப்பம்), 'விக்கிரகம் பேசுகிறது' (முக்கூடல்) ஆகிய கதைக் கவிதைகள் குறிப்பிடத்தக்கன.

தன் கவிதைகள்வழி கவிஞர் புவியரசு காண விரும்பிய ஒரு புது விடியலுக்காக எல்லோரும் காத்திருக்கிறோம்...

- இன்னும் சொல்வேன் ■

ஜேவிடன்



# உருகுதே

உச்சி வெயில் மண்டையைப் பிளந்தது. சுள்ளென வெயில், வழுக்கை மண்டையில் பட்டுத் தெரித்தது. தாரைதாரையாக வியர்வை ஒழுகிக்கொண்டிருந்தது. நெற்றிச் சுருக்கங்கள் வயிற்றைப் படம்பிடித்துக் காட்டிக்கொண்டிருந்தன. இந்நேரத்துக்குப் பாதி ஐஸ் விற்றுத் தீர்ந்திருக்கும். இன்னும் ஒன்றுகூட விற்காமல் தகிக்கும் வெயிலில், வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு நின்றுகொண்டிருந்தான். நெற்றியில் வழிந்த வியர்வைத் துளிகளை விரல்களால் வழித்துத் தெறிக்கவிட்டபடி, கண்களை இடுக்கிப் பள்ளிக்கூடப் பிள்ளைகளின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டே இருந்தான், ஐஸ்காரன் ஆறுமுகம்.

"பீ. பீ. பி. பீ. பீ. பி.." சைக்கிள் ஹேண்ட்பாரிலிருந்த ஹாரனை அமுக்கியமுக்கி ஒலியெழுப்பிக்கொண்டே இருந்தான். "பால் ஐஸ்... கப் ஐஸ்... கோன் ஐஸ்... ஐஸே... ஐஸேய்..." ஹைஸ்கூல் காம்பவுண்டு வாசலில் உயிர் வலிக்கக் கூவிக்கொண்டிருந்தான். அருகே வேலாயி கிழவி மட்டும் கட்டிலில் தீனிகளைப் பரப்பி வைத்துக்கொண்டு, இன்னும் வியாபாரமாகாமல் வேதனையோடு காத்துக்கொண்டிருந்தாள். ஒன்னுக்குப் பெல் அடித்து, பிள்ளை குட்டிகளெல்லாம் ஆங்காங்கே பேசிக்கொண்டும் விளையாடிக்கொண்டும் இருந்தார்கள். ஒரு பயலும் வெளியே வருவதுமாதிரி தெரியவில்லை.

சிறிதுநேரத்தில் மணி திரும்ப அடித்தது. மாணவர்கள் எல்லோரும் சரசரவெனப் பள்ளிக்கூடத்திற்குள் நுழைந்தார்கள். ஆறுமுகத்திற்குத் திக்கென்று இருந்தது. ஒன்றுமே புரியவில்லை. இந்நேரம் "அண்ணே...

அண்ணே...''ன்னு பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள்லாம் கொயகொயன்னு மொய்த்துக்கொண்டிருப்பார்கள். இந்தப் பத்து நிமிஷம்தான் மும்முரமான வியாபாரமே. பம்பரமாகச் சுழன்றுகொண்டேயிருப்பான் ஆறுமுகம். கண்ணு பார்க்க, ஒருகை காசு வாங்கிப்போட, மறுகை ஐஸ்பெட்டிக்குள் கையைவிட்டு ஐஸை எடுத்துக் கொடுத்தவண்ணம் இருக்கும். மின்னல் வேகத்தில் இயங்கிக்கொண்டிருப்பான். திரும்ப மணியடிச்சாலும் "அண்ணே... அண்ணே... அண்ணே...''ன்னு காசு கொடுத்து வாங்கிட்டுத்தான் குடுகுடுன்னு பிள்ளைகுட்டிகள் பள்ளிக்கூடத்துக்குள்ளேயே ஓடுவாங்க. ஆனா, இன்னைக்கு என்ன ஆச்சுன்னு தெரியல. எல்லாமே தலைகீழா இருக்குது. "இந்தா... ஊருக்குள்ள ஒரு ரவுண்டு போயிட்டு வந்துடுறேன்க்கா.'' வேலாயி கிழவியிடம் சொல்லிவிட்டு ஊருக்குள் சைக்கிளை அழுத்தினான்.

"ஐஸ்... ஐஸ்... ஐஸ்... பாலைஸ்... கப்பைஸ்... கோனைஸ்... ஐஸே... ஐஸேய்...'' காட்டுக் கூச்சல் போட்டபடி "பீ.பீ.பி.பீ.பீ. பி..'' என்று ஹாரனை அழுத்திக்கொண்டே ஊருக்குள் வலம் வந்துகொண்டிருந்தான். தெருக்கள் வெறிச்சோடிக் கிடந்தன. ஒப்புக்குத் தெருநாய்கள்கூட தெருவில் அலையவில்லை. ஒரு ஐஸ்கூட விற்பனையாகவில்லை. தொண்டை வறண்டுபோனதுதான் மிச்சம். அவர்களைச் சொல்லியும் குற்றமில்லை. முன்புமாதிரி மழை தண்ணி பெய்யவில்லை. வேலைவெட்டிக்கும் வழியில்லை. யாரிடமும் கையில் காசு புழங்கவில்லை. பாதிசனம் பிழைப்புத் தேடி வெளியேறியிருந்தார்கள். ஊரே முதியோர் இல்லங்களாகத்தான் தோற்றமளித்தது. ஒரு வயதான பெண்ணொருத்தி வேர்க்க விறுவிறுக்க விறகுக்கட்டைச்சுமந்து வந்துகொண்டிருந்தாள். உழைத்து உழைத்து இறுகிப்போன உடம்பு அது. அவளைப் பார்த்ததும் அவனுக்குத் தன் மனைவியின் ஞாபகம்தான் வந்தது. இன்று காலையில் அவள் தன்னிடம் சொல்லிவைத்தது நினைவுக்கு வந்தது. "நாளைக்கி காலையில மகளிர் குழுவுக்கு ரெண்டாயிரம் ரூவா கட்டணும்யா. கொடுமை கொடுமைன்னு கோவிலுக்குப் போனா அங்க ரெண்டு கொடுமை அவுத்துப்போட்டு ஆடுச்சாம். அந்தக் கதையால்ல இருக்கு இவிங்க கொடுமை. கந்துவட்டிக்காரன் தொல்ல தாங்கமுடியாம மகளிர் குழுவுல சேர்ந்தா, இங்க அதைவிட பித்தலாட்டமால்ல இருக்கு. யானைக்கித் தீனி போட்டமாதிரி போய்க்கிட்டே இருக்கு. இது எங்க போய் முடியப் போகுதோ தெரியல'' என்று புலம்பியது, அவன் நினைவலைகளில் வந்து வந்து போனது.

"ஐஸ்கார் அண்ணே... ஐஸ்கார் அண்ணே...'' சைக்கிளை நிறுத்தித் திரும்பினான். மேல்சட்டையில்லாமல் வெற்றுடம்புடன் அழுக்கேறிய ஜட்டியோடு கத்தியழைத்தபடியே சின்னஞ்சிறு சிறுமியொருத்தி அந்த மொட்டை வெயிலில் குடுகுடுவென ஓடி வந்துகொண்டிருந்தாள். முதல் போனியைப் பார்த்ததும் அவனுக்கு உச்சி குளிர்ந்தது. ஊரே மாறிக்கிடக்குற இந்தக் காலத்துல இந்தமாதிரி கிராமத்துப் பிள்ளைக மட்டும்தான் அவனுக்கிருக்கிற ஒரே ஆதரவு, நம்பிக்கை.. எல்லாம். மூச்சிரைக்க ஓடிவந்து கையிலிருந்த காலி குவாட்டர் பாட்டிலை நீட்டினாள் அந்தச் சிறுமி. அதை வாங்கிக்கொண்டு ஆறுமுகம் ஒரு ஐஸை எடுத்துக் கொடுக்க, எச்சிலொழுகச் சப்பிக்கொண்டே குடுகுடுவென ஓடி மறைந்தாள் அந்தச் சிறுமி.

முன்பெல்லாம் இப்படி நாலஞ்சு ஊருக்குள்ள போய்ட்டுவந்தாலே போதும். ஐஸ் முழுவதுமாக விற்றுத் தீர்ந்துவிடும். ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது. மக்கள் விளம்பரக் கம்பெனி ஐஸ்கிரீம்களையும், கூல்ட்ரிங்ஸையும்தான் விரும்பிப் புசிக்கிறார்கள். சின்னஞ்சிறுசுக கையில இப்பல்லாம் காற்றடைக்கப்பட்ட சிப்ஸ் பாக்கெட்டுதான் தென்படுகிறது. 'இதெல்லாம் எங்க போய் முடியப்போகுதோ...?' ஆறுமுகத்திற்கு வயிற்றெரிச்சலாயிருந்தது.

வழக்கமாக, இந்த நேரத்திற்கு ஊர் டீக்கடைக்கு வந்து ஒரு டீயை வாங்கி, அதில் ஒரு பன்னை அமுக்கித் தொட்டுப் பசியாற்றிக்கொள்வதுதான் ஆறுமுகத்தின் வழக்கம். காலங்காத்தால கஞ்சித்தண்ணி

குடிக்காமல் சீக்கிரமாகவே ஐஸ் கம்பெனிக்குப் போனால்தான், கணக்குப் பண்ணி ஐஸ்பெட்டியை வாங்கிக்கிட்டு, மாங்கு மாங்குன்னு சைக்கிளை அழுத்தி, பத்துப் பதினைஞ்சு மைல் தள்ளியிருக்கிற இந்த ஹைஸ்கூலுக்கு ஒன்னுக்கு மணியடிக்கிறதுக்கு முன்னாடி வந்துசேர முடியும். ஊரை இரண்டு, மூன்றுமுறை கத்திக்கத்திச் சுற்றிவந்தும் ஒரு பயனுமில்லை. தொண்டை வறண்டுபோக, ஊர் மந்தையிலிருந்த டீக்கடைக்கு வந்துசேர்ந்தான். நான்கைந்து பெருசுகள் பேப்பர் படித்துக்கொண்டிருந்தார்கள். கோயில் திண்ணையில் தாயம் களை கட்டியிருந்தது. டீக்கடை பெஞ்சில் காத்தாட உக்கார்ந்து வேட்டி முனையால் முகத்தைத் துடைத்து, "அப்பாடா..."ன்னு பெருமூச்சுவிட்டு வெக்கையைத் தணித்தான். இன்னும் பத்திருபது நிமிஷத்துல மத்தியானச் சாப்பாட்டு மணியடிச்சிடும். அப்போதைக்கு அங்க நின்னாதான் ஐஸ்பெட்டி முழுசா விற்றுத் தீரும். காலாற கொஞ்சநேரம் உட்கார்ந்திருந்தான். "காலம் கெட்டுக்கிடக்கு பார்த்தியா.. நம்மளமாதிரி ஏழை பாழைக லோன் கேட்டுப் போனா பேங்க்காரன் கேள்விமேல கேள்விகேட்டு நாயாய் அலையவிடுறான். இங்க பாரு... பிராடு கம்பெனிக்குப் போட்டி போட்டுக்கிட்டு அள்ளிக் கொடுத்திருக்காய்ங்க." பொரிந்து தள்ளிக்கொண்டிருந்தார் ஒரு பெரியவர்.

வயிறு பசித்தது. சட்டைப்பையைத் தொட்டுப் பார்த்தான். நயா பைசாகூட இல்லை. 'ஒரு தடவை கடன் வாங்கிப் பழகிட்டா, அப்புறம் அதுவே பழக்கமாகிடும். ஈறு பேனாகி, பேனு பெருமாள் ஆயிடும்'. மண்பானையிலிருந்த தண்ணீரை மடக்குமடக்கென்று வயிறு நிரம்பக் குடித்துவிட்டு, வைராக்கியத்தோடு கிளம்பி, சைக்கிளை மாங்கு மாங்கென்று அழுத்திக்கொண்டு பள்ளிக்கூடத்தை நோக்கி விரைந்தான். நல்லவேளையாக இன்னும் மத்தியானச் சாப்பாட்டு மணியடிக்கவில்லை. கயிற்றுக்கட்டிலில் தீனிகளைப் பரப்பிவைத்துத் தயாராக நின்றுகொண்டிருந்தாள் வேலாயி கிழவி. வேலாயி கிழவி எலந்தப் பழம், கொய்யாப் பழம், மாங்காய், தர்ப்பூசணி, வெள்ளரிக்கா இப்படி சீசனுக்குத் தகுந்தமாதிரி வியாபாரம் செய்பவள். அதுபோக புட்டு, பணியாரம், வேகவைத்த பயறுகன்னு எப்பொழுதுமே ஏதாவது பேப்பரில் மடித்துக் கொடுத்துக்கொண்டிருப்பாள். கயிற்றுக் கட்டிலில் கடலை மிட்டாய், எள்ளுருண்டை, பொரியுருண்டை, இலந்தை வடை, ஊறுகாய் மட்டை என்று காலங்காலமாகப் பயன்படுத்திவரும் தீனி வகைகள் பரவிக் கிடக்கும்.

"டிங். டிங். டிங். டிங். டிங். டிங். டிங். டிங்." சாப்பாட்டு மணி ஒலித்தது. பொதுபொதுவென்று பிள்ளை குட்டிகள் வகுப்பறையிலிருந்து வெளியேறி ஓடிவந்தார்கள்.

"பீ.பீ.பி.பீ.பீ.பி..."

பிள்ளைகளின் கவனத்தை ஈர்க்க ஹாரனை அழுத்திக்கொண்டேயிருந்தான்.

"ஐஸ்... ஐஸ்... ஐஸ்... பாலைஸ்... கப்பைஸ்... கோனைஸ்... ஐஸே... ஐஸேய்..."

காட்டுக் கத்து கத்தியபடி ஆவலாக எதிர்பார்த்துக்கொண்டேயிருந்தான். யாரும் வருவதாயில்லை. கிழவியின் கடைக்கு ஊறுகாய் மட்டை வாங்கக்கூட ஒரு பயலும் வரவில்லை. கிழவி புலம்ப ஆரம்பித்துவிட்டாள்.

ஆறுமுகத்திற்கு வயிற்றில் புளியைக் கரைத்தது. உள்ளுக்குள் ஏதோ செய்வதுபோலிருந்தது. சாப்பிட்டு முடித்து மாணவர்கள் ஓடியாடி விளையாடிக்கொண்டிருந்தார்கள். யாரும்

**கவித்துளி**

உறக்கமற்றுப் போகும்
இரவுகள் மீதெல்லாம்
கனன்றுகொண்டே இருக்கிறது
எப்போதோ பற்றி எரிந்த
இரவின் மிச்சம்...

– தீபிகா நடராஜன்

வெளியே வந்து ஒரு பொருளும் வாங்குவதாயில்லை. ஆறுமுகத்திற்கு அந்த ஒரு மணிநேரம் ஒரு யுகமாய்க் கழிந்தது. அந்த வேகாத வெயிலில் தொண்டை வறள கத்தியபடியே நின்றுகொண்டிருந்தான். திரும்ப மணி ஒலித்தது. மாணவர்கள் அனைவரும் குபுகுபுவென்று உள்ளே புகுந்தார்கள். ஆறுமுகத்திற்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. புலம்பித் தவித்த வேலாயி கிழவி அப்படியே மெதுமெதுவாகப் பள்ளிக்கூடத்திற்குள் புகுந்து, சத்துணவு ஆயாவிடம் என்ன ஏதென்று விசாரித்தாள். "பாழாப் போறவன்! இப்பிடி நம்ம வயித்துல அடிச்சிட்டானேய்யா…" அழுது ஒப்பாரி வைத்தபடியே வெளியே வந்துகொண்டிருந்தாள். ஆறுமுகத்திற்குக் குலையே நடுங்கியது. "புதுசா வந்திருக்கிற பெரிய வாத்தியாரு, வெளியில கண்ட இடத்துல விக்கிற தீனிய வாங்கித் திங்கக்கூடாதுன்னு ஆர்டர் போட்டிருக்காராம். நாமல்லாம் சுத்தபத்தம் இல்லாதவங்களாம். கொள்ளையில போறவன்! அவன் நாசமாப் போகணும்…" வாயில் வந்தபடி திட்டி அழுதபடியே வந்தாள் வேலாயி கிழவி.

ஆறுமுகத்திற்கு ஏமாற்றம் கண்ணீராய் எட்டிப்பார்க்க, சுதாரித்துக்கொண்டு தொண்டையைக் கனைத்துக்கொண்டான். ஐஸ் பெட்டியைத் திறந்து பார்த்தான். முழுவதுமாக விற்காமல் அப்படியே இருந்தது.

"ஐயோ. இப்பிடி தலையில கல்லைத் தூக்கிப் போட்டுட்டானே படுபாவி. இனிமே நான் என்ன பண்ணுவேன், யார்கிட்ட போய் நிப்பேன். கெடச்ச கால் வயித்துக் கஞ்சிக்கும் உலை வச்சிட்டானே பாவி." ஒப்பாரி வைத்துக்கொண்டே பொருட்களை எல்லாம் மூட்டை கட்டிக்கொண்டு இருந்தாள் கிழவி.

இனிமேலும் அங்கே நின்றால் உடைந்து அழுதேவிடுவேன் என்று சைக்கிளைத் தள்ளிக்கொண்டு நகர ஆரம்பித்தான் ஆறுமுகம். என்னசெய்வது என்றே தெரியவில்லை. தொழில் கடன், மகளிர்குழு கடன், மகளுக்கு வரப்போகிற வளைகாப்புச் செலவு என்று எல்லாம் அவனது கண்களை மறைக்க, மனம்போன போக்கில் சைக்கிளை அழுத்திப் போய்க்கொண்டிருந்தான். 'ஐயோ… இனிமே என்னத்த செய்வேன்? டவுனைச் சுத்தி யாருமே ஐஸ் வாங்க மாட்டேங்கறாங்கன்னுதானே கொஞ்சங்கொஞ்சமா நகர்ந்து, இப்போ பத்திருவது மைல்தூரம் தாண்டி சைக்கிள் மிதிச்சி, இங்க வந்து ஐஸ் விக்கிறேன். இப்போ அதுக்கும் வழியில்லன்னா நான் எங்கதான் போவேன். மகமாயீ!' மனதிற்குள் பலவாறு பொருமியபடி சைக்கிளை அழுத்திப் போய்க்கொண்டிருந்தான்.

சைக்கிள் அந்தக் கிராமத்தைக் கடந்து வீட்டை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. உச்சிவெயில் சுட்டெரித்துக்கொண்டிருந்தது. தாரைதாரையாக வியர்வை வழிந்துகொண்டிருந்தது. பசிக் கிறக்கம் காதை அடைத்தது. நெஞ்சு படபடவென்று அடித்தது. கண்கள் சொருக ஆரம்பித்தது. சைக்கிளை மிதித்துக்கொண்டிருந்த ஆறுமுகம், திடீரென சைக்கிளோடு கீழே விழுந்து, 'விசுக்… விசுக்…' என்று வலிப்பு வந்து இழுத்துக்கொண்டிருந்தான். கண்கள் கொஞ்சம் கொஞ்சமாக உள்ளே சொருகிக்கொண்டிருந்தது. வெள்ளை முழி தென்படலானது. நீண்டநேரமாகத் தகிக்கும் வெயிலில் அனாதையாகத் துள்ளிக்கொண்டிருந்தார் ஆறுமுகம். வாயிலிருந்து நுரை வந்துகொண்டிருந்தது. ஐஸ் பெட்டியிலிருந்து சரிந்துவிழுந்த ஐஸ்களெல்லாம் உருகிச் சாலையில் ஓடிக்கொண்டிருந்தன. அதனோடு சேர்ந்து ஆறுமுகத்தின் உயிரும் உருகி ஓடிக்கொண்டிருந்தது. வெயில் ஈவு இரக்கமின்றித் தகித்துக்கொண்டிருந்தது.

நீண்டநேரமாக அந்தவழியே வண்டி நடமாட்டமில்லாமலிருந்தது. வானத்தில் வட்டமடித்தபடியே காக்கைக் கூட்டங்கள் கரைந்துகொண்டிருந்தன. வாய்பிளந்து, வானை வெறித்துப் பார்த்தபடி கிடந்த ஆறுமுகத்தின்மேல் கேட்பாரற்று ஈக்கள் மொய்த்துக்கொண்டிருந்தன. "பாம்… பாம்… பாம்…" சத்தம் கேட்டு ஈக்கள் தெறித்துப் பறந்தன. பாதையில் உருகி ஓடிக்கிடந்த தண்ணீரின்மீது ஏறிப் பதித்து, அதன் தடங்களை அடுத்தடுத்துப் பதித்தபடியே அந்தக் குக்கிராமத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது, ஒரு செந்நிறக் கொக்கோகோலா வாகனம். ■

# கற்பதுவே.. கேட்பதுவே..!

## லிபி ஆரண்யா



**சில கவிதைகளை 'வாசிப்பைக் கோருகிற கவிதை' என்று முன்மொழிகிறோம் அல்லவா? உண்மையில் வாசிப்பைக் கோரும் கவிதையின் பொது அடையாளங்கள் எவை?**

எழுதப்படும் எல்லாக் கவிதைகளும் வாசிப்பைக் கோரி நிற்பவைதான். படைப்பு என்பது சிலுவையில் அறைதல் எனில் வாசிப்புதான் உயிர்த்தெழ வைக்கிறது. அகலிகை தன்னை உயிர்ப்பிக்கும் ஓர் வழிப்போக்கனுக்காகத்தானே கல்லெனக் காத்திருந்தாள். அரிசியில் ஒரு குருவியின் பெயரை எழுதுவதில் என்ன இருக்கிறது? பசித்த குருவியின் அலகுதானே அதை அர்த்தப்படுத்த முடியும். ஆகவே வாசிப்பே அமானுஷ்யம். வாசிப்பே ரட்சிப்பு. வாசிப்பே அர்த்தப்பாடு.

பொதுவாகக் கவிதையுலகில் கொண்டாடப்படும் வரிகள் எல்லாம் வாசிப்பின் நுட்பம் தொழிற்பட்டுத் துலங்கியவைதான். வாசிப்பைக் கோரும் கவிதையின் பொதுத் தன்மை எது என்று கேட்டால் முடிச்சவிக்கித்தனமே என்று சொல்வேன். ஒரு வகையில் படைப்பு என்பது சூட்சுமம் கொண்ட முடிச்சே. அரிசிச் சாக்கின் தையலைவிடவும் வாசிப்பைக் கோரும் கவிதையுண்டா என்ன?

**கவிதைக்குள் ஒன்று அல்லது சில கதைகள் இயங்குவதை நம் கவிதை மரபின் வழி அறிய முடிகிறது. ஆனால், இன்று எழுதப்படும் பலரது (பலரது என்பது உட்பொருள் கொண்டது) கவிதைகள் ஒரேயொரு நிலைத்த, உயிர்ப்பற்ற ஷாட்டில் நின்றுவிடுகின்றன. இப்படியானவை கவிதைகள் இல்லை எனக் கூறமுடியாது. இருப்பினும், இது குறித்து உங்கள் கருத்து என்ன?**

உங்கள் கேள்வி ஒரு வகையில் ஓவியத்திற்கும் புகைப்படத்திற்குமான புழங்குவெளி குறித்த உரையாடலைத் துவக்குகிறது. ஒரேயொரு நிலைத்த உயிர்ப்பற்ற காட்சியில் நின்றுவிடும் கவிதைகள் புகைப்படங்களை ஒத்தவை. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கதைகள் இயங்கும் சாத்தியம் கொண்ட கவிதைகள் ஓவியங்களை ஒத்தவை.

அதிகபட்ச சாத்தியங்களைக் கொண்ட ஓவியம் கூர்மையான அவதானிப்பையும் கூடுதல் அர்ப்பணிப்பையும் மேலதிகக் காத்திருப்பையும் கோருகிறது. முன்னும் பின்னும் கேமராக்கள் முளைத்த கைப்பேசிகள் காலத்தில் புகைப்பட வெட்டுக்கிளிகள் மேயாத இடங்களே இல்லை. அவர்கள் எடுத்த படங்களை அவர்களே பார்க்கவியலாத அதீதப் பெருக்கம் துயரமானது. அதே சமயம், இதைப் பேசுகிறபோது புகைப்படங்களில் உன்னதமானவையும் ஓவியங்களில் உருப்படாதவையும் இருக்கும் என்பதையும் மனதில் கொள்ளவேண்டும்.

**அரசை / சமூகத்தை / பண்பாட்டை / மனிதர்களை / வாழ்வை எல்லாம் பகடி செய்து எழுத முடிகிற கவிஞனுக்கு, அவனுடைய சொந்த மனதைப் பகடிக்குள்ளாக்கும்போது எழும் உணர்வெழுச்சி எப்படியானதாய் இருக்கும்?**

நீங்கள் பரமபதம் விளையாடி இருக்கிறீர்களா? பகடியின் அறங்களைப் புரிந்துகொள்ள அது பயன்படும். தாயம் விழுந்தால்தான் நீங்கள் பரமபத விளையாட்டில் உள்நுழைய முடியும். தாயம் என்பது சுய பகடிதான். சுயபகடிக்கு ஒப்புக்கொள்ளும் ஒருவர் பகடி விளையாட்டுக்குள் நுழையலாம். மற்றமை குறித்த பகடியில் அறம் அவசியமானது. சோழிகளை உருட்டும் அந்த மொழி விளையாட்டில் ஏணிகளும் உண்டு.. பாம்புகளும் உண்டு. பகடியின் அறம் உச்சிக்கு ஏற்றிவிடும். அதனால் உங்கள் காய், கனியும் கட்டத்தை அடையலாம். அறமற்ற பகடியோ உங்களைப் பாம்பின் வாயில் விழப்பண்ணி வாலிற்கு இறக்கிவிடும். நமக்கு விதிக்கப்பட்ட பயணம் லட்சியப்பூர்வமானதாகவோ, நெருக்கடியானதாகவோ, வலிமிக்கதாகவோ, அலுப்பூட்டுவதாகவோ இருக்கலாம். எதுவாயினும் உங்கள் பயணத்திற்கான வழிச்செலவாகப் பகடி இருக்கும். ஒருவகையில் எளிய அறங்களின் சில்லறைத்தனமே பகடி எனலாம்.

## பாலைவன லாந்தர்



**தமிழ்க் கவிதைச் சூழலின் சமகாலப் போக்கு எப்படி இருக்கிறது? சிறப்பு / பரவாயில்லை / படுமோசம். இந்த மூன்றில் நீங்கள் எதையேனும் ஒன்றைத் தேர்வு செய்து கருத்துரைத்தால் நன்று.**

பரவாயில்லை. சிறப்பு என்று சொல்ல இயலாத அளவுக்கு நேருக்கு நேராக எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன. பொதுவாக, பெரும்பாலான எழுத்தாளர்கள்

சொன்னதையே நானும் சொல்வதென்றால் சமீபமாகக் குறைந்து வரும் கவிதை வாசகர்களின் எண்ணிக்கை, ஒரு கவிதையைக் கையாளும் மெனக்கெடல்களின் பற்றாக்குறை, துரித உணவகம் போன்ற எதிர்பார்ப்பாளர்களின் வாசிப்பு, பெருகிவரும் கவிதை எழுத்தாளர்களில் எதைத் தேர்ந்தெடுப்பது என்ற குழப்பங்கள், இப்படி எல்லாத் தளங்களிலும் புகுந்துவிட்ட புறக்கணிப்பு அரசியல், கவிதைச் சூழலையும் விட்டுவைக்கவில்லை, தனி மனித உளவியல் தாக்குதல்களில் தொடங்கிச் சிறுசிறு குழுக்களாகவும் தங்களுக்குள் அரசியல் செய்யத் தொடங்கிவிட்டனர்.

ஒரு தரப்பினர் வியந்து பார்க்கும் ஒருவரை இன்னொரு தரப்பினர் பொருட்டாக மதிப்பதே இல்லையென்றால் இது எப்பேர்ப்பட்ட காழ்ப்புணர்ச்சி என்று உணர்ந்து கொள்ளுங்கள். இதையெல்லாம் கடந்து ஒரு எழுத்தாளன் தொடர்ந்து செயல்படுகிறான் என்பதே அவனின் வாழ்நாள் சாதனை. அதனால்தான், படுமோசத்தையும் தவிர்த்துப் பரவாயில்லை என்னும் பதிலைத் தருகின்றேன்.

**மறுக்கப்படும் கருத்துச் சுதந்திரம் அதிவேக வலிமையோடு திரும்ப வரும் என்பார்கள். கவிதையில் அதைச் சாதிக்க முடிகிறதா?**

முடிகிறது. இதற்குப் பாரதியாரை உதாரணமாகக் கொண்டுவர வேண்டிய அவசியமில்லை, சமகாலத் தோழர்களின் பக்கங்களைத் தொடர்ந்து வாசித்தாலே போதும். சமீபமாக நமக்கு மறுக்கப்பட்டவைகளை மட்டுமே எழுதிக்கொண்டிருக்கும் சக எழுத்தாளர்களையும் நாம் பெற்றிருக்கிறோம், பெண்ணியக் கோட்பாடுகள் ஒவ்வொருவருக்குமிடையில் வேறுபட்டாலும் அத்தளத்தில் கவிதைகள் பாடுபொருளாக இருக்கின்றன.

இனப்படுகொலைகள், பாலியல் வன்முறைகள், ஊழல் மோசடிகள் போன்ற செய்திகளில் சூடு ஆறியவுடன் கடந்துபோய்க் குற்றவாளிகள் சுதந்திரமாக வெளிவந்த பின்னரும் பாதிக்கப்பட்ட ஒற்றை மனிதனுக்கு ஆதரவாக எழுதப்படும் கவிதைகளையும் இத்துடன் இணைத்துக்கொள்ளலாம்தானே. நாக்குகளும் விரல்களும் அறுக்கப்பட்டாலும் அழியாத கவிதைகள் ஏராளமாக இருக்கின்றன. எனது வரிகள் உட்பட இக்கேள்விக்குப் பதிலாக சாட்சிகளாக பல உயிருடன் இருக்கின்றன.

என்றோ முடிந்துபோன உலகப்போர்களைக் கவிஞர்கள் அவரவரின் பாணியில் எழுதி வைக்கவில்லையா.. அதுபோல நூறு ஆண்டுகளுக்குப் பிறகு இன்றைய எழுத்துக்களை மறுக்கப்பட்ட கருத்துச் சுதந்திரத்திற்கு ஆவணமாகக் கொண்டு வரலாம்.

**கவிதை மற்றும் பிற படைப்பு ஊக்கங்கள் உங்கள் சொந்த வாழ்க்கையைச் சவாலானதாக வைத்திருக்கிறதா?**

ஆமாம். தொடக்கத்தில் எளிய கையாளுதலாகத் தெரிந்தாலும் நாளடைவில் என்னைச் சுற்றி எதிர்பாராத குழப்பங்களைச் சந்தித்து இருக்கிறேன். ஒற்றை உடலுக்குள் புகுந்துகொண்ட இரண்டு ஆன்மாக்களைப் போலத்தான் இந்த வாழ்வு நகர்கின்றது. எப்போது எதுவாக இருக்கிறேன் என்பது என்னை நானே பரீட்சித்துக்கொள்ளும் கேள்வி. பொதுவாகக் கூட்டத்தில் தனித்திருக்கும் மனதைத்தான் கவிதை தேர்ந்தெடுத்து மொழிபெயர்க்கும். ஆனால் இங்கே இரைச்சலும் ஆர்ப்பரிப்பும் நிறைந்த சப்தங்களை எழுதவேண்டி இருக்கிறது.

மூளைச்சூடாகி கண்கள் எரிந்து உறக்கமற்ற இரவுகளைக் கடந்து வெற்று மதிலை வெறித்து அமைதியாக இருந்திருக்கிறேன், பேசிக்கொண்டிருக்கும்போதே உறங்கியும் எழுந்திருக்கின்றேன். எல்லாமே அனுபவம்தானே.. இந்தக் குறைந்தபட்சச் சவால்கள் கூட இல்லையென்றால் எப்படி எழுதுவது.. சொல்லுங்க. என்னுடைய எதிரி அல்லது போட்டியாளன் என்று என்னையே நான் தீர்மானித்து வைத்திருக்கிறேன். ஒவ்வொரு செயலிலும் என்னைத் தோற்கடித்து என்னை வெற்றி பெறச் செய்வதைவிட எந்தச் சவாலும் பெரிதாகத் தெரியவில்லை.

இந்த வீட்டில்தான் நான் பிறந்தேன்
ஆனாலும்
இந்த வீடு எப்போதும்
எனக்கான வீடாக இருந்ததில்லை
எனது கற்பனை வீட்டை
மரங்களுக்கு நடுவே
நிர்மாணித்திருந்தேன்
அந்த வீட்டில்
பறவைகளுக்கும் வானத்துக்கும்
தடுப்புச் சுவர் இல்லாத
தனியறை ஒதுக்கியிருந்தேன்
நட்சத்திரங்கள் வந்து போக
நான் ஏற்படுத்தியிருந்த
பாதையைக் கூட
புறம்போக்கு இடத்தில்
இருப்பதாகக் கூறி
அப்புறப்படுத்திவிட்டார்கள்
அதிகாரிகள்
நல்லவேளை கையில்
நான் வைத்திருந்த ரோஜாவை
யாரும் பார்க்கவில்லை.
பார்த்திருந்தால்
காயம் உண்டாக்கும் ஆயுதம்
வைத்திருந்ததாகச் சொல்லி
கைது செய்திருக்கவும் கூடும்!

– உஸ்மான்

••

## தவணைக் கனவு

திணிக்கும் துணிகளால்
வயிறு உப்பித் தவிக்கும் அலமாரி
பலமுறை கால்களை மாற்றியதால்
நடுவில் வளைந்து
நக்கல் பண்ணும் கட்டில்
காயில் மாற்றி மாற்றி
களைத்துப்போனதால்
மெதுவாய் நகரும் மின்விசிறி
சில மாதங்களாகவே
சிம்னி விளக்காய்ச் சிணுங்கும்
எரிவாயு அடுப்பு
இனியும் ஆகாதெனச் சொல்லப்பட்டு
கருப்புவெள்ளை
புள்ளி காட்டும் கலர் டீவி
எல்லாமே
தவணைகளில்
வந்துசேர்ந்து நொந்துபோனவை.
குளிக்கும்போது கருத்துவிடுமென
கழற்றிவைத்த
கழுத்துச் சங்கிலியை மாற்றி
குண்டுமணித் தங்கமாவது
வாங்கித் தரவேணுமவளுக்கு
அடுத்த தவணையில்.

– காசாவயல் கண்ணன்.

••

பின் மதியத்தில்
அயர்ந்திருக்கும் என்மேல்
வெய்யில்
ஊர்ந்தபடி இருக்கிறது
துணுக்குற்று
தலையணையால்
அணைக்க முயல்கிறேன்
முடியாமல்
முழங்கால்களால் பொத்துகிறேன்
அதன்மேல் இரு கைகளைக் கொண்டும்
மூடிட எத்தனிக்கிறேன்
கையாலாகாமல் என் முகத்தால்
ஒளிக்க முற்படுகிறேன்
பின்பு ஒருவாறாக
வெற்றியோடு நிமிர்கையில்
ஒரு வழியாக வெய்யில்
ஊர்ந்து சென்றுவிட்டிருக்கிறது
நிசியில்
மீண்டும் ஊரத் தொடங்குகிறது
வெய்யில்.

– காயத்ரி ராஜசேகர்

படைப்பு
சமூகத்தின் இணைப்பு



# சுதந்திரக் கூத்து

## புது சரித்திரம்

விரைவில்..